ஸ்ரீராமஜெயம்.

# ஸ்ரீகிருஷ்ணஸ்வாமிதூது

## மூலமும் உரையும்.

இஃது,

வில்லிபுத்தூராழ்வாரால்

அருளிச்செய்தமூலமும்

காஞ்சிபுரம்

குமாரசுவாமிதேசிகர்

செய்தபுதியவுரைக்குமிணங்கச்

சரவணபுரம்

சண்முகமுதலியாரால்

பார்வையிடப்பட்டு

பு-ஏழுமலைப்பிள்ளையவர்களால்

தமது,

விவேகவிளக்க அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

௲௮௱௬௰௫௵.

1865

ஸ்ரீராமஜெயம்.

தந்தமுறியிலவர்வைத்த தயிர்பால்வெண்ணெயெட்டாமற் . *
குந்தியுரலின்மீதேறியிளங்கோவியர்முன்கூத்தாடி ............*
நந்தன்மனையில்சோதையிரு நயனங்களிக்கவிளையாடு ......*
மைந்தனிருதாளொருநாளு மறவாதாரேபிறவாதார்........*

இருக்கு - யசுர்-சாமம்-அதர்வணம் என்றுசொல்லப்பட்ட நாங்கு வேதங்களோடுமொன்றாகவைத்து ஐந்தாகவெண்ணப்பட்டதாய்த் தவசிரேஷ்டராகிய வேதவியாசர் வடமொழியில் திருவாய்மலர்ந்தருளியபடி பர்வதசிரேஷ்டமாகிய மேருவினிடத்தில் தேவசிரேஷ்டராகிய விநாயகமூர்த்தியானவர் தமது திருக்கரத்திலிருக்கும் வெண்கோட்டினாலெழுதியிருக்கின்றபிரகாரம் கவிசிரேஷ்டராகிய ஸ்ரீவில்லிபுத்தூராழ்வாரால் தமிழில்மொழிபெயர்க்கப்பட்ட ஸ்ரீமகாபாரதத்தில் (உத்தியோகபர்வத்தில்) ஸ்ரீகிருஷ்ணசுவாமியானவர் பாண்டவர்களுக்காகத் துரியோதனமகாராஜாவினிடத்திலே தூதுபோய் அவன் செய்தமோசங்களினின்று தப்பியீண்டருளிய சரித்திரமாகிய கிருஷ்ணன்தூதென்றுசொல்லப்பட்ட காவியத்திற்கு ஸ்தலசிரேஷ்டமாகிய திருக்காஞ்சியில் வசிக்காநின்றபுலவர்திலகராகிய குமாரசுவாமிதேசிகரால் தெளிவாக நூதனவுரைசெய்யப்பட்டு மூலமும்உரையுமாக அச்சிற்பதிப்பிக்கப்பட்டது.

இதனால் சகலமானபேர்களுக்கும் தெரியப்படுத்துகிறது என்னவென்றால், கும்பகோணம் - பெரியகடைத்தெருவில் - ம-ா-ஸ்ரீ - அப்பாவுசெட்டியார்வீட்டுத் திண்ணையின்பேரில் புத்தகவியாபாரஞ்செய்யும் - ம-ா-ஸ்ரீ - பெரியண்ணம்பிள்ளையிடத்தில் - தமிழ்-தெலுங்கு-கிரந்தம் - இம்மூன்றும் வேண்டியவர்கள் விலைசரசமாய் வாங்கிக்கொள்ளலாம்.

ஸ்ரீராமஜெயம்.

# ஸ்ரீகிருஷ்ணஸ்வாமி தூது.

## மூலமும் உரையும்.

### காப்பு - விநாயகஸ்துதி.

நீடாழியுலகத்துமறைநாலொடைந்தென்றுநிலைநிற்கவே ......... *
வாடாததவவாய்மைமுனிராஜன்மாபாரதஞ்சொன்னநாள் ........ *
ஏடாகவடமேருவெற்பாகவெண்கூரெழுத்தாணிதன் ............... *
கோடாகவெழுதும்பிரானைப்பணிந்தன்புகூர்வாமரோ ............ *

எ-து. நெடியகடல்சூழ்ந்தபூலோகத்திலே வேதம்நாலுடனேஐந்தாம்வேதமென்னப் பிரசித்தமாகநிலைநிற்கக் குறைவில்லாதமெய்த்தவத்தையுடைய வேதவியாசமகாமுனி மகாபாரதஞ்சொன்னநாளில் மகமேருமலையைக் கையேடாகப்பிடித்துத் தனது கொம்பை வெள்ளியகூராயுடைய எழுத்தாணியாகக்கொண்டு அந்தப்பாரதகதையை யெழுதிய விநாயகக்கடவுளைப்பணிந்து பத்திசெய்வாமென்றவாறு *

### சரஸ்வதிதுதி.

பொருப்பிலேபிறந்துதென்னன் புகழிலேகிடந்துசங்கத் ... *
திருப்பிலேயிருந்துவையை யாற்றிலேதவழ்ந்தபேதை .... *
நெருப்பிலேநின்றுகற்றோர் நினைவிலேநடந்தோரேன ...... *
மருப்பிலேபயின்றபாவை மருங்கிலேவளர்கின்றாளே ...... *

எ-து. பொதியமாமலையிலே சன்மித்துப் பாண்டியன் கீர்த்தியென்னும் பசும்பொற்சுருட்டிலேகிடந்து சங்கப்பலகையிலேயிருந்து வையையாற்றிலே திருஞானசம்பந்தர்விட்டஏட்டிலிடமாகஎதிரேறித்தவழ்ந்தபேதையாகிய சரஸ்வதி பின்பு நெருப்பிலேபோடப்பச்சோலையாய் வேகாமல்நின்று கற்றோர் நினைவிலேநடந்து ஆதிவரா

கமுகக்கொம்பிலேமருவிய பூமிதேவிமருங்கிலே இருக்குங்குழமண ப்பிள்ளையாக வளர்கின்றாள் அக்கலைமகள் எந்நாவிலேநிற்கும்படிக்கு நமஸ்கரிக்கிறேனென்றவாறு.

பாடற்றொகை.

தருமமெய்த்தருமனேவத் தாளிணைசிவப்பமாயோன் ... ...*
அரவுயர்கொடியோன்பக்க லழகுறநாடுவேண்டித் ........*
துரகதவிரதமேறித் தூதுபோய்மீண்டபாடல் ..............*
இரவியங்கதிர்போல்வீசு மிருசதத்தறுபத்தொன்றே .......*

எ-து. தருமமேயுருவாயிருக்கின்றதருமராஜன் தனக்காகத் துரியோதனனருகே தூதுபோகும்படி ஏவினதினாலே ஆதிபராபரவஸ்துவாகிய ஸ்ரீமந்நாராயணமூர்த்தி நாலுவேதங்களினாலுங்காணப்படாத பாதாரவிந்தஞ்சிவக்கக் குதிரைகட்டிய அலங்கிருதமான இரதத்தில் எழுந்தருளி அஸ்தினாபுரியென்னும் பட்டணத்திற்குப்போய் சர்ப்பக்கொடியோனாகிய துரியோதனனை அழகுபொருந்திய நாடுகேட்டு அவனுடனேயுத்தப்பிரசங்கம்பேசி மீண்டதைக்குறித்தபாடல் சூரியகிரணம்போலப்பிரகாசிக்கின்ற இருநூற்றறுபத்தொன்றும்-எ-று.

பேர்படைத்தவிஜயனுடன் மும்மைநெடும்பிறவியினும்பிரியா
னாகிச், சீர்படைத்தகேண்மையினாற் றேரூர்தற்கிசைந்தருளுஞ்
செங்கண்மாலைப், பார்படைத்தசுயோதனற்குப் படையெடே
னமரிலெனப் பணித்தகோவைக், கார்படைத்தநிறத்தோனைக்
கைதொழுவார்பிறவாழிக் கரைகண்டாரே... ... ... ..*

எ-து. பூலோகமெங்கும் சௌரியத்தினாலே பேர்படைத்தஅர்ச்சுனனுடனே இரணியவதைநிமித்தமாக எழுந்தருளினபோது பிரகலாதனாகியும், இராவணவதைநிமித்தமாக எழுந்தருளினபோது விபீஷணனாகியும், பூமிபாரந்தீர்ப்பதுகாரணமாக எழுந்தருளினபோது அர்ச்சுனனாகியும், இப்படி மூன்றவதாரத்திலும் பிரியாதவனாகியும், சீர்படைத்தநட்பினாலே அந்தஅர்ச்சுனனுக்கு ரதசாரதியாக இசைந்தருளிய செந்தாமரைக்கண்களையுடையமாலை பூமியையாளுகின்றதுரியோதனன்வந்து வேண்டினபடியினாலே அந்தப் பாரதயுத்தமுகத்திலே நான் ஆயுதங்கையிலெடுப்பதில்லையென்று உறுதிசொன்னதேவராஜனை மேகவண்ணனை ஸ்ரீகிருஷ்ணசுவாமியைக்கைதொழுதவர்கள் பிறப்பென்னுங்கடலைநீந்தி முத்தியாகியகரையைக்கண்டவர்கள் என்றவாறு. (௧)

[நூல்.]

ஞானமன்போடினிதுணர்த்து ஞானமுனிபகன்றதற்பின்சாம
பேத, தானதண்டமெனுநிருபர் தருமமுறையிற்புகலுந் தகு

திநோக்கித், தூநறுந்தண்டுளவோனைத் தூதுவிடுவதற்கெண்
ணிச்சுனைகடோறும்; ஏனலந்தண்கிரிப்பெருந்தே னிறைக்கு
மெழிற்குருநாடனியம்பினனே ................................ *

எ-து. தருமபுத்திரமஹாராஜன் வனவாசம் பன்னிரண்டுவருஷமும் அஞ்ஞாதவாசமொருவருஷமும் ஆகப்பதின்மூன்றுவருஷமுந்தொலைத்து உபலாவியமென்னும் பட்டணமேவந்திருந்து துரியோதனன்பக்கல் உலூகமகாமுனியான தன்னுடையபுரோகிதனை அனுப்பத் துரியோதனன் தன்னுடையதகப்பனான திருதராட்டிரனுடனே உசாவிக்கொண்டு சஞ்சயமாமுனியான தன்னுடைய புரோகிதனை அழைத்து நீர்போய் ஞானப்ரசங்கம்பண்ணித் தருமபுத்திராதியரை இன்னம் வனவாசமே போகத்தக்கதாகச் சொல்லிவாருமென்ன அந்தப்படியே புரோகிதன் ஆசிர்வதித்து ஞானப்பிரசங்கம்பண்ணி நீங்கள் இன்னந் தபசுபண்ணுவதே உறுதியென்றுசொல்ல அதைமறுத்துச் சத்துருசங்காரஞ்செய்து பிரதிக்கினைமுடிப்பேனென்று வீமசேனன் சொல்லியனுப்ப அந்தப்படியே சஞ்சயமகாமுனி போனபின்பு சாமபேததானதண்டமென்னும் இராசநீதி முறைமை வழுவாமல் சொல்லத்தக்கவொன்றறிந்து பரிமளம்பொருந்திய பரிசுத்தமாகிய துளபமாலையணிந்த ஸ்ரீகிருஷ்ணதேவரைத் தூதுவிடுவதற்கு எண்ணிச் சுனைகடோறுஞ் செந்தினையையுடைய தண்ணியமலர்களிலிருந்து தேனை நிறைக்கின்ற குருநாட்டுக்கதிபதியான தருமபுத்திரமகாராஜன் சொல்லத்தொடங்கினான்-எ-று. (உ)

செஞ்சொன்முனிசஞ்சயனுக் கியாமுரைத்தகருமமுமுன் சொ
ன்றகாலை, அஞ்சொன்முனிபுரோகிதனுக் கவனிசைத்தகருமமு
நீயறிதியன்றே, நஞ்சுதனைமிகவருந்தி நன்மருந்துமந்திரமும்
விரைந்துநாடாத், துஞ்சினர்தங்களைப்போல விருக்குமதோயா
ர்மனத்து மிருக்குஞ்சோதி ................................ *

எ-து. செவ்வையான சொற்போலே சொன்ன சஞ்சயமகாமுனிக்கு நாம்சொன்னவசனமும் நாமனுப்ப முன்போகிற உலூக மகாமுனியான புரோகிதனுடனே துரியோதனன் அப்போது பேசினவசனமும் தேவரீருடைய திருவுளமேயறியுமல்லவோ விஷத்தைக்குடித்து அதிதீர நல்லமருந்தும் மந்திரமும் கடுகவிசாரியாமல் வீணிலேஜீவனைவிட்டவர்களைப்போல நாங்கள் போகாதபடிக்கு ஒருபுத்தி எங்களுக்குப்போதிக்கவேண்டும் சர்வலோகத்தார்மனதிலுமிருந்து விளையாடுகின்ற சோதிசொரூபரேயென்று பின்னுஞ்சொல்லுகிறான் தருமராஜனென்றவாறு. (௩)

அருஞ்சமரம்புரியும்வகை யவர்துணிந்தாராமாகி லதுநன்றியா
மூற், பெருஞ்சமரம்விளைக்குமது கடனன்றென் றருள்வெள்
ளம்பெருகக்கூறும், பொருஞ்சமர நெடுமுரசப் பூங்கொடியோ
ன்றனை நோக்கிப் புயல்போல்வாண, திருஞ்சமரந்தொலைத்தபி
ராணிளைஞராயுமுடனிருத்தியியம்பினனே .................*

ஏ-து. குருக்ஷேத்திரபூமியிலே அரியயுத்தஞ்செய்யத்தக்கதாகத் துரியோதனனாதியர் சம்மதித்ததேயுண்டாகில் அதுநல்லது நாம்முந்தி யுத்தஞ்செய்யச் சம்மதித்துச்சொல்லுகிறது முறைமையல்லவென்று கிருபாவெள்ளம் பெருகும்படி சொல்லியபொருதுகின்ற நெடியமுரசக்கொடிபடைத்த தருமபுத்திர மகாராஜனைப்பார்த்து மேகம்போன்ற ஆயிரம்புஜகிரியடைத்த வாணாசுரனைச்செயித்த ஸ்ரீகிருஷ்ணஸ்வாமியானவர் வீமசேனன்-அர்ச்சுனன் - நகுலன்- சகாதேவனென்று சொல்லப்பட்ட இளைஞராயுங்கூடவைத்துக்கொண்டு இவ்வாறுசொல்லினார்-எ-று. (௪)

செய்வராலினமுகளுந் திருநாடுபெறநினைவோ சென்றுமீளப்*
பைவராயருங்கானிற் பயின்றுதிரிதரநினைவோ பகைத்தபோரி
ல், உய்வாரொனவினாவி னுருத்தெழுந்துபொரநினைவோவுண்
மையாக, ஐவராமவனியர்க்கு நினைவேதென்றருள்புரிந்தானம
ரர்கோமான் ........................................*

எ-று. வயலெங்கும் வராலினங்கள் குதித்து விளையாடுகின்ற சிறந்த குருநாடுவாங்கிக்கொண்டு அரசாட்சிசெய்ய நினைவோ, இங்ஙனம் பழையபடியே துன்பமுடையவராய் வனத்திலிருந்து திரியநினைவோ, அல்லது பகைத்துச்செய்கின்ற யுத்தத்தில் பிழைப்பார் யாரென்று சொல்லத் துரியோதனனாதியனாப் பிரதிக்கினைப்படியே கோபித்து பொருது செயிக்கநினைவோ- ஐவராகிய உங்க ளொவ்வொருவருக்குமிருக்கின்ற உண்மையான வெண்ண மென்னவென்று திருவுளம்பற்றினார் ஸ்ரீகிருஷ்ணதேவர்-எ-று. (௫)

வயிரமெனுங்கடுநெருப்பை மிகமூட்டிவளர்க்கிலுயர் வனக்கா
டென்னச், செயிரமரில்வெகுளிபொரச் சேரவிருதிறத்தோரு
ஞ்சென்று மாள்வோங், கயிரவமுந்தாமரையுங் கமழ்பழனக்கு
ருநாட்டிற்கலந்துவாழ, வுயிரனையாய்சந்துபட வுணர்த்தருளெ
ன்றுரைத்தி னுருவம்போல்வான் ..............................*

எ-று வைராக்கியமென்னுங் கடுமையிய நெருப்பை அதிகமாகமூட்டி வளர்த்தால் தானே யிலைழந்தெரிந்து மாய்ந்துபோகின்ற மூங்கிற்காடென்றுசொல்லும்படி குற்றம்பொருந்திய யுத்தத்திலே கோபமூண்டு இரண்டுதிறத்தோரும் ஒரோதரமாய் மாண்டுபோவோம் அப்

படிவாராமல் செவ்வல்லியுந் தாமரையும் பரிமளிக்கின்ற வயல்கள் சூழ்ந்த குருநாட்டிலே அம்மலர்களைப்போல நாங்கள் ஒருமித்துக்கூடிவாழும்படி எங்களுயிரனையொத்த ஸ்ரீகிருஷ்ணதேவரே, நீர் தூதுபோகுந்த அவர்களையும் எங்களையும் கூட்டியருளவேண்டுமென்றார் தருமத்தின் வடிவம்போல விளங்கிய தருமபுத்திரர்-எ-று. (௬)

அரவுயர்த்தோனுடன்மறுசூதாடிநீர்வென் றவன்றானவன்றான்
சொன்ன, விரதமொழிதவிராமல் வெங்கானம்போய் மீண்டீர்
வெய்யோனுங்கள், குருநிலத்திற்பாதியுமே கொடாதிருந்தாலவ
னக்கவனைக் கொன்றுபோரில், விருநிலத்தையாளவினித் துணிவ
தேகடனென்றானெம்பிரானே ........ ... .................... *

எ-று. சர்ப்பக்கொடிபடைத்த துரியோதனனுடனே நீங்கள் மறுசூதாடி வென்றபோது அவன் சொல்லியசொற்றவறாமல் பன்னிரண்டு வருஷம்வனவாசமும் ஒருவருஷம் அஞ்ஞாதவாசமும் போய்வந்தீர்கள் வெய்யவனாகிய அந்தத்துரியோதனன் உங்களுடைய பூமியிலே பாதியைக் கொடாமற் போனானேயாகில் அவனைக்கொன்று போர்முகத்திலே பெரியபூமியை ஆளுகைக்குத் துணிவதே முறைமையென்றார் ஸ்ரீகிருஷ்ணதேவர்-எ-று. (௭)

குரவனையுங்கிளைஞரையுங் குலத்துரிய துணைவரையுங் கொன்று
போர்வென், றரவநெடுங்கடலாடையவனிபலாந் தனியாளுமர
சுதன்னில், காவுறையுமனைத்தாதை முனிந்துரைத்த மொழிப்
படியேகானந்தோறும், இரவுபகல்பலமூலசருகுநுகர்ந்துயிர்
வாழ்தலினிதுநன்றே .... ... ... ... ... ... .. *

எ-று. ஆசாரியனையுஞ் சுற்றத்தாரையுங் குருகுலத்துக்குரிய அண்ணன்றம்பிமாரையும் இன்னும் பாட்டன் மாமன் மைத்துனன் முதலானபேரையுங்கொன்று போரில்வென்று சப்திக்கின்ற நெடியகடலாடையையுடைய பூமிமுழுவதுந் தனியேயாளுகிற அரசைப்பார்க்கிலும் கபடந்தங்கிய மனமுடைய பெரியதகப்பனார் புரோகிதருடனேசொல்லி அனுப்பியசொற்படியே வனந்தோறும்போய் இரவுபகலுங் கனிகாய்கிழங்கு சருகுகளைப்புசித்துப் பிழைத்துக் காலம்போக்கிறது மிகவும்நல்லதென்றார் தருமபுத்திரர்-எ-று. (௮)

கோதிலாதீர்நமொழிகூறுதலுமாதியான் கூறலுற்றான், .. *
மோதமருங்கிளைத்துநீர் மொய்த்தபெருங்கானகத்தே முடுகிச்
செல்கின்றீர்; பூதலத்தோராசரோ புகன்றபெருவெஞ்சினமும்
பொய்த்திடாதோ, நீங்போவெவ்வனவாசத்தா [illegible]
தருமனிசைந்திலன் ... ..... ..... ... ... ... *

எ-று. பழுதில்லாத தருமபுத்திரமகாராஜர் இந்தவசனம் சொன்ன மாத்திரத்திலே ஆதிமூலமான ஸ்ரீகிருஷ்ணதேவர் சொல்லுவார் தருமபுத்திரனே நீங்கள்மோதுகின்றயுத்தத்துக்குத்தோற்று நெருங்கியபெரியவனத்தினிடத்திலே வாசம்பண்ணவிலாந்துபோனால் பூலோகத்திலுண்டானபேர் தாயாதியுடனே யுத்தம்பண்ணிச் செயிக்கமாட்டாமற்போனார்களென்று ஏசமாட்டார்களோ தம்பிமார் சொன்னசபதம்பொய்யாய்ப்போகாதோ இது நீதியாகுமோவென்றுசொல்ல அது கேட்டுப் பின்னுஞ்சொல்லுவார் தருமபுத்திரர்-எ-று. (௬)

நீதூதுநடந்தருளி யெமதுநினைப்பவர்க்குரைத்தா லினைவின்
வண்ணந், தாதூதுபளிமுறலுந் தண்பதியுந்தாமுந்தான் று
ராகில், மீதூதுவளைக்குலமும் வலம்புரியுஞ்சமுழங்க வெய்ய
காலன், மாதூதர்மனங்களிக்கப் பொருதெனினும்பெறுவனி
துவசையுமன்றே ... ... ... ... ... ... ... *

எ-று. ஸ்ரீகிருஷ்ணஸ்வாமி தேவரீர் எங்கள்நிமித்தம் துரியோதனனிடத்து தூதுசென்று எங்களுடைய நினைவின்பிரகாரம் அவனுடனே பேசினால் அந்தப்படியே மகரந்தப்பொடியையூதி வண்டுகள் முரலுகின்ற குளிர்ந்தபூஞ்சோலைகள் சூழ்ந்தநகரமும் பங்குங்கொடாமற்போனானாகில் அதற்குமேல் ஊதப்பட்ட வெற்றிச்சங்கங்களும் வலம்புரிச்சங்குகளும் வீரசாளம் வீரகொம்புமுதலிய நானாவித வாத்தியங்களுமுழங்கக் கொடியயமதூதர் மனங்களிக்கப் போர்க்களத்திலே யுத்தஞ்செய்தாலும் தாயாதிபட்சத்திலுள்ள எங்கள் பூமியைப்பெறுவேன் இது அபகீர்த்தியன்றென்று பின்னுஞ் சொல்லுவார் தருமபுத்திரர்-எ-று. (௭)

முந்தூர்வெம்பணிக்கொடியோன் மூதூரிடந்துழவர் முன்
னின்றேறும், நந்தூரும்புனநாட்டின் நிறம்வேண்டும்நாடொன்
றுநல்கானெனில், ஐந்தூர்வேண்டவையிலெனி லைந்தில்வேண்ட
வைமறுத்தா லடுபோர்வேண்டே, சிந்தூரத்திலதநுதற் சிந்துரத்
தின்மருப்பொசித்தசெங்கண்மாலே ......................... *

எ-து. முந்தியூருகின்ற சர்ப்பக்கொடியுடைய துரியோதனன்பதியான அஸ்தினாபுரத்திற்குத் தேவரீரெழுந்தருளிப்பள்ளர்முற்றங்கள்தோறும் சங்கினங்களேறுகின்ற நீர்வளம்பொருந்தியநாட்டைக்கேளும் அதுகொடானாகில் எங்களைந்துபேருக்கும் இந்திரப்பிரஸ்தம்-எமப்பிரஸ்தம்-அவந்தி-வாரணபுரி-அஸ்தினாபுரி-என்கின்ற ஐந்தூருங்கேளும் அவை இல்லையென்று மறுத்தானாகில் ஐந்து மனைகேளும் அவையும் இல்லையென்றால் யுத்தத்திற்குச் சம்மதித்துவாரும் சிந்தூரத் திலதம்

பொருந்தியமதயானைக்கோடு முறித்தவீரம்பொருந்திய சிவந்தக
ண்களையுடைய மாயனேயென்றார் தருமபுத்திரர்-எ-று. (௰௧)

மூத்தோர்மற்றிவையுரைப்ப விளையோன்வெஞ்சினமனத்தின்
மூளமூள, நாக்தோமிலுரைபதறக் கதுமெனவுற்றெழுந்திறை
ஞ்சிஞாலமெல்லாம், பூத்தோனைபூந்தவிசிற் பூவைபுணர்மணி
மார்பாபுன்மையாவும், தீர்த்தானேயூனமிலா மானமிலாது
ரைப்பதற்கென்செய்வதென்றான் ........................ *

எ-து. மூத்தவராகிய தருமபுத்திரமகாராஜர் இந்தவசனஞ்சொல்ல
வீமசேனன்கேட்டு அவன்மனதில்கோபம்அதிகரிக்கநாவினிடத்தி
லேகுற்றமில்லாதசொற்கள்பதறச் சீக்கிரத்திலவந்துஎழுந்து ஸ்ரீகிரு
ஷ்ணதேவனை ஸ்துதித்துப் பூலோகமுழுதும்உண்டாக்கினவனை ப
த்மாசனத்தி லிருக்கின்ற மகாலட்சுமி பொருந்திய கௌஸ்துவாபர
ணந்தரித்தமார்பையுடையவனே நம்பினபேர்குறைவுகளைத்தீர்த்தவ
னே.குற்றமற்ற அண்ணுவியார் மானமில்லாமற்சொல்லுவதற்குநான்
செய்வதென்னென்று பின்னுஞ்சொல்லுவான் அந்த வீமசேனன்.()

விரிகுழற்பைந்தொடிநாணி வேந்தவையின்முறைபிழைநாள் வெ
குளேலென்று, மரபினுக்குநமக்குமுலகுள்ளளவுந்தீராதவசை
யேகண்டாய், எரிகழற்கானகமகன்று மின்னமும்வெம்பகைமு
டிக்கவிளையாநின்றாட், அரவுயர்த்தோன்கொடுமையினுமரசு
யர்த்தோயுனதருளுக்கஞ்சினேனே .............................. *

எ-து. விரிந்தகூந்தலையும் பசியவளையலையுமுடைய துரோபதிநாண
மடைந்து - ௲-லக்ஷத்து-௱௱த-பட்டவர்த்தனரும், ௱-லக்ஷத்து-௱௱த
மகுடவர்த்தனரும், பதினெண்பூமி மன்னர்மண்டலீகரும், ௫௬-தே
சத்து இராஜவர்க்கமும், வீஷ்மாசாரி-துரோணாசாரி-கிருபாசாரி-அஸ்
வத்தாமர்-கர்ணன்-சகுனி-சல்லியன்-அதிரதர்-மகாரதர்-சமரதர்-முத
லிய சமஸ்தபேரும் நிறைந்த ராஜசபையிலே அபிமானபங்கம்பண்
ணுவித்தநாளில் தஞ்சமில்லாதபேர்போலே முறையிட்டபோது நீ
கோபியாதேயென்றுசொல்லி குருகுலத்துக்கும்நமக்கும் பூலோக
முள்ளளவுந் தீராதபழிப்புவசனமுண்டாக்கினீர் அதுவுமல்லாமல்கள்
ளக்கவறுகொண்டு சூதாடி தீப்படுகின்ற காட்டே போகச்சொல்லிவிட
அதைநீங்கியும் இந்தப்பகையைமுடிக்க இளைக்கிறீர் ஆகலாமேல து
ரியோதனனுடைய கொடுமையைப்பார்க்கிலும் தருமபுத்திராஉம்
முடைய கிருபைக்கு மிகவும்பயந்தேனென்று பின்னுஞ்சொல்லுவா
ன்வீமசேனன்-எ-று. (௰௩)

காளுளவுனைவிடுத்த கண்ணிலாவருளிலிதன் காதன்மைந்தன் *
தாருருந்தரணியெல்லா மொருகுடைக்கீழ் நீயாளத் தருவனின்
று, மேனுணம்முரிமையறக் கவர்ந்த பெருந்துணைவனுனை வெ
றுதலின்னாம், வாளுளவானவர்கோன் றன்பதமற்றவற்றனக்
கேவழங்குவேனே ...... ...... . ........................*

எ-து. உம்மை வனவாசம்போகச்சொன்ன கண்ணில்லாத திருதராட்டிரனுடைய ஆசையிருந்த குமாரனை துரியோதனன் தாருருகின்ற பூலோகமெல்லாம் ஒருகுடைக்கீழ் இன்றைக்கே நீராளத்தருவேன் அதுவுமல்லாமல் முன்னே நம்முடைய ஆட்சியான நாட்டைக் கைக்கொண்ட அந்தத் துரியோதனன் தேவரீரை வெறுத்து விடாதபடி அவனுக்கு வீரசொர்க்கத்தை யாளும்படி இந்திரபதத்தைத் தருவேனென்று பின்னுஞ் சொல்லுவான் வீமசேனன்-எ-று (௧௪)

போர்முடித்தானைபொருது புலம்புறுசொற்பாஞ்சாலி பூந்த
ண்கூந்தல், கார்முடித்தானிளையோன்முன் கழறியவஞ்சினமுமு
டித்தான் கடவுட்கங்கை, நீர்முடித்தானிரவொழித்த நீயறியப்
பூதலத்தினிலைநின்றோங்கும், பேர்முடித்தானிப்படியே யார்மு
டிப்பாரிவனுடனே பிறந்தேனென்றான் .. ... ... .. *

எ-து. ஸ்ரீகிருஷ்ணதேவரே எங்களண்ணாவியார் துரியோதனனுடனே யுத்தஞ்செய்துமுடித்தார் மேகம்போன்றகூந்தலையும் புலம்புகின்ற சொல்லையுமுடைய துரோபதிமுடிக்கச்செய்தார் தம்பிமார்சபையிலே பேசியசபதங்களை முடிப்பித்தார் தெய்வத்தன்மை பொருந்தியகங்காசலமுடித்த உருத்திரதேவர்கையிலே பிரமகபாலங்கொண்டு இரப்பதைத் தவிர்த்தருளிய உம்முடைய சித்தமறிய பூலோகத்திலே நிலைநின்றுயர்ந்த கீர்த்திமானென்னும் பேர் பிரசித்தமாகமுடித்தார் இப்படி யாவர் முடிக்கப்போறார்கள் இவருடனே பிறந்த நான் கீர்த்திபெற்றது போதும் போதுமென்று பின்னுஞ் சொல்லுவான் வீமசேனன்-எ-று. (௧௫)

அணிந்துவருஞ்சமரிலெதிர்ந் தாவியத்தோனுடனரசருடலமெ
ல்லார், துணிந்திரண்டுபட்டபொருது தொல்லையுலகரசாளத்
துணிவதல்லால், தணிந்தறமுங்கிளையுறவுங் கொண்டாடித்தானி
னைந்தனித்துறுதவிப், பணிந்திரந்துபுவிபெற்றுண் டிருப்ப
தற்கே துணிகின்றான் பட்டபாடே ... ... ... ... ...*

எ-து. போர்க்கோலங் கொண்டுவருகிற பெரியயுத்தத்திலே யெதிர்த்து துரியோதனனுடனே எதிர்த்த அரசர்களுடைய சரீரங்களெல்லாம் இரண்டுதுண்டாகும்படிப் போர்செய்து பழைய பூலோகமுழுதும் அரசாட்சிசெய்யத் துணிவதல்லாமல் பொறுமையைக்கொண்டு தரு

மத்தையுங் கிளையுறவையும் பாராட்டி இன்னம் ஒப்பற்ற தூதுவிட்டு அவனை வணங்கிப் பூமியைபாலித்துப் பெற்றுக்கொண்டு சௌக்கிய மாகப்புசித்திருக்கவே யென்னுகிறார் தருமபுத்திரமகாராஜர் குருகுலம்பட்டபாட்டை என்னசொல்லுவேனென்றான் வீமசேனன் -எ-று.

பரிவுடன்மற்றிவைகூறும் பவனகுமாரனைமலர்க்கை பணித்து
நோக்கிக், குருகுலத்தோர்போரேறே குற்றமதுபார்க்குங்கால்
சுற்றமுண்டோ, ஒருகுலத்திற்பிறந்தார்க ளுடன்வாழும்வாழ்
வினைப்போலுறுதியுண்டோ, இருவருக்கும்வசையன்றோவிரு
நிலங்காரணமாக வெதிர்ப்பதென்றான் ... ... ... *

எ-து. இப்படி பரிவாகச்சொல்லிய வாயுபுத்திரனாகிய வீமசேனனை மலர்போன்ற கையமர்த்திப்பார்த்துக் குருவம்சசிகாமணியேகுற்றம் பார்க்குமிடத்திலே சுற்றமுண்டோ ஒருகுலத்திலேபிறந்த அண்ணன்தம்பிமாருடனேகூடி வாழும் வாழ்வினைப்போல் வேறொருஉறுதியுண்டோ பெரிய விப்பூமியைப்பெறுவது காரணமாக எதிர்ப்பது நம்மிருவருக்குங் குற்றமல்லவோவென்றார் தருமபுத்திரமகாராஜர்.()

உரிமையுள தம்பியர்களுணர்வறியாமையினவைக்கணுரைத்தமா
ற்றம், பரிபவமோகேட்டோர்க்குப் பரிபவமென்பதுபிறராற்
பட்டாலன்றோ, கருதிலதுமற்றெவர்க்கு மொவ்வாதோகண்ம
லரிற் கைபடாதோ, பொருதொழிலுங்கடைநிலத்திற் கிடக்க
தேயெனமொழிந்தான் புகழேபூண்பான் .. ... ... *

ஏ-து. உரிமையுள்ள தம்பிமார்கள் அறியாமையினாலே சபையிலே சொன்னவார்த்தைகள் நமக்குஇழிவையுண்டாக்குமோ இழிவென்பது அன்னியராற் சொல்லப்பட்டாலல்லவோ அதுநினைக்குமிடத்தில் ஒருவருக்கும் பொருந்தாதோ கண்மலரிற் கைப்பட்டாலந்தக்கையைத்துணிக்கலாமோ யுத்தமும் பின்னடியிருக்குமென்றார் கீர்த்தியையேதரிக்கின்ற தருமபுத்திர மகாராஜனென்றவாறு. (௰அ)

சூடுகின்ற துழாய்முடியோன் சுரருடனே முனிவர்களுஞ்சுருதி
நான்குந், தேடுகின்றபதஞ்சிவப்பத் திருநாடுபெறத்தூது செ
ல்லவேண்டாம், வாடுகின்றமடப்பாவை தன்வரமுமென் வரமு
ம்வழுவாவண்ணங், கோடுகின்றமொழிபலவும்பாவலனைத்தூது
விடுகவிளிக்கொற்றவேந்தே ...... ... ..... ..... ...*

எ-து. துளபமாலையணிந்த ஸ்ரீகிருஷ்ணதேவரானவர் தேவர்களும் முனிவர்களும் நாலுவேதங்களும் இன்னந்தேடுகின்றபாதஞ்சிவப்பநடந்து நம்முடையதிருநாடு பெறும்பொருட்டு-தூதுசெல்லவேண்டாம் வாடுகின்ற துரோபதியினுடைய பிரதிக்ஞையும் எம்பிரதி

ச்சினையுந் தப்பாதவிதந் துரியோதனனிடத்தில் என்னைத்தூதாக அனுப்பும் தருமபுத்திரனோ என்றான் வீமசேனனென்றவாறு. (௰௧)

மலைகண்டதனவெங்கை பவர்த்தண்டின் வலிகண்டுமகவான்
மைந்தன், சிலைகண்டுமிருவர் பொருந்திறல்கண்டுமெமக்காகத்
திருமாலின்ற, னிலைகண்டுமிவள்விரித்தகுழல்கண்டுமிமைப்ப
ளவிமைநேர்தம்மைக், கொலைகண்டுமகிழாம லவன்குடைக்கீழு
யிர்வாழக்குறிக்கின்றாயே ... ... ... ... ... ... *

எ-று. மலையைக்கண்டதென எங்கையிலிருக்கின்ற தண்டாயுதத்தினுடையபிரபலங்கண்டும் அர்ச்சுனனுடையகாண்டீபத்தின் வலிமைகண்டும் நகுலசகாதேவருடைய வல்லமைக்கண்டும் நமக்குச் சகாயபாச ஸ்ரீகிருஷ்ணதேவரிருக்கும்நிலைகண்டும் இந்தத்துரோபதி விரித்த அலகபாரங்கண்டும் ஒருநிமிஷமாத்திரத்தில் துரியோதனுகியவைச் சர்வசங்காரம்பண்ணி மகிழ்ச்சி யடையாமல் பகையாளி குடைக்கீழ்வாழும்படிக் குறித்திருக்கிறீர் தருமபுத்திரனே யென்று பின்னுஞ்சொல்லுகிறான் வீமசேனனென்றவாறு. (௨௰)

வெம்புயவீமனும் வெகுண்டு மீண்டுமிவை யெடுத்துரைப்ப
மேகமேனிப், பைம்பொனெடுந் தனித்திகிரிப்பரந்தாமன்கரு
ணையுடன்பரிந்து நோக்கி, யம்புவியின்முன் பிறந்தோ ராஜ
நெறிமுறை யுரைத்தாலுங்கேளாமல், தம்பியருமறுப்பரோத
விலவனிக்கடுங்கோபந் தணிகவென்றான் ... ... ... ......*

எ-று. வெப்பப்பெற்றமனமுடைய வீமசேனனுங் கோபித்துமறுபடியும் இவ்வசனங்கள் சொல்ல மேகம்போன்ற திருமேனியும் பசியபொன்போன்ற நெடியஒப்பற்ற சக்கராயுதமுமுடைய ஸ்ரீகிருஷ்ணதேவர் கிருபையுடன்பரிவுகொண்டு பார்த்துப் பூமியிலேமுன்பிறந்ததமையன்மார் இராஜநீதிமுறைமைசொன்னால் அதைக்கேளாமல் தம்பியானபேர்மறுப்பார்களோ தன்மைபெற்றவீமசேனனே இனிகடியகோபத்தை கழிக்கக்கடவாயென்றுதிருவுளம்பற்றினர் .. ()

மைக்காளமுகிலூர்தி வானவர்கோன் றிருமதலைவணங்கிநின்று,
முச்சாலங்களுமுணருமுகுந்தனுக்குமுதல்வனுக்குமொழிந்தா
ன்மன்னே, அக்காலம்பொறுத்தலலா மையாமலின்னமிரு
ந்தறமேசொன்னாய், எக்காலம்பகைமுடித்துத் துரோபதியுங்கு
ழன்முடிக்கவிருக்கின்றாளே. ... ... ... ... ... .. *

எ-று. மைபோலுங்கரியமேகவாகனனான தேவேந்திரனுடையகுமாரனான அர்ச்சுனன் வணக்கஞ்செய்துநின்று இறந்தகாலம்நிகழ்காலம் எதிர்காலமென்னும் மூன்றுகாலங்களையுமறியும் ஸ்ரீகிருஷ்ணதேவருக்கும் தருமபுத்திரருக்குஞ் சொல்லுகின்றான் அத்தமையனில் அந்த

ச்காலத்திலே துரியோதனன்பண்ணின குற்றங்களைப்பொறுத்தபொ
றுமையெல்லாம்போதாமல் இன்னமிருந்து தருமத்தையேசொல்லி
னால் இனி எந்தக்காலதத்திற் பகையைமுடித்துத் துரௌபதையுங் கூ
ந்தலைமுடிக்கவிருக்கின்றானென்று பின்னுஞ்சொல்லுவான்-எ-று ()

தேவராயினும்பழையதயித்தியராயினுமற்றுஞ்செப்புகின்றோ
ர், யாவராயினுமெதிர்ந்தோ ருயிருணவென்றிருப்பதுவாமெ
ன்கைவாளி, மூவராயவர்களுக்கு முதல்வனாகியமூர்த்திமுகிறோ
ய்பூத, மீவராலுகளும்வயற்குருநாடேனிவனவன்பால்வேண்டு
மாறே .. ... ... ... ... ... ... ... ... ...*

எ-து. தேவர்களானாலும் பழையவசுரரானாலும் பின்னுஞ்சொல்லு
கின்றவலிமைபெற்றவர் எவர்களானாலும் எதிர்த்தபேர்களுடைய
வுயிரைத் தனக்குப்புசிப்பென்றுநினைத்திருப்பது என் கைபாணமா
னது திரிமூர்த்தியானவர்களுக்குமுதல்வராகிய ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி
யே மேகந்தோய்கின்றசமூகின்மேல் வராலினம்பாய்கின்ற கழனிக
ள்சூழ்ந்தகுருநாட்டை என்னநிமித்தந்தருமபுத்திரர் துரியோதனனி
டத்தில்வேண்டுகிறதென்றுபின்னுஞ்சொல்லுவான் அர்ச்சுனன்-எ-று

தீண்டாதகற்புடைய செந்திருவைத்துகிலுரியச் செயலொன்றி
ன்றி, நீண்டோனேகரியோனேநிமலாவென்றரற்றினளாய்நின்
றுசோர, மாண்டார்போலதுகண்டு மன்னவையில்யாமிருந்த
மாசுதீர, வேண்டாமோவேண்டுவது மேம்படுநல்லறமேயோ
வேந்தர்வேந்தே ... ... ... ... ... ... ... ...*

எ-து. அக்கினியைப்போல்தீண்டப்படாத பதிவிரத்தியமுடைய து
ரௌபதியைச் சபையிலே துரியோதனன் துற்சாதனனைவிட்டுத்துகி
லுரிந்தபோது அவர்ஒருசெயலு மில்லாதவர்போல் நெடியவனேநீ
லவண்ணனே நிர்ம்மலசொரூபனேயென்று முறையிட்டவளாகிநின்
றுசோர்வையுடைய நிர்ச்சீவரானபேர்போலே அதைக்கண்டும் இரா
ஜசபையிலே யாங்களைவருமிருந்த குற்றந்தீரவேண்டாமோ இன்ன
ம்இரப்பதுமேம்பாடுபெற்றநல்லதருமமாகுமோ மன்னர்க்குமன்ன
வனாகியதருமபுத்திரனேயென்று பின்னுஞ்சொல்லுவான் அர்ச்சுனன்

பொன்னுருந்திகிரியினன்போனாலும்புகழ்வேந்தன்புகன்றவெ
ல்லாஞ், சொன்னாலுமவன்கேளான்விதிவலியாற் கெடுமதிகண்
டோன்றானன்றே, எந்நாளுமுவர்நிலத்தி மல்விளைவித்திடினு
ம்விளைவெய்திடாது, பன்னாகந்தனக்கமிர்தங் கொடுத்தாலும்
விடமொழியப்பயன்கொடாதே .... ... ... ...*

எ-து. பொற்பிரகாசம்பொருந்திய சக்கரத்தையுடைய ஸ்ரீகிருஷ்ண
தேவர் தூதாகப்போனாலும்புகழையுடைய தருமபுத்திரர்சொன்ன

னாத்தைகளெல்லாஞ்சொன்னாலும் அந்தத்துரியோதனன்கேளான் விஷயினுடையவலிமையாலே மதிகண்ணனுக்குந்தோற்றாது எந்தநாளுங் களர்நிலத்திலே நல்லவிதைகளைவிதைத்தாலும் விளையமாட்டாது. படத்தையுடையசர்ப்பத்திற்குப் பால்கொடுத்துவளர்த்தாலும்விஷத்தையல்லாமல் வேறொருபயனைக்கொடாது-எ-று. (௨௫)

பார்த்தனிவைபுகன்றிறைவன் பணித்தருளவிருந்ததற்பின் பரி
விநோடு, தீர்த்தனிருபதமிறைஞ்சித் தருமனையுங் கைதொழு
துசிலைக்கொள்வேலாய், நீத்தநெடுங்கடலுலகுபாண்டவர்பெ
றுவரெனுநீமொழிச்சிபொய்யோ, கோத்தருமன்றனியாண்மை கூ
றுதோகூறுகநீகொற்றவேந்தே ... ... ... ... ... *

எ-து. அர்ச்சுனன் இந்தவசனஞ்சொல்லி ஸ்ரீகிருஷ்ணதேவர் சையமைக்கவிருந்தபின்பு நகுலனானவன் அன்புடனே ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியினுடைய இரண்டுபாதங்களையும்வணங்கித் தருமபுத்திரனையும்வணங்கி முன்னிழந்தராஜ்யத்திற்சூழ்ந்தபூமியைப்பெருமைபொருந்தியபஞ்சபாண்டவர் பெறுவார்களென்று சொல்வதுபொய்யோ தருமபுத்திரமகாராஜனுடைய ஒப்பற்றசௌரியஞ்செல்லாதோ நீசொல்லாய்வெற்றியையுடையவரசனேயென்று பின்னுஞ்சொல்வான்-எ-று

கேவலந்தீர்வரியபகை கிடக்கமுகில்கிளர்மழைக்குக் கிரியொன்
றேந்தும், கோவலன்போயுரைத்தாலுங் குருநாடு மரசுமவன்
கொடுக்கமாட்டான், நாவலம்பூதலத்தரசர் நாடிரந்தோமெனந
மைநகையாவண்ணம், காவலன்றன்படைவலியு மெனதுதட
ம்புயவலியுங்காணலாமே .. ..... ... ..... ... ... *

எ-து. கேவலமாகத்தீர்வதற்கு அரியபகையிருக்க மேகஞ்சொரிகின்ற அதிகமழைக்குப் பசுக்கிரள்களைக்காக்கும்பொருட்டுக் கோவர்த்தனபர்வதத்தையேந்திய ஸ்ரீகிருஷ்ணதேவர் தூதுபோய்ச் சொன்னாலுங் குருநாட்டையும்அரசையும் அத்துரியோதனன்கொடுக்கமாட்டான் ஆகையினாலே சம்புத்தீவாகிய இந்தப்பூமியிலேயிருக்கின்ற அரசர்கள் நாட்டையிரந்தோமென்று நம்மை நகைசெய்யாதபடித்துரியோதனனுடையசேனைவலிமையும் என்னுடைய விசாலமாகிய புஜவலிமையும்பார்க்கலாமென்று பின்னுஞ்சொல்லுவான்நகுலன் ()

அன்னநடையரம்பைதனை யவுணர்கவர்ந்திடவிமையோரரசுக்
காக, முன்னவருடன்பொருதுசிறைமீட்டானைக்குலத்து முத
ல்வனன்றோ, மன்னவையில்யாங்காண மடவாளைத்துகிலுரிந்த
வலியோர்தன்பால், இன்னமிருந்தவன்குடைக்கீழிருந்தக்கா
லம்மையுலகுஞ்சொலாதோ... ... ... ... ... ... *

எ-து. அன்னம்போல்நடையையுடைய தேவரம்பையை அசுரர்கள்பிடித்துக்கொண்டுபோக அப்போது அவள்பயந்து கூப்பிடவது தெரிந்து இந்திரன்பொருட்டு முற்காலத்திலே அந்த அசுரருடனே யுத்தஞ்செய்து சிறைமீட்டவன் நம்முடையகுலத்துக்குத்தலைவனாகிய புரூரவசக்கிரவர்த்தியல்லவா இராஜசபையிலே நாம் காணும்படிக்குத் துரோபதியை அபிமானபங்கஞ்செய்தவலிமையையுடைய துரியோதனனி த்தில் இன்னம்யாசித்து அவன்குடைநிழலிலிருந்தால்நம்மை உலகமென்னசொல்லாதென்றுபின்னுஞ்சொல்வான் நகுலன்-எ-று(

கானே நீபோய்ச்சேர்ந்துறைந்து கடவநாட்கழித்ததற்பின் கா
னநீங்கி, ஈனமிலார்கலைகலந்தார் நந்துணைவனானச்சிறிதுயிரங்
காணுகில், மாநகரும்வளநாடு மூறமையுந்தன் மொழிப்படியே
வழங்காணுகில் தானறியாதவன்பிறர்போய்க் கற்பித்தாலறிவ
னோ தரணிவேந்தே .. ... ..... ... ... ... ... *

எ-து. வனவாசம் பன்னிரண்டுவருஷமும் அக்யாதவாச மொருவருஷமுமிருந்து கழித்தபிற்பாடு காட்டைவிட்டு ஈனமில்லாதபடிவந்தோர்கள் நம்முடைய அண்ணன் தம்பிமார்களென்று கொஞ்சமுமிரக்கஞ்செய்யானாகில் தாயாதிபட்சமுண்டான மகத்தாகியநகரமும் வளத்தையுடையநாடும் மற்றப்பங்குந் தன்சொல்லின்படியே கொடாமற்போனானாகில் தானேயறியாதவன் ஒருவர்போய்ச் சொன்னாலவனோ பூமிக்கரசனாகிய தருமபுத்திரனேயென்றான் நகுலன்-எ-று ()

நகுலனிவையெடுத்துரைப்ப நன்றெனக்கையமைத்தருளி நகு
லன்சொல்லும், இகல்விசயன் றன்மொழியுந் நால்வீமனியம்
பியதுயாவுங்கேட்டோம், புகலரிய வுணர்வுடையோய் புகழுடை
யோய் திறலுடையோய் புகனீயென்ன, முகிலனைய திருமேனிமு
குந்தனுக்கு மனமுருகமொழிகின்றனனே ... .... ... *

எ-து. நகுலனிந்தவசனஞ்சொல்ல நல்லதென்றுகையமைத்தருளி நகுலன்சொன்னதும் வலிமையுடைய அர்ச்சுனன்சொன்னதும் சவுரியத்தையுடைய வீமசேனன்சொன்னதும்எல்லாங்கேள்விப்பட்டோம்சொல்லுதற்கரியவறிவையுடையவனே கீர்த்தியையுடையவனே சவுரியத்தையுடையவனே உன்கருத்தைநீசொல்லென்றுகேட்கக் கரியமேகத்தையொத்ததிருமேனியையுடைய ஸ்ரீகிருஷ்ணதேவனைப்பார்த்து மனமுருகும்படிச்சொல்லுவான் சகாதேவன்-எ-று. (௫௰)

சிந்தித்தபடி நீயுஞ் சென்றாலென்றவிர்ந்தாலென் செறிந்தநா
ளு, மைந்தர்க்குமுதல்வனிலம் வழங்காமலிருந்தாலென்வழங்கி
னாலென், கொந்தாற்றழுவிவருந் துழாய்த்தாலென்விரித்தாலென்,

குறித்தசெய்கை, அந்தத்தின்முடியும்வகை யடியேற்குத்தெரி
யுமோ வாதிமூர்த்தி ................................ *

எ-று. ஆதிநாராயணராகிய ஸ்ரீகிருஷ்ணதேவரே நீர் நினைத்தபடியே தூதுபோனாலென்ன அதைவிட்டாலென்ன துரியோதனன் பூமி கொடாவிட்டாலென்ன கொடுத்தாலென்ன பூங்கொத்தையுடைய அளகபாரத்தை இத்துரோபதிமுடித்தாலென்ன விரித்தாலென்ன நினைத்தகாரிய முடிவிலே முடியும்விதம் அடியேனுக்குத்தெரியுமோவென்றான் சகாதேவன்-எ-று. (௫௧)

முருகவிழ்க்கும்பசுந்துளப முடியோனேயன்றலகைமுலைப்பா
லுண்டு, மருதிடைச்சென்றுயர்சகடம் விழவுதைத்துப்பொது
வர்மனை வளர்ந்தமாலே, ஒருவருக்குந்தெரியாதிங்குன்மாய்கை
யானறிவேனுண்மையாகத், திருவுளத்துக்கருத்தெதுவோ வது
வெனக்குங்கருத்தென்றான் றெய்வமன்னான் ........ ........ *

எ-று. வாசனையைவீசுகின்ற பசியதுளபமாலையை யணிந்த கிரீடத்தையுடையவரே அன்று பூதகியினுடைய முலைப்பாலையுண்டு சாபம் பெற்றிருந்த மருதமரத்தையுதைத்து உயர்ந்தபண்டியைவிழும்படி யுதைத்து யாதவர்மனையில் வளர்ந்தருளிய ஸ்ரீகிருஷ்ணதேவரே இங்கே நீர்செய்கின்ற மாயம் ஒருவருக்குந்தெரியாது எனக்குத்தெரியுமாகையால் சத்தியமாக உம்முடைய திருவுளத்துக்கு நினைப்பு எதுவோ அதுவே எனக்குங்கருத்தென்றான் தெய்வத்தையொத்த சகாதேவன்-எ-று. (௫௨)

இவ்வண்ணஞ்சாதேவ னியம்புதலுநகைத்தருளி யிகலோர்சொ
ன்ன, அவ்வண்ணம்புகலாமல் விரகுரைத்தானிவனென்ன வவ
னோடாங்கோர், மைவண்ணமணிக்கூடந் தனிலெய்திப்பாரதப்
போர் பயிலாவண்ணம், உய்வண்ணஞ்சொல்லுகநீ யுபாயமெ
னத்தொழுதுரைத்தா னுரங்கொள்வேலான் ... ........ ... *

எ-று. இந்தப்பிரசாரம் சாதேவன் சொன்னமாத்திரத்திலே ஸ்ரீகிருஷ்ணதேவர் புன்சிரிப்புக்கொண்டு தருமபுத்திராதியர்சொன்ன அவ்விதஞ்சொல்லாமல் இவன் உபாயமாகச்சொன்னானென்று அவனுடனே அங்கே நாகரத்தினத்தினு லிழைக்கப்பட்டிருக்கிற ஒரு ஏகாந்தஸ்தானத்திலேபோய் இந்தப் பாரதயுத்தஞ்செய்யாதவிதம் பிழைக்கும்படி நீ உபாயஞ்சொல்லென்றுகேட்க அவனை வணங்கிச்சொல்லுவான் சகாதேவன்-எ-று. (௫௩)

வேறு.

நீபாரதவமரில்யாவரையுநீராக்கிப் .................... *
பூபாரதந்தீர்க்கப்புரிந்தாய்புயல்வண்ணா .................. *

கோபாலாபோரேறேகோவிந்தா நீயன்றி ............... *
மாபாரதமகற்ற மற்றார்சொல்வல்லாரோ...... ............*

எ-து. ஸ்ரீகிருஷ்ணதேவரோ நீர் பாரதயுத்தத்திலே சர்வதேசத்துஇரா ஜவர்க்கத்தையுங் குருக்ஷேத்திரத்திலேகூட்டிச் சாம்பலாக்கிப்பூமியா ரந்தீர்க்க இந்த எத்தனஞ்செய்தீர் மேகவண்ணரோ பசுக்களைப்பரிபா லனஞ்செய்தவரோ யுத்தத்திற்கு ஆண்சிங்கம்போன்றவரோ கோவிந்த ரோ உம்மையல்லாமல் இந்த மகாபாரதத்தை நீக்கவல்லவர் வேறே யா ரிருக்கிறார்கள் சொல்லுவீரென்று பின்னுஞ் சொல்லுவான் சகாதே வன்-எ-று. (௲க)

பாராளக்கன்னனிகல் பார்த்தனை முன்கொன்றணங்கின் *
காரார்குழல்களைந்து காலிற்றளைபூட்டி... ... ... *
நேராகக்கைபிடித்து நின்னையும்யான்கட்டுவனேல் ...*
வாராமற்காக்கலா மாபாரதமென்றான்... ... ... *

எ-து. கர்ணனைப் பூமியாளும்படி பட்டங்கட்டி அவனைக்கொல்லுகி றோமென்று - பகைத்திருக்கின்ற அர்ச்சுனனை முன்னேகொன்று-து ரோபதியினுடைய கூந்தலைக்களைவித்துக் காலிலேவிலங்குபூட்டி நே ராகக்கையாற்பிடித்து உம்மையும் நான்கட்டுவனேயானால் இந்தமகா பாரதயுத்தம் வராமற்படிக்குக் காக்கலாமென்றான்சகாதேவன்-எ-று.

முன்னநீகூறியவை யெல்லாமுடித்தாலும் ............ *
என்னைநீகட்டுமோ றெவ்வாறெனமாயன் ..... ..... ........ *
உன்னைநீதானு முணராதாயுன்வடிவம்.................*
தன்னைநீகாட்டத் தளைந்திடுவேன்யானென்றான் ......*

எ-து. முன்னே நீசொன்னபடி அவைகளெல்லாஞ்செய்துமுடித்தா லும் என்னை நீபிடித்துக்கட்டும்விதம் எப்படியென்றுகேட்க உம்மு டையபெருமையையறியாத நீர் உம்முடையவடிவைக்காட்டினால் நா ன்கட்டுவேனென்றான் சகாதேவன்-எ-று. (௲௬)

மாயவனுமன்பன் மனமறிவான்கட்டுகவென் .........*
றாயவடிவுபதி னாறாயிரங்கொண்டான் ..................*
தூயவனுமூலமாந் தோற்றமுணர்ந்தெவ்வுலகும் .......*
தாயவடியிணைக டன்கருத்தினுற்பிணித்தான் ...........*

எ-து. ஸ்ரீகிருஷ்ணதேவரும் அன்பனுடைய மனமறியும்படி நம் மைக் கட்டும்பிள்ளாயென்று தமதிச்சையினுலாகிய பதினாறாயிரம்வ டிவுகொண்டார் பரிசுத்தனுகிய சகாதேவனும் அவ்வடிவுகளுக்கெல் லாம் ஆதியாகிய வடிவை ஞானத்தாலறிந்து எந்தவுலகத்தையும் தா

வியளந்த இரண்டு பாதங்களையுந் தன்கருத்தாகிய கயிற்றினாலே கட்டினான்-எ-று. (௩௭)

நீதேவனென்றறிந்து நெஞ்சாற்றனைகட்டும் ...... ...*
சாதேவன்கண்களிக்கத் தானேயாய்முன்னின்றான் ..... *
பூதேவருங்கனகப் பூங்காநிழல்வைகும் ............. ...*
மாதேவருந்தேடிக் காணாமலரடியோன் ........... ...*

எ-று. பதினாறாயிரம் வடிவிலே மூலமாகிய வடிவையறிந்து நீதான் தேவனென்று நிச்சயித்து மனதினாலே தன்னைக்கட்டிய சகாதேவனுடைய கண்கள் களிக்கும்படி தானேயாகிப் பிரத்தியட்சமாய்நின்றார் பூலோகத்துத்தேவரும் பொன்மயமாகிய மலர்களையுடைய பஞ்சதருவினிழலிலே தங்கிய பெருமைபொருந்திய தேவர்களுந் தேடிக்காணாத தாமரைமலரையொத்த பாதங்களையுடைய ஸ்ரீகிருஷ்ணதேவர் ()

அன்பாலென்றன்னை யறிந்தேபிணித்தமைந்தா ....... *
என்பாதந்தன்னை யினிநீவிடுகவென ......... .......... *
வன்பாரதப்போரில் வந்தடைந்தவைவரையும் ......... *
நின்பார்வையாற்காக்க வேண்டுநெடுமாலே ... .. .... *

எ-று. பத்தியினாலே இன்று என்னையறிந்து கட்டியபிள்ளாய் என்னுடையபாதத்தை இனிநீ விடக்கடவாயென்று ஸ்ரீகிருஷ்ணதேவர் சொல்ல வன்மைபொருந்திய பாரதயுத்தத்திலே வந்துசேர்ந்த எங்களைவரையும் உம்முடைய கடாட்சத்தினாலே ரட்சணைசெய்யவேண்டும் நெடியமகாவிஷ்ணுவேயென்றான் சகாதேவன்-எ-று. (௩௯)

என்றென்றிறைஞ்சி யிருதாமரைத்தாளில் ..........*
ஒன்றுங்கதேர்முடியாற் சோமென்றுணர்த்தருளி ........*
இன்றிங்கிருவேமு மிப்போதுரைத்தமொழி ........ *
ஒன்றும்பிறரறிய வோதாதேநீ யென்றான் ..........*

எ-று இப்படியென்றுசொல்லி வணங்கி இரண்டு தாமரைமலர்போன்ற பாதங்களில் நமஸ்கரித்த சகாதேவனுக்கு நிச்சயஞ்சொல்லி இன்று நா மிரண்டுபேரும் இப்போது பேசியசொல்லொன்றும் அன்னியரறியச்சொல்லாதேயென்றார் ஸ்ரீகிருஷ்ணதேவர்-எ-று. (௪௰)

ஆண்டிருந்தவவை நீங்கி யறிவுடையோரிருவோரும்... *
பாண்டவர்கண்முன்னெய்தப் பழுதில் புகழ்ப்பாஞ்சாலி *
நீண்டகருங்குழல்சோர நின்றுளமுறநோக்கி ........ *
ஈண்டவரிலிளையோனைச் சந்துயிசைவினிதென்றான் ..... *

எ-று. அவ்விடத்தேயிருந்த சபையினின்றும் நீங்கியறிவுடைய அவ்விரண்டுபேரும் தருமபுத்திரர் முதலானோரிருக்கிற சபைக்குவர, அப்போது குற்றமற்ற கீர்த்தியையுடைய திரௌபதியானவள் நெடி

யகருமைபொருந்திய அளகபாரஞ்சோரநின்றாள் அவள் முகத்தைப் பார்த்து ஸ்ரீகிருஷ்ணதேவருக் கிளையவராகிய சாத்தகியாழ்வார் இந்தச்சமயம் நல்லது நீ கேட்கவேண்டியவைகளைக் கேளென்றார்-எ-று()

தருமனுக்குங்கருத்திதுவேதமருடன்போர்புரியாமல் .... ... *
இருநிலத்திலுடன்வாழ்த லிவர்க்குநினைவென்றுரைத்து ..... *
வரிமலர்க்கண்புனல்சோர மலர்மறந்தகுழல்சோர . .... ..... *
விரிமலர்ச்செஞ்சேவடிக்கீழ் வீழ்ந்தழுதாண் மின்னனையாள் *

எ-து. சாத்தகியாழ்வார்சொன்ன வசனங்கேட்டு ஞாதிகளுடனேயுத்தஞ்செய்யாமல் பெருமைபொருந்திய பூமியிலே கூடிவாழவே தருமபுத்திரருக்குங்கருத்து, இந்தச்சகாதேவருக்கும் இதுவே கருத்தென்றுசொல்லி ரேகைகளையுடைய நீலோற்பல மலரையொத்த கண்களிலே நீரொழுகப் பூமுடித்ததைமறந்த, அளகபாரமுஞ் சோர்வையுடைய என்னுடைய பிரதிக்கினை எவ்விதத்தில்முடியுமென்று ஸ்ரீகிருஷ்ணதேவருடைய விரிந்த தாமரைமலரையொத்துச்சிவந்ததிருவடியிலே விழுந்துப் பிரலாபித்தாள் மின்னலையொத்த வடிவையுடைய துரோபதி-எ-று. (௪௨)

சாலக்கனகன்றனிமைந்தனைமுனிந்த ... ... *
காலத்தவனறைந்தகற்றூணிடைவந்தாய்... ...*
மூலப்பேரிட்டழைத்தமும்மதமால்யானைக்கு *
நீலக்கிரிபோன்முன்னின்றநெடுமாலே ... .. *

எ-து. ஆதிநாராயணன் எங்கேயிருக்கின்றான் இந்தத்தூணிலுமிருப்பானோ சொல்லடாவென்று தன்னுடைய ஒப்பற்ற குமாரனாகியபிரகலாதனை மிகவும் இரணியனென்பவன் கோபித்தகாலத்திலே அவனுலறைபப்பட்ட கற்றூணிலே நரசிங்க வுருவங்கொண்டுவந்தாய் ஆதிமூலமேயென்று பெயரிட்டழைத்த மும்மதங்களையும் பொழிகின்ற பெரியயானைக்கு நீலகிரிபோல எதிரே எழுந்தருளிவந்தநெடியமகாவிஷ்ணுவேயென்றாள் துரோபதி-எ-று. (௪௩)

கற்றைக்குழல்பிடித்துக் கண்ணிலான்பெற்றெடுத்தோன்.
பற்றித்துகிலுரியப் பாண்டவரும்பார்த்திருந்தார் ... *
கொற்றத்தனித்திகிரிக் கோவிந்தாநீயன்றி ... ... *
அற்றைக்குமெய்மான மாரேவருகாத்தாரோ... ... *

எ-து. கற்றையாகிய என்னுடைய அளகபாரத்தைப்பிடித்துத் திருதராட்டிரன்பெற்ற குமாரனாகிய துச்சாதனன் அபிமானபங்கமாகஎன்னுடைய துகிலைப்பற்றி உரியும்போது பஞ்சபாண்டவரும் பார்த்திருந்தார்கள் வெற்றிபொருந்திய ஒப்பற்ற சக்கிராயுதத்தையுடைய ஸ்ரீகிருஷ்ணதேவரே உம்மையல்லாமல் அன்றைக்கும் எம்மானத்தை

வேறே யார்வந்து காத்தார்களென்று பின்னுஞ்சொல்லுவாள் துரோ
பதி-எ-று. (சச)

மன்றிலழைத்தெனக்கு மாசளித்தமன்னவன்பால் ... *
சென்றுதமக்கைந்தூர் திறல்வீரர்பெற்றிருந்தால்... *
அன்றுவிரித்த வருங்கூந்தல்வல்வினையேன் ... ...*
என்றுமுடிப்பதினி யெம்பெருமவென்றழுதாள்... *

எ-து. சபையிலேயழைத்து எனக்குக் குற்றத்தைத்தந்த துரியோதனனிடத்திற்போய்ச் சுத்தவீரராகிய பஞ்சபாண்டவர் தமக்கு ஐந்தூர் பெற்றிருப்பார்களேயானால் அன்றுவிரித்த அரிய அளகபாரத்தைத் தீவினையையுடைய அடியேன் என்றைக்கு இனிமுடிப்பது எமதுகடவுளேயென்றழுதாள் துரோபதி-எ-று. (சரு)

தண்டிருந்ததவன்கரத்திற்றனுவிருந்ததிவன்கரத்தில்........ *
வண்டிருந்தபூங்குழன்மேன் மாசிருந்ததெனவிருந்தாள்... *
கண்டிருந்தீரெல்லீருங்கருதலர்பாலூர்வேண்டி ............*
யுண்டிருந்துவாழ்வதற்கே யுணர்கின்றீருனாயீரோ.......... *

எ-து. அந்தவீமசேனன்கையில் தண்டாயுதமிருந்தது இந்த அர்ச்சுனன்கையில் காண்டீபமென்னும் வில்லிருந்தது இந்தத்துரோபதியோ வண்டுகள்மொய்த்திருக்கின்றபூவையணிந்த கூந்தலின்மேல்மாசேறியிருந்ததென்னும்படியிருந்தனள் நீங்களெல்லோரும் பார்த்திருப்பீர்கள் சத்துருக்களிடத்திலே ஊர்வேண்டிப் பெற்றுக்கொண்டுபுசித்து உயிர்வாழ்வதற்கு நினைக்கின்றவர்களே இதற்கு உத்தரவு சொல்லுங்களென்றார் சாத்தகியாழ்வார்-எ-று. (சசு)

சண்டமுகிலுருமனைய சராசந்தன்றனக்கஞ்சி..............*
வண்டுவரையரணாக வடமதுரைநகைவிட்ட.................... *
திண்டிறன்மாதவன்மதியோ திகழ்தருமன்றன்மதியோ......*
பண்டுமவர்கருத்தறிந்து பார்போய்வேண்டுவதென்றான் ...*

எ-து. வேகத்தையுடையபிரளயகாலத்து இடியையொத்த சராசந்தனென்னும் அரசனுக்குப்பயந்து வளப்பத்தையுடைய துவாரகையைக் கோட்டையாகக்கொண்டு வடமதுரையென்னும் பட்டணத்தைக்கைவிட்ட வலியசௌரியத்தையுடைய ஸ்ரீகிருஷ்ணதேவர்புத்தியோ பிரகாசத்தையுடைய தருமபுத்திரருடையபுத்தியோ முன்னதாக அவர்கருத்துத்தெரிந்திருந்தும்போய்ப் பூமியைவேண்டுவது என்னென்றார் சாத்தகியாழ்வார்-எ-று. (சஎ)

சாத்தகிநின்றிவையுரைப்பச் சடைக்குழலாளழுதரற்றக் .... *
கோத்தருமன்முதலாய குலவேந்தரைவரையும் ..........*

பார்த்தருளியருள்பொழியும் பங்கயக்கணெடுமாலும் ......*
எத்தரியபெருங்கற்பி னிளையாளுக்கிவையுரைத்தான்.........*

எ-து. சாத்தகியாழ்வாரெழுந்து நின்று இந்தவசனஞ்சொல்லச் சடைபட்டகூந்தலையுடைய துரௌபதிபிரலாபித்துப்புலம்ப அப்போது தருமபுத்திரர் முதலாகிய ஐவரையும் பார்த்தருளிக் கிருபையைப் பொழிகின்ற தாமரைக்கண்ணராகிய ஸ்ரீகிருஷ்ணதேவருந் துதிசெய்தற்கரிய பெரியபதிவிரத்தியத்தையுடைய தங்கையாகிய துரௌபதைக்கு இவைகளையருளிச்செய்தார்-எ-று. (௪௮)

தொல்லாண்மைப்பாண்டவர்க்குத் தூதுபோய்மீண்டதற்பின்,
நல்லாயுன்சடைக்கூந்த நானேமுடிக்கின்றேன் ... ..........*
எல்லாருங்காணவினி விரிப்பதெண்ணரிய..................*
புல்லார்தமர்தப்புரமாதர்பூங்குழலே.....................*

எ-து. பழமையாகிய சௌரியத்தையுடைய பஞ்சபாண்டவர்க்காகத் தூதுபோய்வந்தவுடனே துரௌபதியே உன்னுடைய பசியகூந்தலை நானேமுடிப்பேன் எல்லாரும்பார்க்கும்படி யினிவிரிக்கப்படுவது எண்ணிக்கையற்ற சத்துருக்களுடைய அந்தபுரத்திலிருக்கின்றஸ்திரீகளுடையபூவையணிந்தகூந்தல்-எ-று. (௪௯)

மைக்குழலாய்கேளாய் மருவாருடர்புலத்துப் .. ...........*
புக்குழலாகுங்கொழுவாம் போர்வாளபிமன்னன் ..........*
தொக்குழலும்வெங்கோன்மைத்தொல்வேந்தர்தங்குலமும் .*
இக்குழலுஞ்சேரமுடியாதிராவென்றான் ........... ......*

எ-து. கரியகூந்தலையுடைய துரௌபதியேகேட்பாயாக சத்துருக்களுடையதேசங்களாகிய வயலிலேபுகுந்து உழுதற்கு ஆகின்ற கொழுப்படையென்றுசொல்லலாகும் யுத்தஞ்செய்கின்ற வாளாயுதத்தையுடைய அபிமன்னனானவன் ஒன்றாகக்கூடியுழலுகின்ற கொடுங்கோலின்றன்மையையுடைய பழைய அரசர்களுடையகுலங்களையும் உன்னுடையஅளகபாரத்தையும் ஒருசேரமுடியாமல்விடானென்றுபின்னுஞ்சொல்லுவார் ஸ்ரீகிருஷ்ணதேவர்-எ-று. (௫௰)

துன்றுபிணியோர் துறந்தோரடங்காதோர்,...... .....*
கன்றுசினமனத்தோர் கல்லாதவரிளையோர் ............*
ஒன்றுமுறைமை யுணராதவர்மகளிர் ...................*
என்றுமிவர்மந்தணத்தி லெய்தப்பெறாரே!.........*

எ-து, வியாதியையுடையவர்கள் துறந்தமகத்துக்கள் ஒருவருக்கு மடங்காதவர்கள் கன்றியகோபம்பொருந்திய மனமுடையவர்கள் கல்வியில்லாதவர்கள் சிறுபிள்ளைகள் இவர்கள் இரகசியம்பேசுமிடத்தில் அடையப்பெறாதவர்கள்-எ-று. (௫௧)

பெண்ணீர்மைகுன்றாப் பெருந்திருவின் செங்கமலக் *
கண்ணீர் துடைத்தருளிக் கண்ணிற்கருணையெனும் .... *
தெண்ணீரினாற்பொருந்தத் தேற்றினான்சாற்றுகின்ற . *
மண்ணீரவலனிலம் வான்வடிவாமாமாயன் ...........*

எ-து. பெண்கட்குவேண்டிய சிறந்தகுணங்களிற்குறைவில்லாத து ரௌபதியினுடைய செந்தாமரைமலர்போன்ற கண்களிலிருக்குங்க ருணையென்கிற தெளிந்தநீரினாலே பொருந்தும்படி தெளியச்செய் தார் சொல்லுகின்றபஞ்சபூதவடிவமாகிய பெருமைபொருந்திய ஸ்ரீ கிருஷ்ணதேவர்-எ-று (௫௨)

என்னைக்கழறியிருந்தோனுரைதவிர்த்து ...............*
நின்னொப்பவரில்லாய் நீயேகவைவாய்ப்ப. ...........*
மன்னர்க்குமன்னவன்பால் மாயோனுந்தூதாகிப் .... *
பொன்னூற்றநேமிப்பொருபரித்தேர்மேற்கொண்டான்

எ-து. இப்படிஉறுதியாகச்சொல்லியிருந்த ஸ்ரீகிருஷ்ணதேவருடை யவசனங்களைநீக்கி உமக்குச்சமானம் ஒருவருமில்லாத தேவரீரேதூ துபோகவேண்டுமென்று பஞ்சபாண்டவர்கள்சொல்ல அரசர்க்கரச னாகுரியோதனனிடத்திலே ஸ்ரீகிருஷ்ணதேவருந்தூதாகி மகாமே ருமலைக்குச்சமானமாகிய குதிரைகள்கட்டிய தேரின்மேலேறிக்கொ ண்டார்-எ-று. (௫௩)

சங்குமணிமுரசுஞ் சல்லரியுந்தாரைகளும் ... *
எங்குமுழங்கவெழில்வெண்குடைநிழற்றப் ...*
பொங்குகவரி புடையிரட்டவெண்ணிலா ... *
அங்கமொருநான்குமவனிபருந்தற்சூழ ... .. *

எ-து. அப்போது சங்குவாத்தியங்களும் அழகியபேரிகைகளும் சல் லரிகளும் தாரைகளும் எவ்விடத்திலுஞ்சத்திக்க அழகிய வெள்ளைக் குடை நிழலைச்செய்ய பிரகாசம்பொருந்திய சாமரைகள் இரண்டுபக் கங்களிலும்வீசிவர கணக்கில்லாத ரதகஜதுரகபதாதிகளும் பூமியை யாளும்அரசர்களுந்தன்னைச்சூழ்ந்துவரப்பட்டார்ஸ்ரீகிருஷ்ணதேவ.

கல்வரையு பாலைக் கடுஞ்சுரமுங்கானாறும் ... *
நல்வரையுநீர்நாடு நாளிரண்டிற்சென்றருளித் ..... ..*
தொல்வரையகோபுரமு நீண்மதிலுஞ்சூழ்ந்திலங்கும் *
மல்வரையதோளான் வளமாநகர்கண்டான்... ... ...*

எ-து. மணிபாம்பருக்கைகளைக்கொண்டிருக்கின்ற பாலையென்னுங்க டுஞ்சுரங்களுங் கானாறும் நல்லமலைகளும் நீருடையநாடுகளும்இர ண்டுநாளிற்கடந்துபோய் முற்காலத்திலே இவ்வளவென்றுசொல்லிய அளவையுடைய கோபுரங்களுந் நெடிய மதிலுஞ்சூழ்ந்து விளங்கு

கின்ற மல்யுத்தஞ்செய்கின்ற மலைக்குச்சமானமாகிய தோளையுடைய ஸ்ரீகிருஷ்ணதேவர்வளப்பத்தையுடைய பெரியநகரத்தைக்கண்டார்()

வேறு.

மேவுசெந்துகிர்த்திரளுமாமரகதவிதமும் ... ... ... *
கோவைவெண்கதிர்த்தரளமுநிரைநிரையாயிற்றித் ... *
தாவும்வெம்பரித்தேரினன்றனக்கெதிர்சமைத்த .. ... *
காவணங்களிற்றோன்றினடச்சிளங்கமுகு ... ... *

எ-து. அந்தமார்க்கத்திலே பசுமையும் இளமையும்பொருந்தியகமுகுகள் பழுத்தகுலையும், பச்சைக்குலையும், பாளைகளும், விளங்கியதெப்படியிருக்கிறதென்றால் சிவந்தநிறத்தையுடைய பவளங்களும் வெவ்வேறுவிதமாகிய மரகதங்களும் கோவைசெய்த வெள்ளிய கிரணத்தையுடைய முத்துகளும் வரிசை வரிசையாகப்பதித்துத் தாவிநடக்கும் வெவ்விய குதிரைகள்கட்டிய தேரையுடைய ஸ்ரீகிருஷ்ணதேவருக்கு எதிரேயுண்டாக்கிய மண்டபங்கள்போ லிருந்தது-எ-று.(௫௧)

வம்புலாமகிற்சந்தனம்வருக்கைமாசந்தம் ... ... *
சம்பகந்தமாலம்பல்திசைதொறுந்தயங்கி ... *
உம்பர்நாயகன்வரவுகண்டுளங்களிகூர்ந்து .. ... *
தும்பிபாடினதோகைநின்றாடினசோலை ... *

எ-து. பரிமளம்வீசிய அகிலும் சந்தனமும் பலாவும் மாவும் சண்பகமும் பச்சிலைமரமும் எந்தத்திசைகளிலும் தங்கியிருக்கப் பெற்ற சோலையில் தேவநாயகனாகிய ஸ்ரீகிருஷ்ணதேவர் வருதலைக்கண்டு மனமகிழ்ச்சியடைந்து வண்டுகள்பாடினமயில்கள் நின்றுகூத்தாடின()

அணிகொளத்திருபுரியெனுமணங்குசெந்திருவின் ... *
கணவனுக்கெதிர்காட்டுநீராஞ்சனங்கடுப்ப ... ... *
மணமிகுந்தசெந்தாமரைமலருடன்சிறந்த ... ... *
புணரியிற்பெரும்புனலையுங்கொள்வனபொய்கை ... *

எ-து. அழகினைக்கொண்ட அஸ்திருபுரியென்றுமொரு கன்னிகையாகிய இலட்சுமிக்கு நாயகனாகிய ஸ்ரீகிருஷ்ணதேவருக்கு! எதிரேகாட்டுகின்ற ஆலத்திக்கொப்பாக வாசனையிருந்த சிவந்ததாமரைமலருடனே சிவந்தகடல்போல் நிறைந்தநீரையுங் கொண்டிருந்தன பொய்கைகள்-எ-று. (௫௩)

நடந்தநாயகன்கோலமாம்வேலைசூழ்ஞாலம் ... ... *
இடந்தநாளினிலதுவழியாகவந்தெழுந்து ... ... *
படர்ந்தபாவலக்கங்கையப்பார்மதில்சூழ்ந்து ... ... *
கிடந்ததாமெனச்சிறந்ததாழ்புனற்கிடங்கு ... *

எ-து. தூதுநடந்த ஸ்ரீகிருஷ்ணதேவர் பூர்வத்திலேவராகரூபியாய்ச் சமுத்திரஞ்சூழ்ந்த பூமியைப்பேர்த்தநாளில் அதுவழியாக வந்தெழுந்து பாவியபாதாளகங்கை அந்தநகரின் பெரியமதிலைவளைந்து கிடந்ததென்றுசொல்லச் சிறந்திருந்தது தாழ்ந்தநீரையுடைய அகழி-எ-று

அடிநிலத்திலேபடிவனவிடிமுகிலனைத்தும் ... ........ *
முடிநிலத்தினுக்குடுபதத்தினிமுடிவில்லை .............. *
நெடியசக்கரப்பொருப்பையுநிகரிலாவிதற்கோர்...... *
படிவகுத்ததாமெனும்படிபரந்ததுபுரிசை ...... .... *

எ-து. கீழ்நிலத்திலே படிவனவாகும் இடியையுடைய மேகங்களெல்லாம் அதினுடைய மேல்நிலத்துக்கு நக்ஷத்திரபதவியினு முடியவில்லை நீண்ட சக்கிரவாளகிரியையும் நிகரில்லாத விதற்கு ஒருபுடையொப்பாகச்செய்ததாமென்று சொல்லும்படி பரந்திருந்தது அந்த அஸ்திருபுரத்து மதில்-எ-று. (கூ௰)

பகலினுங்கடும்பரிதிதன்கதிர்பரப்பாமல் .... .... ..... .... *
இகலியெங்கணுமெறிந்தகால்பொருதலினைத்திப் .... *
புகலுகின்றமந்தாகினித்தரங்கமேபோல ............. *
அகல்விசும்பிடைமிடைவனநெடுங்கொடியாடை ...... *

எ-து. பகற்காலத்திலும் வேகத்தையுடைய சூரியன் தன்கிரணங்களைவீசாமலிருக்கும்படி வலிமைகொண்டு எவ்விடத்தும்வீசுகின்றகாற்றுப் பொருகிறபடியால் உயர்வாகச்சொல்லுகின்ற கங்கையினுடைய அலைகள்போல் அகன்ற ஆகாசத்தினிடத்திலே நெருங்குவன நெடியகொடியாகக்கட்டிய வஸ்திரங்கள்-எ-று. (கூக)

புயங்கபூமியோபுரந்தரற்கமைத்தபொன்னுலகோ ..... *
தயங்குசெல்வநீடளகையோநகரெனச்சாற்ற ............ *
இயங்குகார்முகில்வரையினின்றெழுவனபோல ......... *
வயந்தராகினறும்புகையுயிர்ப்பனமாடம் ........... *

எ-து. நாகலோகமோ, இந்திரனுக்குச்செய்த பொன்மயமான தெய்வலோகமோ, செல்வமிகுந்த அளகாபுரியோ இந்த நகரென்றுசொல்லச் சஞ்சரிக்கின்ற கரியமேகங்கள் மலைகளின்மேலேநின்று எழுதல்போல் பிரகாசிக்கின்ற கரிய அகிலினது நறியவாகியபுகைகளை வீசுகின்றனமாளிகைகள்-எ-று. (கூஉ)

பன்னர்வேழமுஞ்சேனையுமெதிரெதிர்மயங்கப் ...... *
பின்னுமுன்னுமெம்மருங்கினும்பெயரிடம்பெறாமல் *
துன்னிநின்றவரோகுமினேகுமினெனுஞ்சொல்......... *
என்னுமோசையேயுள்ளனவீதிகளெல்லாம் .... ........ *

எ-து. அரசர்களுடைய யானைகளும் சேனைகளும் ஒன்றுக்கொன்று எதிரிட்டுமெயங்கப் பின்னுமுன்னும் எந்தப்பக்கத்திலும் காலைத்தூக்கிவைத்துப்போக இடம்பெறமாட்டாமல்நெருங்கிநின்றவர்கள்போங்கோள் போங்களென்னுஞ் சொல்லினுடைய சத்தங்களேயுண்டாயிருக்கின்றன வீதிகளெல்லாம்-எ-று, (௫௩)

வரையெலாம்பலவனமெலாங்கடலெலாம்விளைந்த ......*
தரையெலாம்படுபொருளெலாந்தனித்தனிகுவித்த .... *
நிரையெலாங்கவராவணநீர்மையைப்புலவோர் .........*
உரையெலாமெடுத்துரைப்பினுமுவமைவேறுளதோ ...*

எ-து. மலைகளெல்லாவற்றினும் உண்டாகின்ற மாணிக்கமுதலிய திரவியமும், காடுகளெல்லாவற்றினும் உண்டாகின்ற சந்தனமுதலியதிரவியமும், கடல்களெல்லாவற்றினும் உண்டாகின்றசங்குமுதலிய திரவியமும், நாடுகளெல்லாவற்றினும் உண்டாகின்ற செந்நெல் முதலிய திரவியமும், வெவ்வேறாகக்குவித்துவரிசையாகவைக்கப்பெற்றகடைவீதியினுடைய குணத்தை வித்துவான்கள் கற்றசொல்லுகளெல்லாமெடுத்துச்சொன்னாலும் வேறே உபமானமுண்டோ-எ-று. (௫௪)

விரவுகானகலரினும்பலவீரரின்விதங்கள் ..............*
பரவைவெண்மணலினும்பலபுரவியின்பந்தி ..........*
இரவில்வானமீனினும்பலயானையினீட்டம் .............*
நிரைகொள்கார்த்துளியினும்பலதேரணிநிலையே ......*

எ-து. காட்டிலிருக்கின்ற பலமலரைக்காட்டிலுஞ் சுத்தவீரர்களதிகமாகவிருப்பார்கள் சமுத்திரத்தினுடைய வெள்ளைமணலைக்காட்டிலுங் குதிரைபந்திகளதிகமாகவிருக்கும் இராத்திரியில் ஆகாசத்திலேதோன்றும் நக்ஷத்திரங்களைக்காட்டிலும் யானைகூட்டங்களதிகமாகவிருக்கும், வரிசையாகிய மேகதாரைகளைக்காட்டிலும் இரதங்களதிகமாகவிருக்கும்-எ-று. (௫௫)

ஆசிலாமறையந்தணராலயமொருபால்... ... ... *
மாசிலாமுடிமன்னவர்மாளிகையொருபால் ... ...*
காசிலாமதியமைச்சர்தங்கடிமனையொருபால் ... *
பேசிலாவெழில்வணிகர்தம்பேரிடமொருபால் ... ...*

எ-து. குற்றமில்லாத நான்குவேதமுந்தெரிந்த பிராமணர் திருமாளிகைகளொருபக்கத்திலிருக்கும்; களங்கமில்லாத கிரீடந்தரித்த அரசர் அரமனைகளொருபக்கத்திலிருக்கும், பழுதில்லாத புத்தியின் மிகுந்த மந்திரிகளுடைய புதுமைபொருந்திய வீடுகளொருபக்கத்திலிருக்கும், சொல்லுமிடத்தில் நிறைந்த அழகையுடைய வைசியருடைய

இடமகன்றவீடுகளொருபக்கத்திலிருக்கும்-எ-று. (௬௬)

மங்கலத்திசும்மனையெலாம்வலம்புரியோசை ......... *
திங்கடோய்நெடுந்தலமெலாஞ்செழுஞ்சிலம்போசை *
அங்கண்மாநகரனைத்துமும்முரசதிரோசை ......... *
எங்கணுங்கடவுளரிடந்தொறுமுழவோசை ......... *

எ-து. கல்யாணஞ்செய்கின்ற வீடுகளெல்லாம் வலம்புரியென்னுஞ் சங்கத்தொனியாயிருக்கும், சந்திரன்றோய்கின்ற நெடியதிருத்தலங்களெல்லாம் நடனஞ்செய்கின்ற மாதருடைய செழுமைபொருந்திய சிலம்போசையாயிருக்கும், அழகிய இடத்தையுடைய, மகத்தாகிய நகரமுழுவதும் வெற்றிமுரசு வீரமுரசு தியாகமுரசென்னும் மூவிதப்பேரிகையோசையாயிருக்கும், எவ்விடத்திலும் தேவாலயந்தோறும் மத்தளவோசையாயிருக்கும்-எ-று. (௬௭)

முன்றிலின்கணின்றிடம்பெறுவரசர்மாமுடிகள் ......... *
ஒன்றொடொன்றுறாந்தெற்றிமேலொளிபொடிசிதறி *
சென்றுசென்றுறுதிசைதொறுந்திகழ்ந்ததுசெம்பொற் *
குன்றெனும்படிநின்றதுகுருகுலன்கோயில் ......... *

எ-து. தெருவாசலிலேநிற்க இடம்பெறாமல் அரசருடையகிரீடங்கள் ஒன்றோடொன்று தேய்ந்தும் இடிபட்டும் மேலேபிரகாசிக்கின்ற அபரஞ்சிப்பொடிகள் தெறித்துப்போய்ப் பொருந்துகின்ற திக்குகள்தோறும் விளங்கியது மகாமேருமலையென்னும்படி நின்றது துரியோதனன் அரண்மனை-எ-று. (௬௮)

என்றிசைக்குநல்லொளிதியெழின்மணிமகுடக் ......... *
குன்றிசைக்கும்வண்கோபுரநீணகர்குறுகித் ......... *
தென்றிசைக்குளிர்செண்பகமலர்தொறுஞ்சிறுதேன் *
நின்றிசைக்கும்வண்சோலைவாயமர்ந்தனனெடுமால் .... *

எ-து. சூரியனெனச்சொல்லுகின்ற பிரகாசமுயர்ந்த அழகியரத்நங்கள்பதித்த சிகரங்களையுடைய மலையென்றுசொல்லுகின்ற, வளத்தைப் பெற்ற கோபுரத்தையுடைய நெடிய அஸ்திருபுரத்திற்சேர்ந்து அதற்குத்தென்றிசையில் குளிர்ச்சிபொருந்தியசண்பகமலர்கள்தோறுஞ் சிறியவண்டுகளிருந்து பாடுகின்ற சோலையினிடத்திலே எழுந்தருளினார் ஸ்ரீகிருஷ்ணதேவர்-எ-று. (௬௯)

அன்றுதூதுகொண்டிலங்கைகதிவிளைத்தவனார்க் ...... *
இன்றுதூதினுந்தெயிற்புறத்திருத்தனனென்னத் ......... *
துன்றுதாதளிமுரல்பசுந்தொடையலானனைக்குச் .... *
சென்றுதூதுவரியம்பினார்சேவடிவணங்கி ......... *

எ-து. முற்காலத்திலே ஒருகுரங்கைத்தூதாகவிடுத்து இலங்காபுரியை

அக்கினிமூட்டிவித்தவர் பஞ்சபாண்டவர்க்காக இன்று தூதாகவந்து மதிற்புறத்துச் சோலையிலிருந்தாரென்று நெருங்கிய மகரந்தத்தையுடையவண்டுகள்பாடுகின்ற பசியமலர்மாலைபணிந்த துரியோதனராஜனுக்குத் தூதுவர் போய்சிவந்தபாதங்களைவணங்கிச் சொன்னார்கள் ()

தொல்லைநாயகன்வந்தனனென்னலுஞ்சுரும்பார் ......*
மல்லன்மாலையானேவலான்மாநகர்மாக்கள் ............*
எல்லைநீண்மதில்வட்டம்யோசனையெழுநூறு ... .....*
சொல்லுமாநகர்த்தெருவினையொப்பனைசெய்தார் ... *

எ-து. ஆதிநாயகனாகியஸ்ரீகிருஷ்ணதேவர் தூதுவந்தாரென்று சொன்னமாத்திரத்திலே வண்டுகள்நிறைந்தவளத்தையுடையமாலையணிந்த மார்பனான துரியோதனராஜனது ஏவலினாலே மகத்தாகிய அஸ்தினபுரத்திலுள்ளவர்கள் விருத்தமாகிய நெடிய எழுநூறுயோசனையளவு செல்லுகின்ற பெரியபட்டணவீதிகளை அலங்காரஞ்செய்தார்கள் ()

மின்னுமாமுகிலினியம்பிய விதங்கண்முன்முழங்க ...... *
மன்னர்மன்னவனெழுந்தனன்மாலெதிர்வருவான் .. ..*
என்னைநீயவற்கெதிர்செல்வதென்றுதன்மருகன் ..... *
தன்னையன்பொடுகைதந்தனன்கொடுமைகூர்சகுனி ...*

எ-து. மின்னுதல்செய்யும் பெரியமேகங்களைப்பார்க்கிலும் நானாவித வாத்தியங்களுமுழங்க அரசர்க்கரசனாகிய துரியோதனன் ஸ்ரீகிருஷ்ணதேவரை எதிர்கொள்ளவெழுந்தான் அதுகண்டு தூதுவருகிறவர்களை எதிர்கொள்வது என்னமரியாதையென்று தன்மருமகனாகிய அந்த துரியோதனராஜனை அன்பினாலேதடுத்துவிட்டான் கொடுமை மிகுந்துள்ளசகுனியானவன்-எ-று. (எஉ)

சீர்வலம்புரித்திகிரிசேர்செங்கையான்றனக்குக் ......*
கார்வலம்புரிக்கோயிலுங்காட்சியுமமைத்துப் ........*
போர்வலம்புரிபரசருங்கிளைஞரும்போற்றத் ............*
தார்வலம்புரித்தோளினனிருந்தனன்றவிசில் .... ........*

எ-து. சிறப்புமிகுந்தசங்குசக்கரமுஞ்சேர்ந்த சிவந்ததிருக்கரங்களையுடைய ஸ்ரீகிருஷ்ணதேவருக்கு மேகங்கள்வலஞ்செய்யப்பெற்ற அரண்மனையும் காணத்தக்கபொருள்களும் பொருந்தச்செய்து யுத்தத்திலேவலிமைபெற்றராஜர்க்களும் பந்துக்களும்வணங்க நந்தியாவட்டமாலைபணிந்தபுயத்தையுடைய துரியோதனராஜன் சிங்காதனத்திலிருந்தான்-எ-று. (எ௩)

தொல்பகீரதிமைந்தனுந்துரோணனுஞ்சுதனும் ......*
வில்விதுரனுங்கிருபனுமுதலியவேந்தர் ............*
மல்குமூவிருபத்துநூறாகியபுவியர் ............*

செல்வநாயகர்க்கியோசனையிரண்டெதிர்சென்றார் ......*

எ-து. அப்போது நெடுங்காலமாயிருக்கின்ற கங்காபுத்திரராகிய வீஷ்மாசாரியரும், துரோணாசாரியரும், அசுவத்தாமாவும், வில்லிலே வல்லவனான விதுரராஜனும், கிருபாசாரியரும், இவர்கள்முதலாகிய அரசர்களும், நெருங்கிய அறுபதுநாறாயிரமண்டலீகரும் ஸ்ரீகிருஷ்ணதேவனை இரண்டுயோசனை தூரத்திலேபோய் எதிர்கொண்டார்கள்-எ-று. (எச)

வந்துவந்திருமருங்கினுமன்னவர்வணங்கப் ...........*
பைந்துழாய்முடிப்பரமனுங்கண்மலர்பரப்பி ..........*
அந்தமாநகர்புகுந்தபின்னரசனிற்புகாமல் ..............*
புந்திகூரருள்விதுரன்வாழ்நலமனைபுகுந்தார் ... .... *

எ-து. வந்துவந்து இரண்டுபக்கத்திலும் அரசர்கள்பணியப் பசிய துளபமாலையணிந்த கிரீடத்தையுடைய ஸ்ரீகிருஷ்ணதேவரும் அவர்களைப்பார்த்துக் கிருபைசெய்து அஸ்தினபுரத்துக்குவந்தபின்பு துரியோதனராஜன் அரண்மனைக்குப்போகாமல் கிருபைமிகுந்த மனதுள்ள விதுரராஜன் வாழ்கின்றவளத்தையுடைய அரண்மனையிலே யெழுந்தருளினார்-எ-று. (எரு)

வேந்தர்யாரையும்விடைகொடுத்தகன்றபின்விமலன் ...*
வாய்ந்தமாளிகைநடுவணோர்மண்டபங்குறுகி............*
ஆய்ந்தவல்லவர்நவமணியழுத்தியவரியே...............*
ஏந்தியாசனமிடப்பொலிந்ததன்மிசையிருந்தான் ...*

எ-து. எதிர்கொண்ட வரசர்களுக்கெல்லாம் செலவுகொடுத்து அவர்கள்போனபின்பு ஸ்ரீகிருஷ்ணதேவர் பொருந்திய உப்பரிகையினடுவே ஒரு மண்டபத்திற்போய்ச் சிற்பங்களாய்ந்த வல்லவர்களாலே நவரத்தினமழுத்திய சிங்கந்தாங்குகின்ற ஆசனங்கொடுக்க வதன்மேல் பிரகாசத்துடனே எழுந்தளியிருந்தார்-எ-று. (எசு)

இருந்தவந்தருளிறைவனையிறைஞ்சிமுனிறைஞ்சிப் ...*
பொருந்துவந்தனைப்பிறப்பையுமிறப்பையும்பிரிந்தான்
மருந்துவர்த்தனையமரருக்கருளியமாயோன் ...........*
விருந்துவந்தனனென்றுளமுருகியவிதுரன் ..... ......*

எ-து இப்படியிருந்து மகிழ்ச்சி பொருந்தியஸ்ரீகிருஷ்ணதேவனை வணங்கினன்-வணங்கிப் பெரியசம்பந்தமாகிய சனனத்தையு மரணத்தையும் நீக்கினன் தேவாமிர்தத்தை வர்த்தனைசெய்துதேவர்களுக்குத் திருப்பாற்கடலைக்கடைந்து கொடுத்தருளிய நாராயணமூர்த்தி தனக்குவிருந்தாகவந்தானென்று மனமுருகிய விதுரனானவன்-எ-று. (எஎ)

கோடிகொண்டவைக்குடிலிற்பாலலர்ந்தகோதனத்தும் ......*

காடுகண்டிடுவண்டெனக்கண்ணிணைகளியாத் ..........*
தோடுகொண்டதார்விதுரனிப்பிறப்பையுந்தொலைத்தான்
வீடுகண்டவர்க்கியம்பவும்வேண்டுமோவேண்டா ......*

எ-று. சங்கேந்திய திருக்கரத்தையுடைய ஸ்ரீகிருஷ்ணதேவரிடத்திலே மலர்ந்திருக்கின்ற கரசரணாதி யவயவமாகிய தாமரைமலர்க்காட்டைக் கண்ட வண்டுகள்போல் தன்னுடைய கண்களிரண்டுங் களிப்பையடைந்து இதழைக்கொண்ட பூமாலையணிந்த விதுரனென்பவன் இந்தப் பிறப்பையும் நீக்கினான் மோக்ஷவீட்டை யறிந்தவர்களுக்குச் சொல்லவும் வேண்டுமோ வேண்டா-எ-று. (௭௮)

உள்ளினானுணர்ந்துள்ளமுமுருகினனெழுந்து ........*
துள்ளினான்விழுந்திணையடிசூடினான்றுயரைத் ........*
தள்ளினான்மலர்தடக்கையாற்றந்துவவமுதை ........*
அள்ளினனெனக்கண்களாலருந்தினனளியோன் .......*

எ-று. நினைத்தான்-நினைத்து மனமுருகினன்-எழுந்திருந்து துள்ளினான் கீழேவிழுந்து இரண்டுபாதங்களையுஞ் சிரசிலேசூடினான்- துன்பத்தை நீக்கினான்-தாமரைமலர்போன்ற விசாலமாகிய கைகளால் தத்துவாமிர்தத்தை அள்ளிவவென்னும்படி கண்களால்பகவான் அழகை யுண்டான் விதுரன்-எ-று. (௭௯)

முன்னமேதுயின்றருளியமுதுபயோததியோ ......*
பன்னகாதிபப்பாயலோபச்சையாலிலையோ ..........*
சொன்னநால்வகைச்சுருதியோகருதிநீயாய்ந்த ..........*
என்னமாதவஞ்செய்ததிச்சிறுகுடிலென்றான் ..........*

எ-று. முன்னமே நித்திரைசெய்தருளிய பழைய பாற்கடலோ சேஷசயனமோ-பசியவடபத்திரமோ-சொல்லியநாலுவேதங்களோ நினைத்து நீர்வருவதற்குமுன் என்னதவத்தைச்செய்தது இந்தச்சிறியகுடிசையென்றான் விதுரன்-எ-று. (௮௦)

மும்மையாகியபுவனங்களைத்தருமுதல்வன் ......*
எம்மையாளுடைநாயகன்விருந்தினுக்கிசைந்தான் ......*
அம்மவென்றனனறுநூறாயிரமடையர் ...........*
தம்மைநோக்கினனவர்களும்விரைவுடன்சமைத்தார் ...*

எ-று. திரிவிதமாகிய புவனங்களையெல்லாமுண்டருளிய முதல்வராய் எம்மை ஆளாகவுடைய ஸ்ரீகிருஷ்ணபகவானானவர் விருந்துக்குச் சம்மதித்தாரென்று ஆச்சரியப்பட்டனன் அப்போது அறுநூறாயிரஞ் சமையற்காரரைப் பார்த்தான் அவர்களுஞ் சீக்கிரத்திலே சமைத்தார்கள்-எ-று. (௮௧)

செந்தசொற்றுழாய்மேல்வரிசிலையவர்க்கும் ..*

கந்தர்ப்பனைகரிக்கும்வெங்கவனவாம்பரிக்கும் ... *
ஐந்துபத்துநூறாயிரமரசர்க்குமெவர்க்கும் ... ... *
இந்திரர்க்குமெய்தாவமுதெனும்படியியற்றி ... *

எ-று. ஸ்ரீகிருஷ்ணசுவாமியுடனே வந்த வெற்றியையுடைய வேல்நெடிய வில்வாள் முதலிய ஆயுதத்தை யுடையவர்களுக்கும் கட்டுத்தறியைப் பொருதுவனவாகிய யானைகளுக்கும் வெவ்விய வேகத்தையுடைய தாவுகின்ற குதிரைகளுக்கும் ஐப்பதுலட்சம் அரசர்களுக்கும் மற்றுமுள்ளவர்களுக்கும் தேவேந்திரனுக்கும் கிடைக்காத அமிர்தமென்று சொல்லும்படி சமைத்ததென்றவாறு. (௮௨)

அமைத்தவாசனைநீர்கொடுஞ்சனையாடிச் ... ... *
சமைத்தபல்கறியடிசிலுவன் விருப்பினாலருந்தி ... .. *
உமைக்குநாயகனிரவொழித்தருளினனுதவ ... ... *
இமைப்பிலாரமுதருந்தியவியல்பெனவிருந்தான் ... *

எ-து. வாசனைகட்டிய நீரைக்கொண்டு ஸ்நானஞ்செய்து, சமைக்கப்பெற்ற அனேகவிதமாகிய கறியமுதுகளையும், அன்னங்களையும், தன்னுடைய விருப்பினாற்புசித்து உமாதேவிக்கு நாயகனாகிய உருத்திரனது இரத்தலையொழித்தருளிய மகாவிஷ்ணுவானவர் கொடுக்கத்தேவர்களமிர்தத்தையுண்ட தன்மையென்றுசொல்லும்படியாயிருந்தா()

வாசநீரும்வண்ணச்சுண்ணமுமுறைமுறைவழங்கிப் ..... *
பூசுறுந்தொழிற்பூசினார்சூடினார்புனைந்தார் ... ... *
வீசுசாமரமிரட்டவெண்மதிக்குடைநிழற்ற ... *
கேசவன்மணிக்கேசரித்தவிசிடைக்கிளர்ந்தான் ... .. *

எ-து. வாசனைகளுடைய பன்னீரும் வளத்தையுடைய பச்சைக்கருப்பூரங்களும் கிரமப்படி கொடுத்துப் பூசுகின்ற தொழிலையுடையசந்தனமுதலியவையும்பூசினார்கள் மலர்முதலியவைகளைச்சூட்டினார்கள் ஆபரணமுதலியவைகளை அலங்கரித்தார்கள் வீசுகின்றசாமரங்களிரட்டவெள்ளிய சந்திரவட்டக்குடைநிழலைச்செய்ய ஸ்ரீகிருஷ்ணதேவரானவர் ரத்நங்களாற்பதிக்கப்பட்டசிங்காசனத்திலேஎழுந்தருளியிருந்தார்

ஞானசஞ்சுக்கவிதுரன்வாழ்மனையினுட்கணும் ... ... *
போனகம்பரிவுடனுகர்ந்திருந்தப்பொழுதில் ... *
தானுமேருவுக்கப்புறத்தவ்வமுதருந்தப் ... ... ... *
பானுவும்பெருங்குடதிசைப்பரவையிற்படிந்தான் .. *

எ-து. தத்துவஞானமாகிய ஜீரானவத்தரித்த விதுரமகாராஜன் வாழ்கின்ற திருமனையில் ஸ்ரீகிருஷ்ணபகவானும் அறுசுவை யுண்டியும் அப்படியே புசித்திருந்த சமையத்திலே தானும் மேருமலைக்கப்புறத்திலிருக்கின்ற அமிர்தத்தைப்புசிக்கச் சூரியனும் பெரியமேற்றி

கைக்கடலிலே மூழ்கினான்-எ-று. (௬௫)

கருதியந்தணர்யாவருந்தன்கடன்கழிப்பச் ............ *
சுருதியென்னும்வெஞ்சாபமேலம்புகைதொடுத்துப் .. *
பருதிதன்பெரும்பகைவர்மேல்விடுதரலிற்பறந்த ..... *
குருதியாமெனவிவந்தெழச்சிவந்ததுகுடபால் .... .... *

எ-து. அப்போது பிராமணர்களெல்லாரும் மாலைப்பொழுதிலே தாங்கள்செய்யும் மாலைக்கடனைக் கழிக்கநினைத்து வேதமென்கிற வெவ்வியவில்லின்மேல் நீராகியபாணத்தைக் கையாற்றொடுத்துச் சூரியனுடைய பெரியசத்துருக்களின்மேல் விட்டபடியால் பரவிய உதிரமென்று சொல்லும்படியாய் மிகவுஞ்சிவந்தது மேற்றிசை-எ-று. ()

தரங்கவாரிதிப்புறத்தெதிர்மலைத்தவெஞ்சமரில் ........ *
உரங்கொள்கூர்நெடும்படைகளாயுவுணர்தமுடலில் .... *
துரங்கமேழுடைக்கடவுளுநிரைநிரைதுணிந்த ........ *
கரங்கள்போன்றனகளைதொறும்வளர்துகிர்க்காடு .... *

எ-து. அலைகளையுடைய சமுத்திரத்துக்கப்புறத்தே எதிரேபொருகின்றவெய்யயுத்தத்திலே வலிமையைக்கொண்ட கூர்மைபொருந்திய நெடியஆயுதங்களால் அசுரருடைய தேகத்திலே ஏழுகுதிரையையுடைய சூரியனும் வரிசைவரிசையாகத்துணித்த கைகள்போலிருக்கின்றன கணுகள்தோறும் வளர்கின்ற பவளக்காடென்றவாறு. (௬௭)

நீதியிற்புகல்பகலெலாநீரசமகளீர் ... ... ... *
மீதுறைறத்தெழும்வெவ்வெயிற்படாவகைவிரித்துப் ... *
போதுபுக்கதென்றிணம்படச்சுருக்கியபூம்பட் ... *
டாதபத்திரம்போன்றனதாமரையடவி ... ... ... *

எ-து. நீதியினாற்சொல்லுகின்ற பகற்பொழுதெல்லாம் நீரசமகளிராகியவர்கள் தங்கண்மேலே பட்டெழுகின்ற வெவ்விய வெய்யிற்படாதவிதம்விரித்துப் பொழுதுபோயிற்றென்று ஒன்றாகச்சுருக்கிய அழகியபட்டுக்குடைகள்போன்றன அங்கேமலர்ந்ததாமரைக்காடு-எ-று ()

கலந்துமங்கலமுழவுவெண்சங்கொடுசறங்க ... ... *
மிலைந்தபூங்குழல்வனிதையர்மெய்விளக்கெடுப்பக் ... *
கலந்ததாமரைதடமெலாங்குவிந்ததுகண்டு ... .. *
மலர்ந்ததாமரைபோன்றதுமாநகர்வட்டம் .... ... *

எ-து. மங்கலபேரிகைகளானவை வெள்ளியசங்கங்களோடுங்கூடிச்சத்திக்க, மலர்மாலைகளைத்தரித்த கூந்தலையுடைய மங்கையர்கள் மெய்யாகிய விளக்குகளெடுக்கக் கலந்திருக்கின்ற தாமரைமலர்கள் தடாகங்களனைத்திலுங் குவிந்ததைக்கண்டு மலர்ந்திருக்கின்ற தாமரைமலரையொத்தது பெரிய அஸ்தினாபுரத்தினுடைய வட்டம்-எ-று. (௬௯)

உரகபுங்கவன்மணிமுடியொப்பன தீபம் .... .... *
இருமருங்கிலுமாயிரமாயிரமேந்த . ... ... .. *
அரியமர்ந்தபேராசனத்தழகுடனிருந்த... ... ... *
புரவலன்றனைப்புண்ணியவிதுரனும்போற்றி ... .. *

எ-து. ஆதிசேஷனுடைய ஆயிரமணிமுடிகளை யொப்பனவாகிய தீபங்களையிரண்டுபக்கத்திலு மிரண்டாயிரமேந்தச்சிங்கத்தினாற்சுமக்கப்பட்ட பெரியவாசனத்தின்மேல அழகுடனே யெழுந்தருளியிருந்த ஸ்ரீகிருஷ்ணபகவானைப் புண்ணியத்தையுடையவிதுரராஜனும் வணங்கி-எ-று

பொங்கராவணைபொலிவறப்போந்துபின்பொதுவர்...*
தங்கள்பாடியில்வளர்ந்துமாமருதிடைத்தவழ்ந்து ... *
கங்கைமாநதிசால்வழிகருணையங்கடலே ... ... ...*
இங்குநீதனித்தெழுந்தவாறுரைத்தருளென்றான் ... *

எ-து. பொலிவினையுடைய சேஷசயனமானது பொலிவு நீங்கவந்து பின்பு ஆயர்பாடியில்வளர்ந்து மகத்தாகிய மருதமரத்திடத்திற்றவழ்ந்து கங்காநதியானது திருவடியிலே பெருகப்பெற்ற கிருபைக்கடலின்மேல இவ்விடத்திலே நீர் தனித்தெழுந்தருளியவாறு அனுக்கிரகம்பண்ணுமென்றான் விதுரன்-எ-று. (௩௪)

தோட்டுவந்துசெந்தேறலுண்சுரும்புசூழ்தொடையாய்...*
காட்டுவந்துமுன்றிரிந்துதங்கடவுநாட்கழித்து ... *
நாட்டுவந்தவர்க்குநல்குருநாடு... ... ...*
கேட்டுவந்தனையென்றலும்விதுரனுங்கேட்டான் ... *

எ-து. பூவிதழிலேவந்து சிவந்ததேனைப்புசிக்கின்ற வண்டுகள்சூழ்ந்த மாலையையுடையவிதுரனே காட்டிலே முன்னே சந்தோஷமாய்த்திரிந்து தங்களுடைய செலுத்தவேண்டியநாளைக்கழித்து காட்டிலேவந்திருக்கின்ற பஞ்சபாண்டவர்களுக்கும் நல்லகுருநாட்டைக் கேட்கவந்தாமென்று அருளிச்செய்தாரதைவிதுரனுங் கேட்டான்-எ-று.()

முழக்கினுயர்முரசுயர்த்தவற்றனக்குரிமை ... *
வழக்கினாலறிந்தடலரவுயர்த்தகோன்வழங்கான்... ...*
சழக்கிலிருதிசையினூரசெழச்செமரில் ... ... *
உழக்குலவுணரவேனென்றவனுரைத்தான் ...*

எ-து. சத்தத்தினாலுயர்ந்த முரசக்கொடியையுயர்த்த தருமபுத்திரமகாராஜனுக்கு உரியபாகத்தை முன்னோர்கள் வழக்கத்தினாலறிந்துவலிமையுள்ள சர்ப்பக்கொடியுயர்த்த துரியோதனன் கொடுக்கமாட்டான் குற்றமில்லாத எட்டுத்திக்கிலும் பெரியசக்திக்கயுத்தத்திலே கலக்கிறதல்லாமல் அறிவேனென்று சொன்னான் விதுரராஜன் ()

வானோர்புரியுடனிர் முதனிலங்குமுகின் ...........*

பாளைவாயளிமுரன்றெழும்பழனநாடுடையன் ........ *
நாளைவாழ்பவர்க்களித்திலனெனி லெதிர்நடந்து ......... *
மூளைவாய்புக முடிப்பெம்வெம்போரெனமொழிந்தான்.

எ-து. வாளைமீன்களானவை தடாகத்திற்குதித்தெழும்ப வளருகின்ற இளங்கமுகின் பாளையினிடத்திலே வண்டுகள் சத்தித்து எழுகின்றவயல்கள்சூழ்ந்த நாட்டையுடைய துரியோதனன் நாளை அவர்கள்பங்கைக்கொடாமற் போனானேயானால் எதிர்போய் மூளையானது வாயிலே புகும்படி யுத்தஞ்செய்து முடிப்போமென்றார் ஸ்ரீகிருஷ்ணதேவர்.

விரைந்துபாய்பரிமன்னவரிதம்படமெலிவுற் .......... *
நிரந்துவேண்டினுங்கிளைஞருக்கொருபொருளீயார் ... *
பரந்தபோரினிலெதிர்த்தவர்படப்படப்பகழி ......... *
துரந்தபோதவர்க்குதவுவர்சொன்னவையெல்லாம் .... *

எ-து. சீக்கிரத்திலே தாவுகின்ற குதிரைகளையுடைய அரசர்கள் இதமுண்டாகும்படிவாடி இரந்துவேண்டிக்கொண்டாலும்பந்துக்களுக்கு ஒருபொருளையுங்கொடுக்கமாட்டார்கள் பாவியயுத்தத்திலே எதிர்த்தவர்களெல்லாரும் சாகும்படியாய்ப் பாணங்களைப்பிரயோகம்பண்ணினமாத்திரத்தில் சொன்னவைகளையெல்லாம் அவர்களுக்குக் கொடுப்பார்கள்-எ-று. (௧௫)

என்றுபாரினியற்கையும்விதுரனுக்கியம்பி ........... *
வென்றுபோர்கெழுநேமியான்விடைகொடுத்தருளி ... *
குன்றுபோற்புயக்காவலர்கொடுந்துடிகறங்க ........... *
மன்றனுண்மலர்ப்பாயலின்மீதுகண்வளர்ந்தான் ..... *

எ-து. இப்படியென்று உலகத்தினுடைய இபற்கையையும் விதுரராஜனுக்குச்சொல்லி யுத்தத்திலே ஜெயித்து விளங்கிய சக்கரத்தையுடைய ஸ்ரீகிஷ்ணபகவானானவர் செலவுகொடுத்து மலைபோலுந்தோளையுடைய காவற்காரர்கள் கொடியசத்தத்தையுடைய பறைகளைமுழக்க வாசனைபொருந்திய அன்றலர்ந்த புஷ்பசயனத்தின்மேல் நித்திரைசெய்தார்-எ-று. (௧௬)

குளிருமாமதிமுகத்தொளிர்குமுதவாய்முல்லைத் .... .... *
தளவவாணகைபரப்பியேசததளமலர்க்கை .... ..... ..... *
அளவிலேகுவித்தளியொடுமகன்றிலாமையினால் ..... *
களிகொடோள்விலைக்கணிகையைப்போன்றதக்கங்குல். *

எ-து. குளிருகின்ற பெரியசந்திரனாகிய முகத்தினிடத்திலேவிளங்குகின்ற செவ்வல்லியாகிய வாயையும் முல்லையரும்பாகியவொளியையுடைய பற்களையுங்காட்டித் தாமரைமலராகியகைகளையளவாகக்குவித்து அளி

யுடனே மலர்ந்திராமையினாலே களிப்பைக்கொண்ட தோளைவிற்கின்றவேசியைப்போன்றது அந்தராத்திரி-எ-று. (௧௭)

அளந்தவாரிருட்கடல்பொறுதொருபுடையண்டம் .... *
பிளந்ததாமெனக்கரும்படாப்பீறியதென்ன ........ *
வளர்ந்தவேழ்கடல்வற்றமேல்வடவையின்முகத்தீ ..... *
கிளர்ந்ததாமெனக்கிளர்ந்தனவிரவியின்கிரணம் ...... *

எ-து அளையப்பெற்ற நிறைந்த இருளாகிய சமுத்திரத்தைத் தாங்கமாட்டாமல் ஒருபக்கத்து அண்டம் பிளந்ததாமென்று சொல்லவும் கரிய வஸ்திரங்கிழித்ததென்னவும் வளர்ந்திருக்கின்ற ஏழுசமுத்திரமும்வற்றிப்போக மேலிருக்கின்ற வடவாமுகாக்கினியானது பிரகாசித்ததென்றுசொல்லவும் விளங்கின சூரியகிரணம்-எ-று. (௧௮)

இகலும்வாளரவுயர்த்தவன்னிருந்ததொல்பதியில் ..... ..... *
அகிலநாயகனொருதனிநடந்தவாறறிந்து ............... *
மகரவாரியிகன்றுமாமருங்குறவளைந்த ... ............ *
திகிரிபோலவந்தெழுந்தனனிரவிகீழ்த்திசையில் .... .... *

எ-து. பகைகொண்ட ஒளியையுடைய சர்ப்பக்கொடியையுயர்த்த துரியோதனனிருந்த பழைய அஸ்தினாபுரத்திலே லோகநாயகராகிய ஸ்ரீகிருஷ்ணபகவான் ஒப்பறத்தனியேவந்ததுதெரிந்து மகரமீனையுடைய சமுத்திரத்தைவிட்டுநீங்கிப் பக்கத்தில்வளைந்த சக்கரத்தைப்போலவந்து உதயமானான் சூரியன்கீழ்த்திசையில்-எ-று. (௧௯)

சோதிவானநதிமைந்தனும்பழையசுருதியாலுயர்துரோணனும்
ஆதியாகவுயராசருப்படியடுத்தமன்னவரநேகரும் ........... *
நீதியாறுலகையந்துபத்தொராயிரவர்நிருபரும்.
தீதிலாதிறலக்குரோணிபதினொன்றுபெற்றமிகுசேனையும் . *

எ-து. ஒளியையுடையகங்காபுத்திரனாகிய வீஷ்மாசாரியரும் பழமையாயுள்ள வேதத்தாலுயர்ந்த துரோணாசாரியர் முதலாக உயர்ந்தராஜாக்களும் பூமியையாளுகின்ற அநேகராஜாக்களும் நீதியையுடைய மூன்றுலக்ஷத்து அறுபத்தோராயிரம் நிருபர்களும், குற்றமற்ற பதினொருக்குரோணியாகிய மிகுந்தசேனைகளும்-எ-று. (௨௦)

தொக்கவெண்கவரியாலவட்டமிகைமொட்டைவாள்சுரிகைதுகி
லுடன், மகக்கலாஞ்சிபலகொண்டுலாவிவருகன்னிமங்கையர்க
ளனைவரும், மிக்கவேசியர்கள் வல்லபல்கலை விதத்திலுள்ளவர்
களியாவரும், தக்கதம்பியரும் வந்துசூழவுயர் தரணிமேனிரு
பர்தம்பிரான் .. ... ... ... ... ... ... ... ... *

எ-து. கூட்டமாயுள்ள வெள்ளியசாமரங்களும், ஆலவட்டங்களும், வளைதடியும், வாளும், உடைவாளும், வஸ்திரங்களும், கைகளிலே கா

ளாஞ்சிகள்கொண்டு உலாவிவருகின்ற இளமையுள்ள மங்கையர்கள் நேசம்பெறும் மிகுந்தபிராமணர்களும்; அனேககலைக்கியானங்களிலே வல்லமையுடையவர்கள் யாவர்களும் தகுதியுள்ள தம்பிமார்களும்வந் திருந்துக்கொண்டிருக்க உயர்ந்தபூமியிலே அரசர்க்கரசனுகியதுரி யோதனன்-எ-று. (௱௧)

நிரைக்கதிர்க்கனகநீள்சுவர்ப்பவளவுத்தரத்திடைநிரைத்தவெண்
பருமணிக்கிரணபற்பராகவயிரத்துலாமிசைபரப்பிவெண் *
டரளவர்க்கவயிடூரியப்புதியகோமளப்பலகைதைத்துமா ...*
மரகதத்தினெடுங்கோடிதூணிடை யமைத்தமண்டபமருங்கரோ

எ-து. வரிசையாகிய கிரணங்களையுடைய பொன்னினாற்செய்தநெடிய சுவரின்மேல் பவளத்தினால் உத்தரம்போட்டு அதன்மேல்பருத்தரத்தினங்களாலும், கிரணங்களையுடையமாணிக்கங்களாலும், வச்சிரங்களாலும் ஆகியதுலாம்வைத்து அதன்மேலே வெள்ளிய முத்துவர்க்கங்களைப்பரப்பி வைடூரியத்தால் புதியனவாகிய அழகையுடைய பலகைதைத்து மகத்தாகிய மரகதத்தோடு கோடிதூண்களை இடையிலேயமைத்த மண்டபத்தில்-எ-று. (௱௨)

முட்டநித்திலநிரைத்தபந்தரிணைகைத்தசிரரிமுகத்ததாய் ...... ...... *
வட்டமெத்தைகொடமைத்தபீடமிசைவாசவன்கொலெனவைகினான்
பட்டவர்த்தனருமகுடவர்த்தனரும்வந்துசேவடிபணிந்தபின் ......*
இட்டபொற்றவிசின்முறைமையாலினிதிருக்கவென்றவனையேவியே.

எ-து முட்டும்படியாய் முத்தினால்வரிசையாகச்செய்த பந்தரின் நகுதலைச்செய்த சிறந்த சிங்கமுகத்தையுடையதாய் வட்டமாகியமெத்தையைக்கொண்டு செய்த பீடத்தின்மேல் தேவேந்திரனைப்போல விருந்தான் அப்போது பட்டவர்த்தனர்களும், மகுடவர்த்தனர்களும், சிவந்தபாதத்தை வணங்கினார்கள், பின்பு வரிசையா யிட்டிருக்கின்ற பொன்னினாற்செய்த ஆசனத்தின்மேல் கிரமப்படி யினிதாகவிருக்க க்கடவீரென்று அவர்களை யேவுதல்செய்தென்றவாறு. (௱௩)

காவன்மன்னவர் முகங்கடோறுமிரு கண்பரப்பியடர்கருதுவோர் *
ஏவலின்கண்வரு தூதனுமிடைய னின்றுநம்மவையிலெய்தினால் ...*
ஓவலின்றியெதிர்சென்றுகண்டுதொழுதுறவுகூறிலினியுங்களேர் ....*
தீவலஞ்செயவடர்ப்பனென்றுநனிசீறினான்முறைமைமாறினான் ...*

எ-து. பூமியைக்காக்கின்ற ராஜாக்களுடைய முகங்களையெல்லாந் தன்னுடைய இரண்டுகண்களாற்பார்த்து நம்மோடு யுத்தஞ்செய்யநினைக்கும் பஞ்சபாண்டவர்களுடைய ஏவுகையினாலேவருகின்ற தூதனாகிய இடையனானவன் இன்று நம்முடைய சபையிலேவந்தால் ஒழிதலில்லாமல் எதிர்கொண்டுவணங்கி யுறவுகொண்டாடினால் இனி உங்க

ளுனை நெருப்புவலங்கொள்ளும்படியாய்க்கொளுத்திவிடுவேனென்று மிகவுஞ்சீறினான் முறைமைமாறினவனாகிய துரியோதனன்-எ-று.()

இந்தவண்ணமுனா செய்துமன்னரு மிராஜராஜனுமிருக்கவே ... *
தந்தவண்ணனுடன் வந்தவண்ணலொளி தங்குகண்டுயிலுணர்ந்தபின் *
சந்தவண்ணமலர் கொண்டுகைதொழுது காலையிற்பலகடன்கழித் *
திந்தவண்ணமு னிருந்தபேரவையி லேயினானிசைகொள்வேயினான்

எ-து. இந்தப்பிரகாரஞ்சொல்லி அரசர்களும் அரசர்க்கரசனாகிய துரியோதனனுமிருக்க வெள்ளைமேனியனாகிய பலபத்திரருடனேபிறந்த ஸ்ரீகிருஷ்ணஸ்வாமி பிரகாசந்தங்கிய நித்திரைதெளிந்தபின்புவாசனைபொருந்திய அழகியமலர்களைக்கொண்டுபூசைசெய்து முடித்து முன்சொன்னபிரகார மிருந்த பெரியசபைக்கெழுந்தருளினார் இசையைக்கொண்ட மூங்கிற்குழலையுடைய ஸ்ரீகிருஷ்ணதேவர்-எ-று (௩௫)

துன்னுகங்கைமகனுந்துரோணனொடு சுதனுநீதிபுனைவிதுரனும் *
மன்னர்மன்னனை யொழிந்தமன்னரும் வந்துசேவடிவணங்கினார் *
கன்னனுந்தலை கவிழ்ந்திருந்தன னழன்றுளஞ்சகுனிசருகினான் ...*
முன்னநின்றவர்க ளிட்டபீடமிசை மொய்த்துழாய்முகிலுமெய்தினான்

எ-து. வீஷ்மாசாரியரும், துரோணாசாரியரும் அசுவத்தாமாவும், நீதியைத்தரித்த விதுரராஜனுந் துரியோதனனையொழிந்த மற்ற அரசர்களும்வந்து சிவந்தபாதத்தை வணங்கினார்கள், அப்போதுகர்ன மகாராஜனுந் தலையைக்கவிழ்ந்துக்கொண்டிருந்தான் சகுனி வெப்பமாய் நினைந்திருந்தான் எதிரே யிருந்தவர்கள் இட்ட ஆதனத்தின்மேல்நெருங்கிய துளபமாலையணிந்த மேகவண்ணராகிய ஸ்ரீகிருஷ்ணதேவரு மெழுந்தருளியிருந்தார்-எ-று. (௩௬)

முன்னசங்குடைகவித்தகாளமுகின் முன்னிருந்தபின்முகங்கொடா *
தென்னகந்தனை யொழித்துநென்னலிடை யிந்தமாநகரிலெய்தியும் *
பொன்னகங்கொள்புயவிதுரனில்லிடைபுகுந்ததென்சொலிதுபுகலெ
ன்று, பன்னசந்தனையுயர்த்தகோவுமுனா பகரமாலுமெதிர்பகருவான் *

எ-து. முன்னே கோவர்த்தனகிரியைக் குடையாகக்கவிழ்த்த கரிய மேகவண்ணரான ஸ்ரீகிருஷ்ணதேவ ரெழுந்தருளியபின்பு முகங்கொடாமல் என்வீட்டைவிட்டுநேற்றைப்பொழுது இந்த ஊரில்வந்தும் வீரலட்சுமியைக்கொண்ட புயத்தையுடைய விதுரன்வீட்டிலேபோனதென்ன இதனைச்சொல்லுமென்று சர்ப்பக்கொடியையுயர்த்த துரியோதனராஜன்கேட்க ஸ்ரீகிருஷ்ணஸ்வாமியும் அதற் கெதிருத்தரஞ் சொல்லுவார்-எ-று. (௩௭)

என்னிலின்னி லொருபேதமில்லையிது வென்னிலின்னில துவெந்நவே,
மின்னின்முன்னில துவிற லெறிப்படைவிதுரன்வந்தெதிர்விளம்பினான்

உன்னிலின்னமுள தொன்றுடன்சலருனக்கவந்தவொருதூதன்யான்,
இன்னிலின்னடிசிலுண்டுநின்னுடல்வெறுக்கவென்னுவதுநீதியோ.
எ-து. என்வீடென்றும் உன்வீடென்றும்பேதமில்லை, இதுஎன்வீடு-அதுஉன்வீடென்றும் சொன்னாலு மின்னல்போல்பிரகாசிக்கின்ற வெற்றியையுள்ள நெடியவில்லையுடைய விதுரராஜன்வந்து எங்கேயிருந்துசொன்னான் அதல்லாமல் உன்னிடத்தில் இன்னமொருகாரியமுண்டு பஞ்சபாண்டவர்கள்சொல்லைச் சொல்லவந்த ஒருதூதன்யான் உன்னிடத்திலே இனிமையுள்ள அன்னத்தையுண்டு ;உன்னுடைய தேகத்தை வெறுக்கநினைப்பது நீதியோவென்றார் ஸ்ரீகிருஷ்ணஸ்வாமி-எ-று.
அரவமல்கியபதாகையாய்மதியமைச்சராயாசழிப்பினும் ....... *
குரவர்நல்லுரைமறுக்கினும்பிறர்புரிந்தநன்றியது சொல்லினும் ... *
ஒருவர்வாழ்மனையிலுண்டுபின்னுமவருடனெழுந்றுபோரவுன்னினும்
இரவியுள்ளளவுமதியமுள்ளளவுமிவர்களேநரகில்லைய்துவார் .. ......*
எ-து. சர்ப்பக்கொடியையுடைய துரியோதனனேபுத்தியையுடையமந்திரிகளாயிருந்து அரசாங்கத்தைபழித்தாலும் ஆசிரியர்சொல்லைத்தடுத்தாலும் ஒருவர்செய்த உபகாரத்தைமறந்தாலும் ஒருத்தர்வீட்டிற்சாப்பிட்டுப் பின்புஅவருடன்பகைத்து யுத்தஞ்செய்யநினைத்தாலும் சூரியசந்திரர்களுள்ளவரைக்கும் இவர்கள் நரகத்திலேயடைவார்கள.எ-று, (௩௯)
சீதநாண்மலர்மடந்தைகேள்வனிவைசெப்பவுந்தெரியவொப்பிலா *
நாதநாயகன்முகத்தில்வைத்தவிரு நயனமுங்கியிகநகைசெயா..... *
தூதனுகிவருதன்மைசொல்லுகெனமன்னர்மன்னனிதுசொன்னபின்
வேதநாறுமலருந்திவண்டுளபவினைசெய்தாரவருமுரைசெய்தான் *
எ-து. குளிர்ச்சிபொருந்திய அன்றலர்ந்ததாமரைமலரிலிருக்கும் இலட்சுமிகாந்தராகிய ஸ்ரீகிருஷ்ணதேவர் இந்தவார்த்தைகளைச் சொன்னமாத்திரத்தில் ஒப்பில்லாதநாதராகிய அவருடைய திருமுகத்தில் வைத்த இரண்டுகண்களையுடையவனுகி மிகவும்நகைசெய்து தூதனுய்வந்த காரியத்தைச் சொல்லுமென்று துரியோதனன்சொன்னபின்பு வேதங்கள்மணக்கின்ற தாமரைமலராகிய நாபியையும் கொக்கின்ற வண்மைபொருந்திய துளபமாலையையுமுடைய ஸ்ரீகிருஷ்ணஸ்வாமியும் அருளிச்செய்தார்-எ-று. (௪௰)
குதிருலாசிழந்துநின்றனைவர் சொன்னசொல்லும்வழுவாதும்போய்
எதிலார்களெனநொந்துதன்னிழலிழந்தகானினிடையெய்தியும் *
தீதிலாவகைகுறித்தநாள்பல கழித்துவந்தனர்செகத்தினில்..... .. *
கோதிலாதகுருகுலமகீபவவருரிமைநண்பொடுகொடுத்தியே..... *
எ-து, உன்துணைவராகியபஞ்சபாண்டவர்கள் சூதாடுகையிலேராச்சி

யபாரத்தையிழந்து சொன்னவார்த்தையுந் தப்பாமற்போய் அயலாரென்றுசொல்லும்படிநொந்து குளிர்ந்த நிழலில்லாத காட்டினிடத்தேபோகியும் குற்றமில்லாதபடி குறித்தநாள் அநேகமுங்கழித்துவந்தார்கள் பூமியிலே குற்றமற்றகுருகுலத்திலே பிறந்தராஜாவே அவர்களுடைய உரிமைபூமியைச்சிநேகத்தோடு கொடுப்பாயென்று பின்னுஞ்சொல்லுவார் ஸ்ரீகிருஷ்ணதேவர்-எ-று. (௱௰௧)

சொல்லவாவுரகதுவசநின்னுரிய துணைவர்தங்களையழைத்துநீ *
வல்லவாறுசிலநாடளித்தவர்களுடன்கெழுமிவாழ்தியேல் .... *
நல்லவாய்மைநிலையுடைமையென்றரசர் நாடொறும்புகழ்வர் நன்பு
கொண்டல்லவாமெனமறுக்கியேயறமுமாண்மையும்புகழுமல்லவே

எ-று. சொல்லைவிரும்புகின்ற சர்ப்பக்கொடிபடைத்த துரியோதனராஜாவே உனக்கு உரிமையுள்ள உடன்பிறந்தவர்களை அழைத்துக் கூடியமட்டில் நீ சிலநாடுகொடுத்து அவர்களுடன் கூடிவாழ்வையேயானால் நல்லசத்தியத்தையுடையாயென்று ராஜாக்கள்சிநேகித்து நாள்தோறும் புகழ்ச்சிசெய்வார்கள் அப்படியல்லவென்று மறுத்தியேயானால் அதுதருமமும் சௌரியமும் கீர்த்தியுமல்ல-எ-று. (௱௰௨)

என்றுகேசவனியம்பவங்கெதிரிராஜராஜனுமியம்புவான் ..... *
அன்றுசூதுபொருதுரிமையாவையு மிழந்துபோயினர்களைவருக் *
கின்றுநீவிரகின்மீளவுந்தரவ வென்னினுலகரிலெளியனோ ...... *
சென்றுகானிலவரின்னமுந் திரிக துறுதியென்றுதனிசீறியே ..... *

எ-று இப்படியென்று ஸ்ரீகிருஷ்ணதேவரானவர்சொல்ல, இங்கே எதிரே ராஜாதிராஜனாகிய துரியோதனராஜன் சொல்லுவான் அன்று சூதாடித் தங்களுரிமையெல்லாம் இழந்துபோயினவர்களாகிய பஞ்சபாண்டவர்களுக்கு இன்று நீர் உபாயத்திலே மறுபடியுந் திரிகிக்கநினைத்தால், அவரைப்போலநானும் எளியவனோ அவர்கள்காட்டுக்குப் போய் இன்னமுந்திரிவது உறுதியென்று மிகவுஞ்சீறி-எ-று (௱௰௩)

நீவெறுக்கிலெனிருந்தமன்னவர்நகைக்கிலென்பலநினைக்கிலென் ...*
போய்நகைக்கிலெனுரைத்தவுண்மைமொழி பொய்த்ததென்றமர்புக
லிலென், வேய்மலர்த்தொடையலைவரொன்றுடன் வெறுத்துவெஞ்ச
மர்விளைக்கிலென், ஊசியிருக்குமிடமெனினுமிப்புவியில் யானவர்க்கர
சளிக்கொடேன் ................................................................ *

எ-று. நீவெறுத்தாலென்ன, இருந்தராஜாக்கள் நகைத்தாலென்ன, பலவாறுநினைத்தாலென்ன, போய்ச்சிரித்தாலென்ன, சத்தியவசனம் பொய்த்துப்போச்சுதென்று தேவர்கள்சொன்னாலென்ன, புஷ்பமாலையைத்தரிக்கிற பஞ்சபாண்டவர்கள் என்னுடனே வெறுத்து வெவ்வியயுத்தஞ்செய்தாலென்ன, ஊசியிருக்கும் அவ்வளவிடமானாலும் இ

ந்தப்பூமியிலே யான் அவர்களுக்கு அரசாட்சி கொடுக்கமாட்டே
னென்றான் துரியோதனன்-எ-று. (௱௰௪)

கார்வழங்குருமெனச்சினத்தொடுகண்ணிலான்மதலைகழறவும். ... *
பார்வழங்கநினைவில்லையாகிலவர்பதிகளாயினும்வழங்குவாய் ....... *
தார்வழங்குதடமார்பவென்னவவைதாமுமன்னவன்மறுக்கவைந் ... *
தூர்வழங்குகெனவுற்றிரந்தனனிவ்வுலகெலாமுதவுமுந்தியான் ... *

எ-து. மேகம்வழங்குகின்ற இடியைப்போல கோபத்தோடு திருதராட்டிரனுடைய பிள்ளையாகிய துரியோதனன் சொன்னபோது-பூமியைக்கொடுக்க உனக்கு மனமில்லாமற்போனால் அவர்களூர்களையாவது கொடுப்பாய் நந்தியாவட்டமாலையணிந்தமார்பனேயென்றுசொல்ல, அவ்வவகளையுந் துரியோதனன்மறுக்க ஐந்தூராவது கொடுப்பாயென்று இரப்பாகக்கேட்டார்-இந்த உலகத்தையெல்லாம்தரப்பட்ட நாபிக்கமலத்தையுடைய ஸ்ரீகிருஷ்ணதேவர்-எ-று. (௱௰௫)

மாடளிக்குலநெருங்குபைந்துளபமாலையாய்மகரவேலைசூழ்! ......*
நாடளித்திடவுமைந்துபேருடையநகரளித்திடவும்வேண்டுமோ ....*
காடளிக்கவதனிடைதிரிந்தெழில்கரந்துபோயினர்கள்காணவோர் ...*
வீடளிக்கினும்வெறுப்பரோவிதனைவிடுகவென்றெதிர்விளம்பினான் *

எ-து. பக்கங்களிலே வண்டுக்கூட்டங்கள் நெருங்கப்பெற்ற பசிய துளபமாலையையணிந்த ஸ்ரீகிருஷ்ணதேவரே மகரமீன்களையுடைய சமுத்திரஞ்சூழ்ந்த நாட்டைக்கொடுக்கவும் ஐந்துபேருடைய நகரைக்கொடுக்கவும் வேண்டுமோ நான்காட்டைக்கொடுக்க அதிலேதிரிந்து அழகழிந்துபோன பஞ்சபாண்டவர்கள் இப்போதுகாணும்படிஒரு வீடுகொடுத்தாலும் வெறுப்பார்களோ இதனை விடக்கடவீரென்று எதிரேசொன்னான் துரியோதனன்-எ-று. (௱௰௬)

தந்தைகாதலுறுதன்மைகண்டிளையதாய்பயந்தவிருதம்பியர்க் .... *
கிந்தவாழ்வுமரசுங்கொடுத்தவனுநின்குலத்தொருவனிங்குளான் ... *
முந்தமாநிலமனைத்தினுக்குமுயர்முறைமையாலுரியவரசருக் ......*
கைந்துமாநகருநீகொடாதொழியிலென்னதாகுமுனதரசியல்..... *

எ-து. தன்னுடையதகப்பனார் ஆசைவைத்ததன்மையைப்பார்த்துச்சிறியதாய்பெற்ற இரண்டுதம்பிகளுக்கு இந்தவாழ்வையும் அரசாட்சியையுங்கொடுத்த பீஷ்மாசாரியரும் உன்குலத்திலேயொருவர்இங்கேயிருக்கின்றார் பழமையாயுள்ள மகத்தாகிய பூமிக்கெல்லாம் உயர்ந்தமுறைமையாலே உரிமைபெற்றபாண்டவருக்கு ஐந்துநகர்மாத்திரையாகிலும்நீகொடாதொழிந்தாயானால் உன்தரசாட்சிஎன்னபிரயோசனத்தையுடையதாகுமென்றார் ஸ்ரீகிருஷ்ணதேவர்-எ-று. (௱௰௭)

ஒருகுலத்தினிலிரண்டுமென்னவருடன்பிறந்துரிமையெய்தினால் ...*

இருதிறத்தவருமொக்கவாழ்வுறுதலெக்குலத்திறுமியற்கையே ......*
பொருகுலக்களிறுவளர்திசைக்கண்மிகுபுகழ்பரப்பியெழுபுவிபெறு
ம். குருகுலத்தவரியற்கைநன்றெனமொழிந்தனன்கரியகோவலன்.. *

எ-து. ஒருகுலத்தி லிரண்டுராஜாக்கள் உடனேபிறந்து உரிமையை யடைந்தால் இரண்டுதிறத்தோரும் ஒக்கவாழ்வையடைவது எந்தக்குலத்திற்குஞ்சுபாவமாகும் பொருகின்ற அஷ்டகஜங்கள் வளரப்பட்ட திக்குகளிடத்தில் மிகுந்த கீர்த்தியைப்பரப்பி ஏழுலோகத்தையும் பெற்ற குருகுலத்தாருடைய இயல்பு நன்றாயிருக்கின்றதென்றுசொன்னார் நீலவண்ணரான ஸ்ரீகிருஷ்ணதேவர்-எ-று. (௱௰அ)

பேரராவணை துறந்தமாயனிவைபேசவன்பினொடுபின்னையும் ......*
சீரராவினையுயர்த்தகோவும்விழிதீயெனும்படிசெயிர்த்துளே......*
பாரராதிருபன்மணிநெடுஞ்சுடிகையாயிரங்கொடுபொறுத்தபார்*
வீரரானவரதல்லவோவுரிமைவேண்டுமோவெனவிளம்பினான் ..... *

எ-து. பெரியசர்ப்பசயனத்தைவிட்டுத்துறந்த ஸ்ரீகிருஷ்ணதேவர் இவைகளைச்சொல்ல உண்மையுடனே பின்னையுஞ்சிறந்த சர்ப்பக்கொடியையுயர்த்த துரியோதனனும் கண்கள்நெருப்பென்று சொல்லும்படி உள்ளேகோபித்து போர்செய்கின்ற சர்ப்பராஜனாகிய ஆதிசேடனால் நெடிய ஆயிரம் உச்சியைக்கொண்டு சுமக்கப்பட்டபூமியானது சுத்தவீரருடையதல்லவோ, ஒருவருக்கு உரிமையும் வேண்டுமோவென்றான்-எ-று. (௱௰௯)

பொய்வளர்ந்தமொழிமன்னன்மற்றிவை புகன்றபின்புபுயவலியினால்,
ஐவர்க்களரசங்கொடாமலடலாண்மைகொண்டெதிரடர்த்தியேல்.*
மெய்விளங்கவருகுருநிலத்தினிடைவந்துவெஞ்சமர்விளைக்கவே....*
கைகழுங்குகௌநின்றதூணிடையறைந்துளாக்குமிலைகாவலன்...*

எ-து. அபத்தம்பேசுகின்ற துரியோதனன் இவைசொன்னபின்பு புஜபலத்தினாலே பஞ்சபாண்டவர்களுடைய இராஜாங்கத்தையுங்கொடாமல் மிகுந்தவலிமைகொண்டு யுத்தஞ்செய்தாயாகில்; உண்மைவிளங்கவருகின்ற குருக்ஷேத்திரத்திலேவந்து வெவ்விய யுத்தஞ்செய்தற்குச் சம்மதித்துக்கைதட்டிக்கொடுவென்று ஸ்ரீகிருஷ்ணதேவர்கேட்கஅருகேயிருந்த தூணிலேயறைந்துசொல்லுவான் துரியோதனன்.()

புன்பிறப்புடையபொதுவர்தங்களொடுபுரவிலாநிரைபுரந்திடும்..*
உன்பிறப்புமிரலோடுகோவியருனைப்பிடித்ததுமறந்துநீ ........ *
மன்பிறப்பிலுயர்குருகுலத்தவர்தம்வாய்மைதானுமொருமாசிலா *
வென்பிறப்புமுணராமலோசபையிலிந்தவாசகமியம்பினாய் ......*

எ-து. இழிந்தபிறப்பையுடைய இடையர்களோடு காட்டினிடத்திலேபசுக்கூட்டங்களைமேய்க்கும் உம்முடையபிறப்பையும் இடைச்சிக

ன்உம்மை உரனுடனேகட்டியதையும் நீர்மறந்துவிட்டு இராஜகுலத்திலுயர்ந்த குருகுலவரசர்களுடைய சத்தியத்தையும் ஒரு களங்கமுமில்லாத என்னுடையபிறப்பையும் அறியாமலல்லவா சபையிலேஇந்தவார்த்தைசொன்னீரென்றான் துரியோதனன்-எ-று. (௱௨௧)

வில்லிலங்குசிலையைவர்வந்தனுகில் யானயர்ந்தெளிதிருப்பனோ, கோவிலங்குபொரலுஞ்சமோகரடகுஞ்சரங்கள்பகைகொண்டதால், மேல்விலக்குமுன்படலர்ந்தகையறையவேண்டுமென்பது நின்மேன்மையோ, நாவிலங்குமென வெண்ணியோமிகவு நன்றுநன்றரசர்நியாயமோ *

எ-து. பிரகாசிக்கின்ற அம்பையும் வில்லையுமுடையபஞ்சபாண்டவர்கள்வந்தால் யானவருந்தி எளிதாகவிருப்பனோமதம்பொழிகின்ற யானைபகைகொண்டதினுல் சிங்கம்பொருதற்குப்பயப்படுமோ யுத்தத்துக்குவருவதானுல் முன்னே கைபோட்டுக் கொடுக்கவேண்டுமென்பது உமக்குமேன்மையோ இப்படிகேட்டது என்னுடைய நாவானது தப்புமென்று நினைத்தோ மிகவும் நல்லது நல்லது அரசருடையநியாயமென்றான் துரியோதனன்-எ-று, (௱௨௨)

அளிவருங்குழல்பிடித்துமன்னவையிலைவருக்குமுரியாளைநான் *
எளிவருந்துகிலுரிந்தபோதருகிருந்துகண்டவர்களல்லவோ ..... *
துளிவரும்புனல்பரிந்த நந்தியிடு சோறுதின்றுயிர்சுமந்துகொண் *
டொளிவரும்படியிருந்தபாவியருமின்றுமானநிலையுணர்வதோ. *

எ-து. ஐந்துபேருக்குமுரியவளாகிய துரௌபதியை இராஜசபையிலே வண்டுகள்மொய்க்கின்ற கூந்தலைப்பிடித்து நான் எளிதாகத்துகிலுரிந்தபோது அருகேயிருந்து பார்த்தவர்களல்லவோ துளியாகவருகின்ற நீரைவிரும்பியுண்டு சோற்றைத்தின்று உயிரைச் சுமந்துகொண்டு பிரகாசமுண்டாகும்படியிருந்த பாவிகளாகியபாண்டவர்களுமின்று அபிமானநிலையறிவார்களோவென்றான் துரியோதனன்

அன்னையானவருமிருவராமுதலளித்ததந்தையர்களைவராம் *
பின்னையாசைகொடுகுருகுலத்துரிமைபெறுவராமொருபிறப்பிலா *
மின்னையாருமடியிலைவரும்பரிவினொடுதனித்தனிவிரும்புவார், என்னையாமவரொடொருகுலத்தரச ரென்பதாண்மையிதுவென்கொலோ *

எ-து. மாதாக்களிருவராம் முன்னேபெற்ற பிதாக்களைந்துபேராம் பின்பு ஆசைகொண்டு குருகுலத்தாரென்று முரிமையைப் பெறுவார்களாம் ஒருபிறப்பிலுமில்லாதவளாகிய ஒருத்தியை ஆ ஆ கிரீடமில்லாத ஐந்துபேரும் அன்புடனே தனித்தனியிச்சிப்பார்கள்யாம் அவரொடு ஒருகுலத்துராஜாக்களென்பது என்ன ஆண்மையிதுவென்னவென்றான் துரியோதனன்-எ-று. (௱௨௩)

உலகமூன்றுமுடையவன்மொழிந்திட நகைத்துவண்டுவரைநாதனு
ம், அலமுற்றவனினைவெலாப்பெரி தறிந்துபேரவையகன்றுபோ
ய்க், கலைமுற்றிலை விதுரன்வாழ்வுடைய கோயிலின்றுநணினுறு
கின்றான், சிலமற்றவர்சினந்தபோதுமொருதீதிலாதவர்செயிப்பரோ *

எ-று. உலகமூன்றையுமுடைய துரியோதனன் இதுசொல்லத்து
வாரகைக்கு அரசராகிய ஸ்ரீகிருஷ்ணன் தானும் நகைசெய்து இவனி
னைப்பெல்லாம்விஷமமென்றறிந்துப் பெரியசபையைநீங்கிப்போ
ய் அழகியவிலையுடையவிதுரன்வாழ்கின்ற அரமனைக்குப் போனார்
நற்குணமில்லாதவர்கள் கோபித்தபோதும் ஒருகுற்றமில்லாதவர்கள்
கோபிப்பாரோ-எ-று. (௱உ௫)

கரித்துமாலைசருகாகவும்புதிய கமலவண்முகம்வியர்க்கவும் . ...*
திருந்துகண்ணிணைசிவக்கவுங்கொடியசெய்யவாயிதழ்துடிக்கவும் *
இருந்தபேரவையினெடிதுயிர்த்திடு மிராஜராஜனவனுக்கிவன், விரு
ந்துசெய்தவுறவென்கொலென்றசரோதிர்விதுரனைவிளம்புவான் *

எ-று, அப்போது பூமாலைகள் கருகிச்சருகாகவும், புதியதாமரை
மலர்போன்றமுகம்வியர்க்கவும், திருத்தமாகியகண்களிரண்டுஞ்சிவக்
கவும் பெருமூச்சுவிடுகின்ற இராஜாதிராஜனாகிய துரியோதனனா
வன் அந்தக்கோபாலகிருஷ்ணனுக்கு இவன் விருந்துசெய்தஉறவு எ
ல்லவென்று ஆசர்க்கின்றோ விதுரனைப்பேசுவான்-எ-று. (௱உ௬)

வன்பினாலவனிவெளவவென்றனது மனையிலுண்டியை மறுத்த
வன், தண்டதாதியொடுமினிதருந்தும்வகை தன்னிலின்னமுதியற்றி
னான், எம்பிதாவொடுபிறந்துமின்றளவு மெந்தனன்னமருந்தியும்
அன்புதானுடையனல்லனெந்தனக்குமுற்றபகையல்லவோ *

எ-று. வஞ்சனையினாலே பூமியைக்கிரகிக்கவேண்டுமென்று நினை
த்து எம்வீட்டிற்போசனத்தைநீக்கின கோபாலகிருஷ்ணனவன் த
ன்னுடையசேனைகளோடும் இனிதாகப்புசிக்கும்படி விதுரன் தம்வீ
ட்டிலே இனிமையுள்ள அமுதுசெய்வித்தான் என்தகப்பனோடேபிற
ந்தும் இன்றளவும் என்னுடையசோற்றைச்சாப்பிட்டும் என்னி
டத்திலே யெவ்வளவும் அன்பில்லாதவனாயிருந்தான் எனக்குவந்தப
கையாளிதனக்குவந்தபகையாளியல்லவோவென்றான் துரியோதனன்

முதல்விலைமுந்தொருவனுடனிசைந்தபொருள் பற்றியின்புறமுய
ங்கினும், அதிகமென்றபொருளொருவன்வேறுதரின் அவனையேயா
முடலறிவரோ. பொதுமடந்தையர் மனத்துமன்னிலிது புதுமையல்
லரிடத்தல்லவாறும், விதுரனென்றவறுநவுகொண்டதோர் வியப்
பையென்கொலினிநகைப்பதே ……… ……… ………*

எ-று. வேசையானவர் முன்னே ஒருவன்கொடுத்ததிரவியத்தை

ப்பற்றி அவனுடன் இப்பங்கொண்டாடினதும் மற்றொருவன் அ
ந்தத்திரவியத்தைக் கொடுப்பானேயானால் அவனைத்தவிர வேறொருத்
தனை அறிவார்களோ பூமியிலே அவர்களுக்கு இதுபுதுமையல்ல ஆ
கையால் அப்படிப்பட்டவன்புத்திரனாகிய விதுரனென்றவனே பிறவு
கொண்டஅதிசயத்தைநானென்னசொல்லிவெளிப்படுத்தன்றான். ()

இன்னவாறிவனுரைத்தபோதவனெழுந்திருந்தவசையென்னநீ *
சொன்னவாற்குருதிசோரவாள்கொடு துணித்துநின்முடிதுணிப்பன்
யால், மன்னரானவரில்குருகுலத்தொருவன் மைந்தனாயினாவெள
விருண் என்னவானவர்நகைப்பரோவடனையுரைத்தநாவு விருத்திபோ

எ-து. இந்தப்பிரகாரம் துரியோதனன்சொன்னபோது அந்தவிது
ரனெழுந்து என்னைக் குற்றஞ்சொன்னவாயிலே ரத்தம்ஒழுக வாளா
யுதங்கொண்டுதுணித்து உன்தலையைவெட்டுவேன்-ஆனால் குருகுலரா
ஜாக்களிலே ஒருவன் பிள்ளையாயினாக்கொன்றானென்று தேவர்கள்ந
கைப்பார்களே அல்லாவிட்டால் என்னைவசைசொன்ன நாவுடனே இ
ருப்பையோவென்று பின்னுஞ்சொல்லுவான்எ-று. (௱௨௩)

கண்டவர்க்குதவியாயதூதென விசைப்பவர்க்குலகமெங்கணும் *
நீண்டவர்க்குதவியாயினையெனநினைத்துநீயெனையடர்த்தியே, மாண்
டவர்க்குதவியாயபேரறமுமிசையுமாண்மையும்வளர்த்திடும், பாண்
டவர்க்குதவியாகிலென்னைமுடி மன்னரானவர்பழிப்பரோ ... ... *

எ-து. இவ்விடத்திலே பஞ்சபாண்டவர்களுக்கு உதவியாகிய தூத
னென்றுசொல்லப்பட்டவராயும், உலகமெல்லாம் வளர்ந்தவராயுமிருக்
கின்ற ஸ்ரீகிருஷ்ணதேவருக்கு விருந்துசெய்து உபகாரமாகினேனெ
ன்றுநினைத்து என்னை நீஉதாசினம்பேசிக் கோபித்தாயே மாட்சிமை
யையுடைய பெரியதபோதனர்க்கும் உதவியாகிய பெரியதருமமும்,
கீர்த்தியும், சௌரியமும், வளர்த்திடுகின்ற பஞ்சபாண்டவர்களுக்கு
உபகாரியானால் என்னைக்கிரீடந்தரித்த அரசரானவர்கள் பழிப்பாரோ
வென்று பின்னுஞ்சொல்லுவான் விதுரராஜன்-எ-று. (௱௨௪)

சொல்லிரண்டுபகலேனினிச்சமரினின்றுவெஞ்சிலைதொடேனென
வில்லிரண்டினுமுயர்ந்தவில்லதனை வேறிரண்டுபடவெட்டினன், மல்
லிரண்டினையுமிருவராகிமுன் மலைந்தகாளமுகில்வந்ததம், இவ்விரண்
டுதினம்வருதற்குலகில் வெண்ணிலாததவமெய்திடும் ... ...... ..... *

எ-து. இரண்டுசொற்சொல்வேன் இனிமேல்யுத்தத்திலேநின்று வெஞ்சி
லையானத் தொடுத்திடேனென்று சிவன் விஷ்ணுவென்னும் இரண்டு
பேர்வில்லினுமுயர்ந்த தன்னுடையவில்லை இரண்டுதுண்டாக வெட்
டினன்-முன்னாலே சாணூரனால்விடப்பட்ட இரண்டுமல்லர்களையும் பல
பத்திரனும், ஸ்ரீகிருஷ்ணருமாகவந்து வென்ற மகாவிஷ்ணுவானவர்

தன்வீட்டில் இரண்டுநாள் விருந்துண்டிருப்பதற்கு உலகத்தில் எண்ணில்லாத தவத்தைப்பெற்றிருந்த விதுரராஜன்-எ-று. (௱௫௧)

அந்தவில்லினைமுறித்தவில்லிபணதாலையும்புகுதவச்சுதன், தந்தவில்லுமரன் வில்லுமொப்பதொரு தாமவில்லினைமுறிப்பமே, முந்தும்வில்லியரி லெண்ணும்வில்லுடைய விஜயன்வந்தமரின்முடுகினால்*
எந்தவில்லியெதிர் நிற்கவல்லனினி யென்றுகாவலரிரங்கினார்....... *

எ-து. அந்தவில்லினை ஒடித்துப்போட்டவிதுரன் தன்னுடையஅரண்மனைக்குப்போக அப்போது மகாவிஷ்ணுவினதுவில்லும், உருத்திரனதுவில்லும்,ஒப்பதாகிய வெற்றிமாலையையணிந்தவில்லை முறிப்பதென்ன, வில்வீரரில் முன்னே எண்ணத்தக்கவில்லையுடைய அர்ச்சுனன்வந்து யுத்தத்திலே ஆரம்பித்தால் இனி எந்தவில்லையுடையவன் அவனெதிரே நிற்கவல்லவனென்று இரங்கினார்கள் இராசக்களெல்லாம்()

காரணத்தும்விடுதானையென்னடலசேனைகளைவியமர்கருதும்வில், வீரனைப்பழுதுனாத்தநீபகையை எங்ஙனேதணியவெல்குவாய், பாரனைத்துமினியவராளும்வகை பண்ணுவித்தனையழிந்ததுன், பேரனைத்துமென வுள்ளழிந்துசில பேசினானுயர்பிதாமகன்...........*

எ-து. மேகமெல்லாம்விடப்பட்ட தாரையைப்போல அனேகபாணங்களையேவியுத்தஞ்செய்யும்வில்லையுடைய விதுரனைப்பழுதுசொன்ன நீபகையை எப்படிஅடங்கச்செயிப்பாய்உலகமெல்லாம் இனியஞ்சபாண்டவர்களாளும்படிசெய்வித்தாய்எம்பேரெல்லாம்இன்றோடழிந்ததென்று மனமுருந்து சிலபேச்சுகள்பேசினார்பீஷ்மாசாரியர்()

பிதாமகன்பரி வுடன்மொழிந்துசில பேசலுமுறும்பரினன், விதாரமார்பனுயர்விதுரனல்லதுவில் வல்லவீரர்பிறரில்லையோ, உதாரசீலனுயரக்கன்கோன்வரிவி லொன்றுமேயமையுமுற்றெழும், பதாதியோடமரி லவரும்படமலைந்திடப்பரணிபாடவே ... ... .... ... *

எ-து. இப்படிபீஷ்மாசாரி அன்புடனேகோபித்துச்சிலவார்த்தைகள்பேசத் துரியோதனனவன்பார்த்துவிசாலமாகியமார்பையுடையஉயர்ந்தவிதுரனல்லாமல வில்லிலேவல்லவீரர் பிறரொருவருமில்லையோ மிகுந்தெழுகின்ற சேனைகளோடு யுத்தத்திலே ஐவருமிறக்கும்படி யுத்தஞ்செய்யவும் பரணிபாடவும் உதாரகுணத்தையுடைய உயர்ந்த கர்ணன்வில்லொன்றுமேபோதுமென்றான்--எ-று. (௱௫௪)

நீயிருக்கநெடு விற்கையாசிரிய னவனிருக்கநிகரற்றவன், சேயிருக்கவிறன் மன்னரிப்படி திரண்டிருக்கவெதிர்சென்றுநீள், மேயிருக்குமிகழிடையனுக்குநல் விருந்துசெய்தவனெவருக்கிலென், போயிருக்கிலென்முறிக்கிலென்சிலை மலைந்துநம்மொடெவர்போர்செய்வார்*

எ-து. பீஷ்மாசாரியராகிய நீயிருக்கத் துரோணாசாரியரிருக்க நிகரி

ல்லாத அவர்குமாரன் அசுவத்தாமாவிருக்க வெற்றியையுடைய அரச ர்கள் இப்படியிருக்க நீ இடைமகனிற் குழலை வாயில் வைத்தூதி இசைபாடுகின்ற இடையனுக்கு எதிர்கொண்டுபோய் அழைத்துவந்து நல்லவிருந்திட்ட விதுரன் வெறுத்தாலென்ன போயிருந்தாலென்ன வில்லையொடித்தாலென்ன வெற்றிமாலையைச்சூடி நம்மோடு போர் செய்வார்களென்றான் துரியோதனன்-எ-று. (௩௫)

என்றுகூற விறலங்கர்பூபதியும் யாவிருக்க விகல்விஜயனைச், சென்று சீறியுயிர்கொள்ளவல்லவர்கள் யாவரொன்று நவில் செப்புவீர், தன்றிறலெள்ளலறிந்தகன்னெனிவ னின்றுதேர்தனிடாவிடினும், அன்றுபோரினிடைகாணலாகுமென தாடல்வெஞ்சிலையினைமேய ....... *

எ-து. இப்படி துரியோதனன் சொல்லக்கேட்ட கர்ணமகாராஜன் சொல்லுவான் யானொருவனிருக்கச் சேபுறக்கொள்ளுமர்ச்சுனனை அடித்துச்சீறி உயிரைக்கொல்லவல்லவர் யாரென்று சொல்லுவீர்கள் தன்றிலே விளாம்பழத்தையுதிர்த்த இருடனையே கோபாலகிருஷ்ணனேயிருந்து அவனுக்கு சாரத்தியஞ்செய்தாலும் அன்றுயுத்தத்திலே என்வில்லினுடைய ஆண்மையைக் காணலாமென்று பின்னுஞ்சொல்லுவான். ()

அம்பரத்தவருடன்றுசீறினுமொரம்பிலேயழியவர்க்கிணையாள், வெம்பணிப்பகழி யேவலாவியுடன் மீளுவானமரில் விஜயனே, வெம்பரிற்புகல விருதளத்தினு மெனக்குநேரொருவரில்லையென், றும்பர் கற்பகமு நாணவண்மையி லுயர்ந்தவீரவிலையுரைசெய்தான் .....*

எ-து. தேவர்கள் கோபஞ்செய்து சீறினாலும் ஒரு அஸ்திரத்தினாலழிந்துபோவார்கள் இதுசத்தியமாகும் பான்வெப்பத்தையுடைய நாகாஸ்திரத்தைவிடவேயானால் அர்ச்சுனன் யுத்தத்திலே உயிரோடுதிரும்புவானோ இரண்டுதிறத்துச்சேனைகளில் இவ்வுலகத்தில் எனக்குநிகராகியவர்களொருவருமில்லையென்றுசொல்லி தேவலோகத்திலிருக்கும் கற்பகவிருட்சமும் நாணும்படிக்கொடையிலுயர்ந்தகர்ணராஜன் ()

திசையனைத்தையும் வளைந்ததானவனாயிரவிலங்குகரத்தாருதிசையின்வாய், நிமியனைப்பொருதுவானவர்க்கரசளித்துவந்தவீரதீரமையான், விசயனுக்குநிகர் நீகொலோகடவுள் வெண்மதிக்குநிகர்வெள்ளிகோ; அசைவில்விற்றொழிலும் வல்லையோவெனவோராசையிலாதவனரற்றினன்.

எ-து. எட்டுத்திசையிலுஞ் சூழ்ந்துகொண்ட அவுணர்களைச் சூரியனுதயமாகிய திக்கிலேகெடுகின்ற இருளைப்போல யுத்தஞ்செய்து தேவர்களுக்கு நீ ஒப்பாவையோ தெய்வத்தன்மையுள்ள வெள்ளிசந்திரனுக்குச் சுக்கிரன் ஒப்பாகுமோ அசைவில்லாத வில்யுத்தத்திலும் வல்லமையுடையதோ வென்று ஒரு தளர்ச்சியுமில்லாத பீஷ்மாசாரியர் சொல்லினார்-எ-று. (௩௬)

அவன்மொழிந்தமொழிதன் செவிப்படலுமருகிருந்தமுதகுருந்தீ இவனுடன்சிலர்பகைக்கின்மற்றவர்தமிசையுமாண்மையுமியம்பினான், புவனமொன்றுபடவரினுமென்றனொடு பொருவராகிலெதிர்பொரவி டாய்,இவனுமென்கணையடுஞ்சமென்றுநனிசீறினனிரவிசிறுவனே

எ-து அந்தபீஷ்மாசாரியர் சொன்னசொல் காதிலேபட்டமாத்தி ரத்தில் சமீபத்திலேயிருந்து அன்னத்தையுண்டு நீர் துரியோதன னுடன் சிலபேர்பகைக்கால் அவர்களுடைய கீர்த்தியையும் வல்லமை யையும் எடுத்துப்பேசினீர் திரிலோகத்தாரும் ஒன்றாய்க் கூடிவந்தா லும் என்னோடு யுத்தம்பண்ணுவார்களோ ஆனால் விட்டுப்பாரும் சுராரும் என்னுடைய பாணத்துக்குப்பயப்படுவாரென்று மிகவுஞ் சீறினான் சூரியன்புதல்வனான கர்ணமகாராஜன்-எ-று. (௱௩௬)

இரவிமைந்தனொடுசெங்கைமைந்தனொரு வீரவாய்மையுமிசைத்திவ ண், பொரவறிந்திடுதுமென்றுவெஞ்சமரிலென்றெழுந்து தனிபோயி னான், அரவவெங்கொடியுயர்த்தகோவுமிகலரசருக்குவிடையருளினா ன், விரவுபைந்துளபமாலையான்விதுரன்மனையிலுற்றதுவிளம்புவான்

எ-து. அப்படிசொல்லியசூரியன்புதல்வனான கர்ணனுடனே கங்கா புத்திரனானபீஷ்மாசாரியர்ஒருவீரவார்த்தையுஞ்சொல்லவில்லை எதனா லெனில் அன்றுவெவ்வியயுத்தத்தில சண்டைபண்ணும்போதுதெரிந் துகொள்ளுவோமென்றுபோனார் அப்போது சர்ப்பக்கொடிபடைத் த துரியோதனனும் வலிமையுள்ள அரசர்களுக்கெல்லாஞ் செலவுகொ டுத்துவிட்டான் முன்பு பசிய துளபமாலையணிந்த ஸ்ரீகிருஷ்ணதேவர் விதுரன் அரண்மனைக்கெழுந்தருளியதைச் சொல்லுவாம்-எ-று. ()

வேறு.

பொருசிலைமுரித்தவீரன் கோயிலிற்புகுந்துதேமிக் ...*
குருசிலைவணங்கியாங்க ணிருப்பவர்க்குருகிநோக்கி ... *
இருசிலையுங்கொண்டுநிந்த விதுரிலத்தியம்புவில்லில் *
ஒருசிலைமுரித்தசீற்ற மென்சொலோவுரைநீயென்றான்*

எ-து. விதுரமகாராஜனுடைய அரமனையிற்புகுந்து சக்கிராயுதத்தை யுடைய ஸ்ரீகிருஷ்ணதேவனாவணங்கி அங்கேயிருக்க, அவர் பார்த்து இரண்டு வற்றானென்றென்று இந்தபெரியபூமியிலேசொல்லப்பட்ட வில்லில் அர்ச்சுனன்வில்லிருக்க உன்னொருவில்லை ஒடித்த கோபத்தி ற்குக் காரணமென்னவென்று சொல்லென்றார்-எ-று. (௱௪[illegible])

ஆவதுகருதானகிலடைச்சர்சொற்கேளானாகில்......*
நீலதெரியானாகில் வினைவருமுணரானாகில் .............*
நாவதுகவானாகில வனுக்கா நடந்திபோரில் ..........*
சாவதுமூவெஞ்சங்கோசகத்துளார்சாற்றுகின்றார் .. *

எ-று. ஒருவன் தனக்கு ஆகவேண்டிய காரியத்தை நினையானாகில் மந்திரிகள் வார்த்தையைக் கேளானாகில் கெடுவது நினையானாகில் விளைவதை அறியானாகில் நாவைக் காப்பாற்றானாகில் அவனுக்காகப்போய் யுத்தத்திற்சாவது பழுதென்றலவா பூலோகத்திலுள்ளவர்கள் சொல்லுகிறார்கள் எ-று. (௱௪௨)

செல்வம்வந்துற்றகாலைத் தெய்வமுஞ்சிறிதுபேணார் . *
சொல்வனவறிந்துசொல்லார் சுற்றமுந்துணையுநோக்கார்
வெல்வதேநினைவதல்லால் வெம்பகைவலிதென்றெண்ணார்
வல்வினைவிளையுமோரார் மண்ணின்மேல்வாழுமாந்தர் *

எ-று. செல்வம் வந்து சேர்ந்தகாலத்தில் தெய்வத்தையும் கொஞ்சமாவது வணங்கார் சொல்லவேண்டியவைகளை அறிந்து சொல்லமாட்டார் பந்துவையுஞ் சிநேகிதனையும் பாரார்கள், ஜெயிக்கிறதே நினைக்கிறதல்லாமல் நமக்குப்பகைவர் வலிமையுடையவரென்று நினையார் தீவினை விளைவதும்பாரார் பூமியின்மேல் வாழ்கின்ற மனிதரென்றான் விதுரராஜன்.

நினைக்கவுந்தொழவுமெட்டாநீயெழுந்தருளப்பெற்றும் ... *
தனக்கிதுதகுதியென்று தமருடன்வாழ்வெண்ணான் ........*
மனக்கொடுங்கனலினன்றன் மனத்திறனுரைத்தபுன்சொல்..... *
எனக்கிசையாமல்யானு மிருஞ்சிலையிறுத்ததன்றோ ....... *

எ-று. நினைக்கவுந் தொழவும் எட்டாதநீரே பிரத்தியக்ஷத்தில் எழுந்தருளப்பெற்றிருந்தும் தனக்கு இது தகுதியென்று ஞாதிகளுடன் வாழ்வதற்கு ஆலோசியான் மனத்திலிருக்கும் கோபாக்கினியையுடைய துரியோதனன் கர்வத்தினாற் சொல்லிய அற்பவார்த்தை எனக்குப் பொருந்தாமல் யானும் பெரிய வில்லை ஒடித்தேனென்றான் விதுரராஜன் ()

மாயனுமகிழ்ந்துநோக்கி மாகுணமுயர்த்தகோமான்.. *
போயருஞ்சேனையோடும் போர்க்களத்துறுகும்போது *
நீயவணுகினில்லா தொழியினுந்தனையைந்தர் ... .. *
தாயமுஞ்செல்வமுற்றுந் தரணியும்பெறுவரென்றான் *

எ-று. அப்போது ஸ்ரீகிருஷ்ணதேவர் மகிழ்ந்து விதுரனைப்பார்த்துத் துரியோதனன் சேனையுடனே யுத்தகளத்துக்குவரும்போது நீ அவ்விடத்திலில்லாமல் நீங்கினால் உன்னுடைய நேசத்தையுடைய குந்திமாதேவி புத்திரராகிய பாண்டவர்கள் தங்கள் பங்கும் பாக்கியமும் பெறுவார்கள் எ-று. (௱௪௩)

ஏற்றியவெரிநெய்வீசி யிந்தனமடுக்கினாலும்..... ......*
காற்றுவந்துறாதபோது கடுங்கனல்கதுவாதன்றே .. *
நீற்றணிநிமலனென்ன நிற்கையிலிற்றதாகில்...... ......*
சீற்றவெஞ்சரங்கடென்புலப்படத்தீண்டலாமே ....*

எ-று. அதிகமாகிய நல்லநெய்யைவிட்டு விறகையடுக்கினாலும் காற்றுவந்து சேராதபோது கடிய அக்கினிமூளாதல்லவா பரமசிவனுக்குச்சயனமாகிய உன்கையில் லொடிந்ததானால்கோபத்தையுடையவேலாயுதமேந்திய துரியோதனன் சேனைகள் யமலோகத்தையடைவது சத்தியம்-எ-று. (௱சசு)

பன்னியபனுவல்கேள்விப் பயனுகர்மனத்தினானை .........*
மன்னவன்மொழிந்தவெல்லாம் பொருத்தியென்றருளிமாயோ
ன், அந்தகர்தன்னில்வண்மை யழகருளாண்மைபேசும் ......*
கன்னனைப்பயந்தகாதற் கன்னிதன்கோயில்புக்கான் .........*

எ-று. பன்னப்பட்ட நூல்களின் கேள்விப்பயன் அறிந்தமனமுடைய விதுரராஜனைத் துரியோதனன்சொல்லியபேச்செல்லாம் பொறுக்கக்கடவையென்று சொல்லி ஸ்ரீகிருஷ்ணதேவர் அந்தநகரத்திலே கொடையையும், அருளையும், ஆண்மையையுமுடைய கர்ணனைப்பெற்ற ஆசையுள்ள குந்திமாதேவியினுடைய வீட்டுக்குப்போனார்-எ-று. ()

மண்டலமதியமன்ன மாசறுமுகத்தினாளும்................*
திண்டிறல்மருகன்றன்னைச் சென்றெதிர்கொண்டுகண்டு ....*
வெண்டிரைமகரவேலை விரிபுனல்முகந்துதோன்றும் .......*
கொண்டலைமகிழ்ந்துகாணுங் குளிர்பசுந்தோகைபோன்றாள்*

எ-று பூலோகச்சந்திரன்போல் குற்றமற்றமுகத்தையுடைய குந்திமாதேவியும் மிகுந்தவலிமையுள்ள மருமகனாகிய ஸ்ரீகிருஷ்ணனைஎதிர்கொண்டுகண்டு வெள்ளிய அலைகளையும் மகரமீன்களையுமுடையசமுத்திரத்தினது விரிந்தஜலத்தையுண்டு வருகின்ற மேகத்தைமகிழ்ந்து பார்க்கின்ற குளிர்ந்த பசியமயிலைப்போன்றாள்-எ-று. (௱சஅ)

யானுறையில்லில்வந்த தென்னமாதவமென்றேத்திக்........*
கானுறைமைந்தர்தம்மைக் கண்டனள்போலவாகி .......*
தேனுறைதுளவினான்றன் செய்யமாமுகத்தைநோக்கி ......*
வானுறைபுரிசையூரர் வந்ததென்னருளென்றாள்;........*

எ-று. நானிருக்கும்படியாகிய வீட்டிலெழுந்தருளியது என்னமாதவமென்றுவணங்கிக் காட்டிலேயிருக்கின்ற பிள்ளைகளைக்கண்டவர்கள்போல மனமகிழ்ந்து தேன்பெருகுகின்ற துளபமாலையணிந்த ஸ்ரீகிருஷ்ணதேவருடைய திருமுகத்தைப்பார்த்து ஆகாயமளாவிய மதிலையுடைய இவ்வூருக்கு வந்தகாரியமென்ன அருளிச்செய்யுமென்றாள் குந்திமாதேவி-எ-று. (௱சகூ)

நின்பெரும்புதல்வர்சொல்ல நெடும்புனனாடுவேண்டி........*
வன்புலியுயர்த்தகோமான் மனக்கருத்தறியவந்தேன்.......*
தென்புலத்தவர்க்குச் சேருஞ் செருத்தொழில்புரிவுணின்றான்*

என்பலசொல்லிருளை யெதிர்க்கவேயிசைந்தேனென்றான்...*

எ-து. உன்னுடையபெருமைபொருந்திய குமாரர்கள்சொல்ல நெடியநீர்வளத்தையுடையநாட்டைவேண்டித் துரியோதனனுடைய உட்கருத்தையறியும்படிவந்தேன் தென்றிசையிலிருக்கின்ற கூற்றுவன் உயிர்களை விரும்பியுண்ண யுத்தஞ்செய்தற்குச் சம்மதித்தான் அவனுடன் பலவார்த்தைகள்பேசி என்னபிரயோசனம் நாளை யுத்தஞ்செய்யும்படிச் சம்மதித்துவந்தேனென்றார் ஸ்ரீகிருஷ்ணதேவர்-எ-று. (௩௫)

என்றலுங்குந்திசாலவிரங்கினளெதிர்ந்தபோரில்...........*
வென்றிடுவார்களாரோவிதியினாலயர்க்களத்தில் ..........*
பொன்றிடுவார்களாரோவென்றுளம்புலர்ந்துநொந்தாள் *
அன்றவடன்னைத்தேற்றியாழியானுரைக்கலுற்றான்......*

எ-து. இப்படியென்று சொன்னமாத்திரத்திலே குந்திமாதேவி மிகவும் இரக்கமுற்றவளாய் எதிர்த்துச்செய்கின்ற யுத்தத்திலே ஜெயிப்பவர்கள் யாவரோவென்றுமனம்வாடிவருந்தினாள் அன்று அவளுக்குத் தேறுதல்சொல்லி ஸ்ரீகிருஷ்ணதேவர் சொல்லத்தொடங்கினார்.எ-று.

தன்மைநானுரைப்பக்கேணின்றந்தைதன்மனையினியும்.....*
கன்னியாஇருந்துவாழுங் காலையோர்முனிவன்வந்து ..........*
சொன்னமந்திரமோரைந்தி னொன்றில்வெஞ்சுடரோன்றன்னை.
முன்னினையவனுமன்றுவந்துநின்முன்புநின்றான்.............*

எ-து. அந்தத்தன்மையை நான்சொல்லக்கேட்பாய் உன் தகப்பன்வீட்டிலே நீகன்னிகையாயிருந்து வாழுங்காலத்தில் துருவாசமுனிவர் வந்து அனுக்கிரகஞ்செய்த ஐந்துமந்திரங்களில் ஒருமந்திரத்தால் சூரியனைநினைத்தாய் அவனும்வந்து நின்னெதிரேநின்றான்-எ-று. ()

கதிரவனருளினாலோர் கனைத்திடைக்காதல்கூர ..................*
மதலையங்கொருவன்றன்னைப் பயந்துபின்வடுவென்றஞ்சி ...*
மிதவையம்பேழைதன்னிற் பொதிந்துநீவிடவப்போதந்...*
நதியமுமகவைக்கங்கை நதியிடைப்படுத்ததன்றே ..........*

எ-து. இப்படிக்குவந்தசூரியனதுகிருபையினாலே ஒருக்ஷணத்திலே ஆசையதிகரிக்க அங்கே ஒருபிள்ளையைப்பெற்றபின்பு குற்றமென்றுநினைந்து நீரிலேமிதக்கப்பட்டபெட்டியிலே குழந்தையை வைத்து நீஆற்றிலேவிட்டாய் அப்போது அந்தஆறுங் கங்கையிலேகொண்டுபோய்விட்டது-எ-று. (௩௭)

காதனின்புதல்வன்றன்னைக் கண்ணிலாவரசன்பொற்றேர்ச் ....*
சூதன்வந்தெடுத்துக்கொண்டு சுதனெனவளர்த்தகாலை .......*

ஆதவனிலையோருங்கன்னனைநாமழைக்கவென்றான் ........ *
தாதையும்விசும்பிற்சொன்ன நமக்கதென்றான் ........ *

எ-து. அப்பெட்டியிலேவைத்து நதியில்விட்ட ஆசையுள்ளஉன்பிள்ளையைத் திருதராட்டிரனுடைய தேர்ப்பாகன் வந்தெடுத்துக்கொண்டுபோய்ப் பிள்ளையாகவளர்த்தகாலத்தில் சூரியன் இவனை எவர்களும் கர்ணனென்று அழையுங்களென்று சொன்னான் அவன்றகப்பனும் அசரீரியாய்ச் சொல்லியநாமதேயமே தகுதியானதென்று சொன்னான்; ()

பண்புடைக்குமரன்கற்றப் படைத்தொழில்பலவுங்கண்டு..... *
நண்புடையுரிமையெல்லா நல்கிமாமுடியுஞ்சூட்டி ............*
வண்பணியுயர்த்தகோமான் வாழ்வவர்க்களித்தான்மற்றைத் . *
திண்பரித்தேர்வல்லோரி லவனைய ரீசெயிக்கவல்லார்.........*

எ-து. குணத்தையுடைய அந்தப்பிள்ளைகற்றிருந்த ஆயுததொழில் அனேகமும்பார்த்துச் சிநேகித்துடைய உரிமையையெல்லாங்கொடுத்துக் கிரீடமுந்தரித்துத் துரியோதனனானவன் செல்வத்தையுங்கொடுத்தான் வலிமையுள்ளபுரவிகள்பூட்டிய இரதங்களுடையஅரசரில் அந்தக்கர்ணனைசெயிக்கவல்லவர்யாவரொன்றார் ஸ்ரீகிருஷ்ணதேவர் எ-று.

அந்தநின்மைந்தன்றானே யருஞ்சிலைவிசயனோடு ...... *
வந்தெதிர்பலையநின்றா னுறவுசற்றறியமாட்டான் .....*
சிந்தையிலையந்திர விதனைநீதெளியச்சொல்லிக் ..... *
கொந்தவிழலங்கலானைக்கூட்டுகவிளாவியென்றான் .. *

எ-து. உன்பிள்ளையாகிய அந்தக்கர்ணன் வில்லிலேவல்லவனாகிய அர்ச்சுனனோடேவந்து யுத்தஞ்செய்யவிருக்கிறான் தனக்குத் தம்பியென்றறியான் மனத்திலிருக்கின்றசந்தேகந்தீர இச்செய்தியை நீதெளியும்படிச்சொல்லிக் கர்ணனைச் சீக்கிரத்தில் ஒன்றாகக் கூட்டிவிப்பாயென்றார் ஸ்ரீகிருஷ்ணதேவர்-எ-று (௱௫௬)

தம்பியரைந்துபேருந்தனித்தனி யேவல்செய்ய .........*
வம்பவிழலங்கலோடு யாமணிமகுடஞ்சூட்டி... ;... .. *
அம்புவிமுழுது நீயே யாளலாம்வருகவென்றால் ... ...*
உம்பர்காவனையகையானுனதுரைமறுத்தானாகில் ... .. *

எ-து. தம்பிமாரைந்துபேரும் வெவ்வேறாஏவற்பணிசெய்ய வாசனைவீசுகின்றமாலையுடனே ரத்தினம்பதித்த முடிசூட்டிக்கொண்டு பூமிமுழுதும் நீயேயாளலாம் வாவென்றுசொன்னால் தெய்வலோகத்திலிருக்கும் பஞ்சதருவுக்குச்சமானமாகிய தியாகத்தைத்தருங்கையையுடையகர்ணன்சம்மதிப்பான் அப்படிச்சம்மதியாமல்மறுத்தானாகில் ()

எரியமுதருந்தக்கானமெரித்தனாகன்றியோனை.....*
அரவின்யக்கர்கோமா னுபுதாகக்கொண்டான் ......*

வரிசிலைவிசயன்றன்மேன் மறுகணை தொடாதிக்காவண்ணம் *
ஒருவரம்வேண்டிக்கொண்டா னுற்றவர்க்குறுதிசெய்வான் *

எ-று. அக்கினிபுசிக்கும்படி காண்டாவனந்தகித்தநாளில் நீங்கியசர்ப்பத்தைக் கர்ணன் அம்பாக்கிக்கொண்டான் நீண்டவில்லையுடைய அர்ச்சுனன்மேல் ஒருகணையேயன்றி மறுகணை தொடுக்காதவிதம் ஒருவரமாத்திரம்வேண்டி வாங்கிக்கொள்வாயென்றார் அடுத்தவர்களுக்கு உறுதிசெய்யும் ஸ்ரீகிருஷ்ணதேவர்-எ-று. (௱௫௮)

மன்றலந்தெரியல்வெய்யோன் மதலையென்மைந்தனென்பது *
தன்றனக்குரைத்தாயாகி லவனுடனணுகவொட்டேன் .... *
சென்றுயிரொழிக்குமாறு செருவினைவிளைத்துப்பின்னை ... *
இன்றெனக்குரைத்தாயையா வென்வினைத்தென்செய்தாயே *

எ-று. வாசமுள்ளமாலையணிந்த சூரியன்புதல்வனாகியகர்ணன் என்பிள்ளையென்பது அன்றேயெனக்குச்சொன்னீரானால அந்தத்துரியோதனனுடனேசேரவொட்டேன் யுத்தகளத்துக்குப்போய் உயிரையொழிக்கும்படி யுத்தத்தைமூட்டிவிட்டுப் பின்பு இன்று எனக்குச்சொன்னாய் ஐயனே என்னசெய்தாயென்றாள் குந்திமாதேவி-எ-று. (௱௫௯)

கான்பட்டகனலிற்பாயுங் கடுங்கணைவிலக்கவெண்ணில் ..... *
வான்பட்டபரவித்தேரோன் மகன்படுமகவான்மைந்தன் .... *
தான்பட்டுமுடியுஞ்சென்று தடாதினியிருந்தேனாகில் ....... *
யான்பட்டகொடுமைநன்றென் றென்பட்டாளிரங்கிவீழ்ந்தாள்.

எ-று. காண்டாவனத்து அக்கினியிலிருந்துவந்த வேகத்தையுடையசர்ப்பக்கணையைவிலக்க நினைத்தேனேயானால் சூரியன்புதல்வனாகியகர்ணன் இறந்துவிடுவான் நான்போய் அதை விலக்காமல் விடுவேனேயானால் இந்திரன்புதல்வனாகிய அர்ச்சுனன் இறந்துவிடுவான் யான்படுகின்றகொடுமை நன்றாயிருக்கின்றதென்று என்னபாடுபட்டாள் இரக்கமுற்று வீழ்ந்தாள் குந்திமாதேவி-எ-று. (௱௬௰)

தேக்குந்தியகிலுஞ்சாந்துஞ் சிந்துநீர்நதிசூழ்செல்வக் *
கோக்குந்தியரசன்பாவை குலைந்தழுங்கொடுமைகண்டு *
மேக்குந்தியுறிகடோறும் வெண்ணெயுந்தயிருமுண்ட... *
வாக்குந்திமலரோன்பின்னு மனத்தளர்வகற்றினானே .. *

எ-று. தேக்கு அகில்சந்தனமுதலிய மரங்களைத்தள்ளிக்கொண்டுசெல்லுகின்ற நீரையுடைய சிந்துநதிசூழ்ந்த குந்திதேசத்து அரசன்புத்திரியானவள் குலைகுலைந்து அழுகின்ற கொடுமையைப்பார்த்து மேமேலெட்டி உறிகளிலெல்லாம் வெண்ணெயுந்தயிரும் உண்டவாயையும் நாபிக்கமலத்தையுமுடைய ஸ்ரீகிருஷ்ணதேவர் மறுபடியும் மனத்தளர்ச்சியை நீக்கினார்-எ-று. (௱௬௧)

பைவருந்தலைகளைந்து படைத்தபன்னகமேபோல ........*
ஐவருமடிதனன்றோ வங்கர்கோன்மடிதனன்றோ ............*
உய்வருஞ்சமரிலாவி யொருவர்போயொருவருய்யார் ........*
நைவருந்துயரமாற்றி நடப்பதேகருமமென்றான் ..........*

எ-து. படத்தையுடைய ஐந்துதலைகளைப் படைத்துள்ள ஒருசர்ப்பம் போலப் பஞ்சபாண்டவர்களும் இறத்தல்நல்லதோ அங்கதேசத்திற் கதிபதியாகிய கர்ணனொருவனு மிறப்பதுநல்லதோ பிழைத்தற்கரிய யுத்தத்தில் ஐந்துபேர்களுக்குள்ளே ஒருவரிறந்து மற்றவர்க ளிருக்க மாட்டார்கள் ஆகையால் நைதற்குவருகின்ற துக்கத்தை நீக்கிக்கொண்டு போவதே காரியமென்றார் ஸ்ரீகிருஷ்ணதேவர்-எ-று. (௱௬௨)

காளமாமுகிலின்மேனிக் கரியநாயகனுந்தேற்றி ...........*
மீளமாதவத்தின்மிக்க விதுரன்வாழ்மனையிலெய்த ... ...*
வாளமால்வரையில்வெய்யோன் குறுகினான்வருணன்றிக்கில்...*
நீளமால்யானைநெற்றி நிரைத்தசெந்திலதம்போன்றே ....*

எ-து. கரியமேகவண்ணரான ஸ்ரீகிருஷ்ணருந்தேறுதல்சொல்லி மறுபடி மகத்தாகிய தவத்திலேமிகுந்த விதுரன்வாழ்கின்ற அரமனைக்குப்போக அப்போது சக்கிரவாளகிரியில் சூரியன் அஸ்தமயமானான் மேற்குத்திசையிலிருக்கின்ற பெரியயானையினுடைய நெற்றியிலிட்டசிந்தூரப்பொட்டுபோல்-எ-று. (௱௬௩)

நாற்றிசையுலகுதன்னி னான்மறையுணர்ந்தோர்யாரும் .....*
போற்றிசைமாலையென்னும் பொற்புடையணங்குவைக ....*
மாற்றிசைவிலாதசெம்பொன் மண்டபந்தனிலாதித்தன் .....*
மேற்றிசைக்கடவுளிட்ட வெயின்மணிப்பீடம்போன்றான்..*

எ-து. நான்குதிசையிலுள்ள உலகத்தில் தேவப்பிராமணர்கள் யாவரும் போற்றுகின்ற கீர்த்தியையுடையமாலைப்பொழுதென்னும் அழகுள்ள மங்கையானவளிருக்க நிகரற்றமாற்றுள்ள செம்பொன்னாற்செய்த மண்டபத்தில் சூரியனானவன் வருணனு விட்டிட்ட ஒளியையுடைய ரத்தினபீடத்தை யொத்தான்-எ-று. (௱௬௪)

கொண்டமென்சிறைவண்டெனுங் கொழுநருக்கிடங்கொடா
மல், முண்டகக்குலத்துமாதர் முகங்குவித்தூடிநிற்பக் .....*
கண்டெதிர்கொண்டுகாதற் கயிரவக்கணிகைமாதர் ..........*
வண்டுறைநின்றுதங்கள வாய்மலர்ந்தழைக்கலுற்றார் ........*

எ-து. மெல்லிய சிறகைக்கொண்ட வண்டுகளென்னும் நாயகருக்கு இடங்கொடாமல் தாமரைக்கூட்டமாகிய மங்கையர்கள் மலராகியமுகத்தைக்குவித்துக்கொண்டு கோபித்துநிற்கப்பார்த்து அல்லிகளாகிய தாசிகள் எதிர்கொண்டு வளத்தையுடைய நீர்த்துறையிலிருந்துதங்கள்

வாயைத்திறந்து அழைக்கின்றார்கள்-எ-று. (௱௬௫)

கானெலாமலர்ந்தமுல்லை கனைமீதெழுந்ததென்ன ......... *
வானெலாம்வயங்குதாரை நிரைநிரைமலர்ந்துதோன்ற ...... *
மேனிலான்விழவின்வைத்த வெள்ளிவெண்கும்பமென்னத் *
தூநிலாமதியம்வந்து குணதிசைதோன்றிற்றம்மா .......... *

எ-து. காடெல்லா மலர்ந்தமுல்லைகள் ஆகாயத்தின்மேலும் எழுந்ததென்று சொல்லும்படி அவ்வாகாயத்தில் பிரகாசம்பொருந்தியதாரகைகள் கும்புகும்பாய்ப் பரவித்தோன்ற மன்மதனுடைய உச்சவத்தில்வைத்த வெள்ளியாற்செய்த சுவேதகும்பமென்றுசொல்லிப் பரிசுத்தமாகிய கிரணத்தையுடைய சந்திரனானவன்வந்துகிழக்குத்திசையில் உதயமாயினன்-எ-று. (௱௬௬)

தூவியநிலவுதோன்றத் துணைவரைப்பிரிந்தோர்கண்கள் *
காவியுமாம்பலும்மைக் கருவிளமலரும்போன்ற ... *
மேவியமகளிர்கண்கள் மீனெறிபரவையேழும் ...... *
தாவியவுழையுங்காசற் சகோரமும்போன்றமாதோ .... *

எ-து. பரிசுத்தமாகிய இயல்புடைய சந்திரனுதயமாகப் புருஷரை நீங்கின மங்கையருடையகண்கள் நீலோற்பலமலராயும் அல்லிமலராயும் காக்கணமலராயும் ஒத்தன புருஷரைக்கூடிமங்கையருடைய கண்கள் மீன்வீசுகின்ற ஏழுசமுத்திரத்தையும் தாவுகின்ற மானையும் ஆசையையுடைய சகோரப்பட்சியையும் ஒத்திருந்தன-எ-று (௱௬௭)

ஆரவியல்குலாரு மகிழ்நருமன்புகூர .... ..... ........... ...... *
ஈரவியவமளியெய்தி வீதிமாநகரிலெங்கும் .................... *
பரவையினிமிர்ந்தவேலை யமர்ந்தபின்பரித்தேர்வேந்தன்.. *
இரவிடைச்சூழ்ந்தவண்ண மின்னதென்றியம்புகின்றாம் ..... *

எ-து. பாம்பின்படம்போலும் நிதம்பத்தையுடைய மங்கையர்களும் புருஷர்களும் அன்புசிறக்கச் சப்ரகூடமஞ்சத்தை யடைந்து வீதிகளையுடைய பட்டணமெல்லாஞ் சமுத்திரம்போல முழக்கு முழக்கம் அடங்கியபின்பு அர்த்தராத்திரியிலே துரியோதனன் ஆலோசனைசெய்தவிடம் இன்னதென்று சொல்லுவோம்-எ-று. (௱௬௮)

தந்தையுந்தம்பிமாருங் கர்ணனுஞ்சகுனிதானும் .......... ..*
சிந்தையிற்றெளிந்தகல்விச் செழுமதியமைச்சர்தாமும் ...... *
முந்தாவுயர்த்தகோமா னேவலான்முழுதுமெண்ணி...... ...*
மந்திரமிருப்பான்வந்தோர் மண்டபங்குறுகினரே ....... . *

எ-து. தகப்பனாகிய திருதராட்டிரனும் தம்பிமார்களும் கர்ணனும் சகுனியும் மனதினாலே யாராய்ந்து தெளிவாகவறிந்த கல்விநிறைந்த செழுமையுள்ள புத்தியையுடைய மந்திரிகளும் சர்ப்பக்கொடியைய

யுபர்த்த துரியோதனராஜன் வேலாலே முழுதும் ஆலோசனைசெய்யும்பொருட்டு ஒருமண்டபத்திலே வந்திருந்தார்கள்-எ-று. (௱௬௯)

நீதறுமதிவல்லோரைச் செழுமதிக்குடையானோக்கிப் ..... *
பாதகவனத்திற்போன பாண்டவர்தம்மையின்று .... ........ *
மேதகவழைத்துநாடு வேண்டுமினென்றமூட்டும் .........*
யாதவன்றனித்துவந்தா னென்செய்வதியம்புமென்றான் ... *

எ-து. குற்றமற்றமந்திரிகளை செழுமையுள்ள சந்திரவட்டக்குடையையுடைய துரியோதனன்பார்த்துக் கொடுமையாகிய காட்டுக்குப்போனபஞ்சபாண்டவரை இங்கேமேன்மையாக அழைத்து உங்கள் நாட்டைக்கேளுங்களென்று மூட்டிவிட்ட கோபாலகிருஷ்ணனானவன் தனித்துவந்தான் அதற்குநாமென்னசெய்வதுசொல்லுமென்றான்.

பொரும்படைமந்தன்கூறத்தந்தையும்பொருந்தச்சொல்வா
ன், அரும்புலிவலையிற்பட்டால் விடுவரோவெயினரானோர் ..*
வரம்பில்வெஞ்சேனையோடும் வளைந்துநீமாயன்றன்னைக் ... *
கரும்பொழுதகலுமுன்னே கொல்வதேகருமமென்றான் .... *

எ-து. யுத்தஞ்செய்கின்றசேனைகளையுடைய துரியோதனன்கேட்கத் தகப்பனாகிய திருதராட்டிரனும் பொருந்தும்படிசொல்லுவான் அருமையாகிய புலியானது வலையிலேபகப்பட்டால்வேடரானவர்கள்விட்டுவிடுவார்களோ அளவில்லாத வெவ்வியசேனையோடு நீவளைந்துகொண்டு கோபாலகிருஷ்ணனை இராத்திரியானது நீங்குமுன்னே கொன்றுபோடுவதேநல்லகாரியமென்றான்-எ-று. (௱௭௧)

கண்ணிலானுரைத்தமாற்றங் கேட்டலுங்காவலோரில்........ *
மண்ணிலாரிதற்குமுன்பு தூதனைவளைந்துகொன்றார்........ *
எண்ணிலாவிந்தவண்ணம் மெய்வழிக்கேற்றதென்று .......... *
வெண்ணிலாமுறுவல்செய்து விகர்ணனும்விளம்பலுற்றான் .. *

எ-து கண்ணில்லாத திருதராட்டிரன்சொன்ன பேச்சைக்கேட்டவளவில் இராஜாக்களில் பூமியிலே எவர்கள்இதற்குமுன்னே தூதர்களை வளைந்துகொன்றவர்கள் எண்ணிக்கையில்லாத இந்தவிதம் எந்தவழிக்கு ஏற்றதென்று. வெள்ளிய நிலாவைப்போற் சிரித்துச்சொல்லத் தொடங்கினான் விகர்ணன்-எ-று. (௱௭௨)

மூத்தவரிளையோர்வேத முனிவரர்பிணியின்மிக்கோர் ..... ....*
தோத்திரமொழிவோர்மாதர் தூதரென்றிவரைக்கொல்லில்...*
பார்த்திவர்தமக்குவேறு பாவமற்றிதனிலில்லை ............... *
பூத்தெரிதொடையாய்பின்னு நரகினும்புகுவரென்றான்......*

எ-து. மூத்தவர்கள் இளையவர்கள் வேதப்பிராமணர்கள் மிகுந்தநோயாளிகள் துதிசெய்பவர்கள் மங்கையர்கள் தூதர்களென்று செல்லு

ப்பட்ட இவர்களைக்கொன்றால் அரசர்களுக்கு இதைவிட வேறேபாவமில்லை பூவினாற்றொடுத்த மாலையணிந்த அரசனே அவர்கள் பின்னும் நரகத்திற் புகுவர்-எ-று. (௩௭௪)

பழியுடைப்பகைஞரேனுந் தன்பெரும்பதியில்வந்தால் .... *
அழிவுறக்கோறல்பாவ மாண்மையுமல்லவென்பார் .......... *
கழிகடற்சேனைசூழக் கங்குலின்வளைத்திட்டாலும்...... ...... *
எழிலுடைக்கொண்டல்வண்ணனகப்படானெவர்க்குமென்றான்

எ-து. பழியையுடைய சத்துருக்களானாலும் தன்னுடைய பெரிய ஊரில்வந்தால் அழிவையுடைய அவர்களைக்கொல்லுதல்பாவமல்லவீரமுமல்லவென்று சொல்லுவார்கள் மிகுந்தகடல்போன்றசேனைகள் சூழஇராத்திரியிலேவளைந்துகொண்டாலும் அழகுபொருந்திய மேகவண்ணரான கிருஷ்ணதேவர் ஒருவருக்கும் அகப்படாரென்றான் விதுரன் .()

வெம்புயவலியான்மாதை வரிதுகிலுரிந்தவீரன் ........ .... *
தம்பியைமுனிந்துசீறித் தமையனைநோக்கிச்சொல்வான்... *
வம்பவிழலங்கன்மார்பா மந்தணமுனாக்கலுற்றால் .......... *
இம்பர்மற்றியாதுசொல்ல விளைஞரையழைத்ததென்றான்... *

எ-து. வெவ்விய புஜபலத்தினாலே துரோபதியைத்துகிலுரிந்த துச்சாதனனானவன் தம்பியைப்பார்த்துக்கோபித்துத்தமையனைப்பார்த்துச்சொல்லுவான் வாசனைபொருந்திய மாலையையணிந்தமார்பனே ரகசியம்பேசத்தொடங்கினால் இவ்விடத்திலே சிறியோர்களை அழைத்து என்னகாரியஞ்சொல்ல-எ-று. (௩௭௫)

அதிரதர்முதலாயுள்ள வலவீரர்களைத்துநிறுப்ப ........ *
எதிர்முகிறவழுங்கோயி லெரியினையெங்குமூட்டி.... *
விதுரனுமவனுஞ்சேர வெந்திடமலைதலல்லால் ...... *
மதிபிறிதில்லையின்னே வல்விரைந்தெழுமினென்றான் *

எ-து அதிரதர்முதலாகிய அரசர்களெல்லாரும் சூழ்ந்துநிற்கமேகந்தவழ்கின்ற அரண்மனையிலே நெருப்பை மூட்டிவிட்டு விதுரனுங்கோபாலகிருஷ்ணனுஞ்சேர வெந்துபோகும்படி செய்வதல்லாமல் வேறேயோசனையில்லை சீக்கிரத்திற்புறப்படுமென்றான் துச்சாதனன்()

செங்கதிரெழுந்துசீறிற் செறியிருணிற்பதுண்டோ ........ *
இங்கிவனிருந்தவில்லி லெரியிடவேண்டுமோதான் .......... *
வெங்கணையொன்றினாலே விளிந்திடவென்றுமீள்வேன்...... *
சந்துவினைமுயலெனென்று கர்ணனுங்கனன்றுசொன்னான் .... *

எ-து. சூரியன் கிரணங்களைவீசிப் புறப்பட்டானேயானால் உலகங்களைமூடிய இருளானது நிற்குமோ இவனிருந்தவீட்டிலே நெருப்புப்போடவேண்டுமோ வெவ்விய பாணமொன்றினாலே சாகும்படி

செய்து மீள்வேன் இப்பொழுதுதானே புறப்படுகவென்று கோ
பித்துச்சொன்னான் கர்ணமகாராஜன்-எ-று. (௱எஎ)

பதிப்பெயர்ந்தேகநாளைப் பகைவரைக்கூடுமாகில் ......... *
விதிப்பயனென்ன நம்மை வெஞ்சமர்வெல்லவொட்டான் ... *
மதிப்பதென்வேறுகள்ள மாயனைமனையிற்கோலிச் ......... *
சதிப்பதேகருமமென்று சகுனியும்பின்னுஞ்சொல்வான் .. *

எ-து இந்தவூரைவிட்டுப்போய் நாளை நம்முடையபகையாளிகளுட
னேகூடுவானேயானால் தடுக்கக்கூடாதவிதிப்பயனைப்போலநம்மைவெ
ல்லிய யுத்தத்திலேஜெயிக்கவொட்டான் வேறே யோசிக்கவேண்டிய
தென்ன கோபாலகிருஷ்ணனை வீட்டிலேவைத்து வஞ்சிப்பதேகாரி
யமென்று சகுனியானவன் பின்னுஞ்சொல்லுவான்-எ-று. (௱எஅ)

கொல்லுவதியற்கையன்று குழிபறித்தாசனமோடு ............*
மல்லரையிருத்திமேலோ ராசனம்வகுத்துநாளை ............ *
எல்லிடையழைத்துவீழ்வித் தியலரும்விலங்குபூட்டித் ......*
தொல்லருஞ்சிறையில்வைத்தல் தூதருக்குரிமையென்றான் *

எ-து. கொல்லுவது இயற்கையல்ல குழிவெட்டி இராட்சதர்களுட
னே மல்லர்களையும் உள்ளேவைத்து மேலே ஒரு ஆசனஞ்செய்து நா
ளைராத்திரியிலே அழைத்து அதிலேவிழும்படிசெய்து அரியவிலங்
குபூட்டி அரிய சிறையிலேவைப்பது தூதருக்கு இயற்கையென்று
சொன்னான் சகுனி-எ-று. (௱எகூ)

மாதுலனுரைத்தமாற்ற மருகனுமினைந்துகங்குற் ......*
போதிடையனேகமல்லர் வருகெனப்புகன்றுதானும்.. *
நீதியினிருந்துதாழ நிலவறைசமைத்தபின்னர் ........ *
ஆதிநூறாயிரம்பே ரரக்கரையதனுள்வைத்தான்...... *

எ-து. மாமனாகிய சகுனிசொன்ன சொல்லுக்குத் துரியோதனனும்
இசைந்துகேட்டு இராத்திரியிலே அநேகமல்லரைவரச்சொல்லித்தா
னுமிருந்துகொண்டு நிலவறையுண்டாக்கி அதிலே முன்னே நூறாயி
ரம் அரக்கரைவைத்தான்-எ-று (௱அ௰)

மல்லர்பப்பரவர்தம்மை மற்றதனிரட்டிவைத்தான் ..........*
வில்லுடைவீரர்தம்மை வேறதிலிரட்டிவைத்தான் .............*
பல்படைவல்லோர்தம்மைப் பதின்மடங்கதனில்வைத்தான் *
அல்லிலோர்கடிதுதன்னி லரியினையழைக்கவென்றே ......*

எ-து. மல்லரையும் பப்பரவரையும் அதற்கிரட்டிப்புவைத்தான் வில்
வீரரை அதற்கிரட்டிப்புவைத்தான் ஆயுதத்திலேவல்லவர்கள் பலபே
ரை அதிற்பத்துமடங்காயதிலேவைத்தான் ராத்திரியிலேஒருநாழிகை
யில் அரியையுடைய ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியை அழைக்கவேண்டுமென்று.

பெரும்பிலவறையைவேயின் பிளப்பினானிறைத்துமூடி ...*
அரும்பெறன்மணிகளாலோ ராசனமதன்மேலாக்கிச் ....*
சுரும்பமர்மாலை தூக்கித் தொழிலுடைவிமானமேற்றி ......*
வரம்பிலாவென்றிவேலான் மாறிலாவண்ணஞ்செய்தான் ....*

எ-து. பெரியபிலத்துவாரத்தினுடைய அறையை மூங்கிற்பிளப்பினால்நிறைத்துமூடிவிட்டுப்பெறுதற்கரியரத்தினங்களாலே ஒருஆசனம் அதின்மேலுண்டாக்கி வண்டுகள்மொய்க்கின்றபூமாலைதொங்கக்கட்டிச்சித்திரவிமானம்ஒன்றுமேலேவைத்து அனேகம்வெற்றியைத்தரித்த வேலையுடையதுரியோதனன் மாறுபாடுதெரியாதவிதஞ்செய்தான் ( )

அடியவர்மனத்திலுள்ள வாரிருட்கஞ்சுதீர்க்கும் .........*
நெடியவனிருக்கவென்று நிலவறைவிரகிற்செய்த .....*
கடியவனியற்கைக்கஞ்சிக் கங்குலுங்கடிதிற்போகப் ... *
படியவர்துயிலும்போகப் பரிதியுமுதயஞ்செய்தான்...*

எ-து. அடியவர்களுடைய மனதிலேயுள்ள நிறைந்த அஞ்ஞானவிருளை நீக்குகின்ற ஸ்ரீகிருஷ்ணதேவரிருக்கவேண்டுமென்று; உபாயமாய் நிலவறைசெய்த கடியவனாகிய துரியோதனனுடைய குணத்திற்குப் பயந்து இராப்பொழுதும் சீக்கிரத்திலேநீங்கிப் பூமியிலுள்ளவர்கள் நித்திரையும்நீங்கச் சூரியனுதயஞ்செய்தான-எ-று. (௱௮௫)

சிறந்தருசிகைநாகத் திரண்மணிபலவுஞ்சிந்தி ................*
நிரந்தரமருவிவீழ நிறந்திகழுதயக்குன்றிற் ................*
பரந்தெழுமருக்கன்சூழ்ந்த படரிருட்கங்குல்கண்டு ..........*
புரந்தரன்கோயிலிட்ட பொங்கொளித்தீபம்போன்றான் .... *

எ-து. சர்ப்பத்தினுடைய உச்சியிலிருக்கின்ற இரட்சிகையையுடைய அனேகமணிகளுஞ்சிதறி எப்போதும் அருவிகளொழுகுகின்றநிறத்தையுடைய உதயகிரியிலே பரவியெழுகின்ற சூரியன் எப்படி யிருக்கின்றானென்னில் இருள்சூழ்ந்த இராத்திரியைக்கண்டு இந்திரனானவன் தன் அரமனைக்கிட்ட மிகுந்தஒளியையுடையதீபத்தையொத்தான்-எ-று.

தொடர்ந்தொளிருதயராகத் தோடுறநெருங்கிமென்மேல் ...*
அடர்ந்தரிபரந்தகாம னுசமவேதம்பாடத்.........................*
தடங்கயன்மலர்ந்துலாவுந் தாமரைமுகமுங்காதல் ............*
மடந்தையர்முகமுஞ்சேர மணம்பெறமலர்ந்தமாதோ......*

எ-து. தொடர்ச்சிகொண்டுபிரகாசிக்கின்ற உதயராகத்துடனேநெருங்கி மேலும்மேலும் வண்டுகள்பரவி மன்மதனுடைய ஆகமவேதங்களைப்பாடத் தடாகத்திலே பெற்கெண்டைகள் சண்டையிட்டுலாவுகி

ன்றதாமரைமுகையினுடையமுகமும் ஆசையையுடையமாதர்கள்முசமும் ஒருங்குசேரபணம்பெறும்படி மலர்ந்தன-எ-று. (௱௮௫)

இருந்துயிலுணர்ந்தவேந்தர் யாவருமிரவிற்சற்றும் ......*
வருந்துயிலிலாதகண்ணன் வாழ்பெருங்கோயில்புக்கார் .....*
பெருந்துயிலனந்தபோகப் பேரணைதுறந்தமாலும் .... ....*
அருந்துயிலெழுந்துகாலை யருங்கடன்முறையிற்செய்தான்...*

எ-து. பெரியநித்திரைநீங்கிய அரசர்களெல்லாரும் சற்றாகிலும் நித்திரையில்லாத ஸ்ரீகிருஷ்ணதேவர் வாழ்கின்ற பெரிய சோயிலுக்குப் போனார்கள் அப்போது சேஷசயனத்திலே அறிதுயில்நீங்கியமகாவிஷ்ணுவும் அரியநித்திரைநீங்கிக் காலையிற்செய்யுங் கடன்களெல்லாஞ் செய்தார்-எ-று. (௱௮௬)

மாதவனிருந்தகோயில்வந்தடிவணங்கிமன்னன் ...............*
தூதுவராழியங்கைத் தோன்றலேதுளபமாலே...... .......*
யாதவகுலத்தோரேறே யெழுந்தருள்கென்றனின்றேம் ... *
மேதகுமரசனென்றார் முகுந்தனும்விரைவிற்சென்றான் .....*

எ-து. இப்படி ஸ்ரீகிருஷ்ணதேவரிருந்தஅரண்மனையில் துரியோதனன்விடுத்ததூதர்கள்வந்து அவர்பாதத்தில் வணங்கிச் சக்கிராயுதத்தையுடையஅரசனே துளபமாலையணிந்தமாயனே யாதவகுலத்தோருக்கு ஒருஆண்சிங்கமே எங்களரசன் உம்மைஅழைத்துக்கொண்டு வரச்சொன்னானென்றார்கள் அதுகேட்டு ஸ்ரீகிருஷ்ணபகவானும் சீக்கிரத்திற்போனார்-எ-று. (௱௮௭)

கந்தமிகளித்துவேந்தன் கண்ணிலாவரசுங்கங்கை .......*
மைந்தனுமுதலாயுள்ள மன்னருமதிவல்லோரும் ......*
தந்திரவகையுமேனை யிளைஞருந்தன்னைச்சூழ.........*
இந்திரனிருக்கையன்ன கோயிலூடினிதிருந்தான்.....*

எ-து. கட்டுததறியையபடுகின்ற யானையையுடைய துரியோதனராஜனவன் திருதராட்டிரனும் பீஷ்மாசாரியர்முதலாகிய அரசர்களும் மந்திரிகளும் தந்திரிகளும் மற்றத்தம்பியார்களும் தன்னைச்சூழ இந்திரனுடைய அரசிருக்கைபோன்றகோயிலிலே இனிதாகவிருந்தான்

நாமவேலரசரோடு நால்வகைச்சேனையோடும் .........*
மாமுகில்கண்ணன்வந்தா னென்றனர்வரவுகேட்டு ....*
வீமலர்த்தொடையினானும் வேத்திரத்தவரைநோக்கித் *
தாமரைத்தடங்கண்மாயன் றன்னையேவிடுமினென்றான்*

எ-து. அச்சத்தைத்தருகின்ற வேலாயுதத்தையுடைய அரசர்களோடும் ரதகெஜதுரகபதாதிகளாகிய நால்வகைச்சேனையோடும் மேகவண்ணரான ஸ்ரீகிருஷ்ணதேவர்வந்தாரென்று சொன்னார்கள் அதுகேட்டுப் பு

ஷ்பமாலையையணிந்த துரியோதனனும் பிரம்பையுடையசேவகனைப் பார்த்துத் தாமரைமலர்போன்ற விசாலமாகிய கண்களையுடைய அந்தக்கிருஷ்ணனைமாத்திரம்விடுங்களென்றுசொன்னான்-எ-று. (௨௮௧)

தன்பெருஞ்சேனைநிற்கத் தண்டுழாயலங்கலானும் ......*
இன்புறநகைத்துவேந்த ரிருந்தபேரவையிலெய்த ...*
மின்புணர்துவசநாக விடநிகர்மனத்தினானும் ........*
அன்பொடுதிகரியானை யதன்மிசையிருக்கவென்றான்.. *

எ-து. தன்னுடைய பெரியசேனைகளெல்லாமிருக்கத் துளபமாலையணிந்த ஸ்ரீகிருஷ்ணதேவரும் இன்பம்பொருந்திய புன்சிரிப்புக்கொண்டு அரசர்களிருந்த பெரியசபைக்குப்போகப் பிரகாசமுள்ளசர்ப்பக்கொடியையும் விஷத்துக்குச்சமானமாகிய மனத்தையுமுடைய துரியோதனனும் அன்பினுடனே, ஸ்ரீகிருஷ்ணதேவரை அதன்மே [லேயிருப்பீரென்றான்-எ-று. (௨௮௨)

வேறு.

இறைவனெறிற்கதிர்மணிகளழுத்திய தவிசினிருத்தலுமே, நெ
றுநெறெனக்கொடுநிலவறையிற்புக நெடியவனப்பொழுதே*
மறலியெனத்தகுநிருபனிபற்றிய விரகைமனத்துணரா ......*
முறுகுசினத்தொடுமடியதலத்துர முடிககனத்துறவே... ....*

எ-து. ஸ்ரீகிருஷ்ணதேவர் கிரணங்களையுடைய ரத்தினங்களைப்பதித்த ஆசனத்திலிருந்தவளவிலே நெறுநெறுவென்று கொடியநிலவறையிலே அதுபுக அவர் அப்போது கூற்றுவனென்றுசொல்லத்தக்க துரியோதனன்செய்தசூதைமனத்திலேயறிந்து மிகுந்தகோபத்துடனே பாதங்கள்பாதாளத்திலேபொருந்தச் சிரசு ஆகாசத்திலேபொருந்த()

அஞ்சினமஞ்சினமென்றுவிரைந்துயரண்டர்பணிந்திடவும் *
துஞ்சினமின்றென வன்பணியின்கிளை துன்பமுழந்திடவும். *
வஞ்சமனங்கொடு வஞ்சகனின்றிடு வஞ்சனைநன்றிதெனு.... *
நெஞ்சில்வெகுண்டுலகொன்றுபடும்படிநின்றுநிமிர்ந்தனனே.

எ-து. பயந்தோம் பயந்தோமென்று சீக்கிரத்தில் உயர்ந்ததேவர்கள் வணங்கவும், இன்று இறந்தோமென்று சர்ப்பக் கூட்டங்கள் துன்பப்படவும், வஞ்சகமனத்தைக்கொண்டு துரியோதனன் இன்று செய்த இந்தவஞ்சகம் நன்றாயிருக்கிறதென்றுமனதிலேகோபித்துஉலகமெல்லாம் ஒன்றுபடும்படிநின்று உயர்ந்தார் ஸ்ரீகிருஷ்ணதேவர்-எ-று,()

மல்லரரக்கர் குலத்தொடுபப்பரர் வாளினர்வேலினர்போர் .. *
வில்லினரிப்படி துற்றநிலத்தறை மேவியவீரரெலாம் ... ...*
தொல்லைபிடிக்கயர்வுற்றபிரற்றுற சுடிகையராவெனவே ....*
கல்லெனவுட்கினர்தத்தமுடற்பல கால்கொடுதைத்திடவே ...*

எ-து. மல்லர்கள் ராட்சதர்கள் பப்பரர்கள் வாளையுடையவர் வேலையு

டையவர் பொருகின்றவில்லையுடையவர் இப்படி பூமியிலேவெட்டிய நிலவறையிலேயிருந்த சுத்தவீரர்களெல்லாம் இடிக்குப்பயந்து வருத்தமடைந்து உயிரற்றிருந்த சிரசையுடைய சர்ப்பங்களைப்போலக்கல்லென்னுமோசையுடனே அஞ்சினார்கள் தங்கள்தங்கள்தேகத்திலே பலகால்களைக்கொண்டு உதைத்திட-எ-று. (௱௬௯)

அற்புதபங்கயநற்பதமுந்தலி னக்குழியின்புடையே .... ... *
சற்பதலந்தொறுமற்றுவிழுந்தனதத்தநெடுந்தலைபோய் .. *
முற்பவனன்பொரமுக்குவடுந்துணிபட்டுமுடங்கியபோன் ...*
வெற்பனநின்றனர்வெற்றுடலங்கொடுவிற்படைகொண்டவரோ,

எ-று. அழகியதாமரைமலர்போன்ற நல்லபாதத்தினுலுதைத்தலினுல் அந்தக்குழியினிடத்திலே நாகலோகந்தோறும் அவற்றுள் விழுந்த தம்முடையநெடியதலைகளெல்லாம்போய் முன்னே வாயுபகவான்போர்செய்ய மூன்றுசிகரமுந்துணிபட்டு வளைந்தமலைபோல் நின்றார்கள் வெற்றுத்தேகங்கொண்டு விற்படைகொண்ட சுத்தவீரர்கள்()

மேல்வலியற்றெதிர் வீசியெழிற்கரு மேகநிறத்திருமால் ...*
கால்விசையிற்படமோதுதலிற்பொரு காமர்புயத்துணைபோய்
நீலநிறக்கலின்வாசவன்வச்சிர நீள்படையிற்சிறகிர்..........*
மால்வரையொத்தனர்வாகைபெறக்கதிர் வாள்களெடுத்தவரோ *

எ-று. அழகியகரியமேகவண்ணராகிய ஸ்ரீகிருஷ்ணதேவர் மேலே வலிமைகொண்டு எதிரேவீசி காலின்விசையினாலே படும்படி மோதுதலினால் பொருகின்ற அழகியபுஜங்களிரண்டும்போய் நீலநிறத்தையுடையஅழகியஇந்திரனுடைய வச்சிராயுதத்தினாலே சிறகறுப்புண்டபெரியமலைகளையொத்தார்கள் வெற்றிபெறும்படி வாளாயுதங்களை யெடுத்த சுத்தவீரர்கள்-எ-று. (௰௬௫)

வெயில்விடுபைத்தலையமணியிசைத் துயில்விபுதர்களுக்கரியோ
ன், பயிலவுதைத்தலினவர்களுரத்திடை பதமலர்பட்டுருவா*
மயில்கடவிக்கடவுளர்பகையைக்கதிர்மகுடமுருக்கியவேள் ...*
அயில்கொடுகுத்தியநெடுவரையொத்தன ரயில்களெடுத்தவரோ

எ-று. ஒளியுள்ளசிரோமணியையுடைய ஆதிசேடன்மேல்நித்திரைசெய்கின்ற தேவர்களுக்கரிய ஸ்ரீகிருஷ்ணதேவர் உதைத்தபடியால் அவர்கள்மார்பிலே பாதங்கள்பட்டு ஊடுருவி மயில்வாகனத்தைச்செலுத்தி தேவர்கள்பகையாகிய சூரபத்மாமுதலிய அசுரர்களைச் சங்கரித்தசிவசுப்பிரமணியசுவாமிகள் வேலாயுதங்கொண்டுகுத்திய நெடியகிரௌஞ்சகிரியை ஒத்தார்கள் வேலாயுதம் எடுத்தசுத்தவீரர்கள் எ-று.

மின்கடிகைப்புய கங்கள்வெருக்கொளும் வெஞ்சருடக்கொடி
யோன், வன்பதபத்மமுகங்கடமிர்த்துடர்வன்கலைத்திடலால் *

முன்புவனத்திடைவந்துகவிக்கினைமெய்ம்புணராப்புகல்போ*
மெதல்புமலைக்குறுபஞ்சையடித்தனை யென்றுசியப்படுமே .... *
எ-து. மின்னுகின்ற ரத்தினம்விளங்கிய உச்சியையுடைய சர்ப்பங்களை
ருஞ்சுகின்ற வெவ்வியகருடக்கொடியோனுகிய ஸ்ரீகிருஷ்ணதேவர் தம்
முடையபாததாமரையிலிருக்கும் நகத்தைத்தானே யெடுத்து உயர்த்
த ஆகாயத்திலே எறிதலால் முன்காட்டிலேவந்து சுக்கிரீவனுக்குண்மை
யையறியச்சொன்னபோது இராமரால் துந்துபியெலும்புமலை என்
னைப்பட்டதோ அதையடித்தார்கள் வலுமைகுறைந்தப்பட்டார். ()

மைந்துபடைத்துயர் பஞ்சவர்சொற்படி வந்தமலர்க்கழலால்*
உந்தியுதைத்துடலம்புதையப்பிலமொன்றிலொளித்திடலால்*
அந்தணன்முற்பகல் வந்துபுடைத்திடவென்றிறிலத்திடைவீழ்*
விந்தமொடொத்தனர் வன்குழிபிற்றிசழ் மைக்கணரக்கருமே.
எ-து. வலுமைபடைத்த உயர்ந்தபஞ்சபாண்டவர் சொற்படி தாதுவந்
தமலர்போன்றபாதத்தினுல் தள்ளி யுதைத்துத் தேகம்புதையப் பில
த்துவாரத்திலேயொன்றி ஒளித்திடும்படிசெய்தலாலே அகஸ்தியமுனி
வர் முன்னுளிலேவந்து தள்ளப்பயந்து பூமியிலேவிழுந்த விந்தகிரி
யையொத்தனர் நிலவறையிலேயகப்பட்ட வெவ்விய கண்களையுடை
யராட்சதர்கள்-எ-று. (௱௧௩)

அந்தவிடத்தெறிபம்பரமொத்துட லுஞ்சுழலச்சுழலக் ..... *
குந்தியுதித்துயிருண்டவர்பொற்கழல் கொண்டுகழற்றுதலால் *
முந்தமரர்க்கமுதந்தரமைக்கடல் முன்சுழலச்சுழலும் ..... *
அந்தரமொத்தனர் குந்தமெடுத்தெதிர் வந்துமலைத்தவரே...*
எ-து. அந்தநிலவறையிலே யெறிகின்றபம்பரத்தையொத்துத் தேக
முஞ்சுழலச்சுழலக் குந்தியிருந்து உதிப்பிலிருந்ததயிலையுண்ட ஸ்ரீகிரு
ஷ்ணதேவரானவர் பொன்போன்றபாதத்தைக்கொண்டு சுழற்றுகை
யினலே முன்னே தேவர்களுக்கு அமுதங்கொடுக்கச் சமுத்திரமான
து முன்னே சுழலச்சுழலுகின்ற மந்தரகிரியையொத்தார்கள் எதிரி
ட்டியெடுத்து எதிரேவந்துயுத்தஞ்செய்த சுத்தவீரர்கள்-எ-று. ()

முட்டியதொல்குறு திக்கடன்மல்கலின் முட்டிகொள்பல்விரலால் . *
நெட்டுடலம்வகிர் பட்டதினுள்விழ நித்தர்செய்தொல்வினையால் .. *
மட்டறவல்விற லுற்றெதிர்செல்க வினைமக்கடலெல்லையிலே....... *
இட்டனதல்வரை யொத்தனர்வெல்கழ லெக்குலமல்லருமே ..... *
எ-து. அந்த நிலவறையை முட்டப்பெற்ற ரத்தசமுத்திரம்நிறை
ந்தபடியால் முட்டிக்கொள்கின்ற பலவிரல்களினுலே நெடியதேகம்
பிளவுபட்டு அதினுள்ளேவிழ ஸ்ரீகிருஷ்ணதேவர் செய்த செய்கையி
னலே அளவற்றவலுமைகொண்டு எதிரிட்டுச்செல்கிற வானரத்துஞ்சரி

யகடலிலேயிட்ட பர்வதங்களையொத்தனர் வெல்லுகின்ற வீரக்கழலை யணிந்த கூட்டமாகிய எவ்விதமல்லர்களும்-எ-று. (௨௱)

எப்புவிநிற்பன வெக்கிரிநிற்பன வெக்கடனிற்பனவென் ........ *
இப்புவனத்துயிர் முற்றுமயக்குற வுட்கினொத்திமையோர் .... *
மைப்புயலொத்தொளிர் பச்சைநிறத்தினன் வர்க்கமலர்க்கழலால் *
ஒப்பறமட்குழி யுற்றவனைப்பட வொத்திமிதித்தலுமே .......... *

எ-து. இனி எந்தப்பூமிகள்நிற்கும் எந்தமலைகள்நிற்கும் எந்தக்கடல்கள்நிற்குமென்று இந்தப்பூமியிலுள்ள உயிர்முழுவதும் மயக்கத்தையடையத் தேவர்களஞ்சி யிளைத்தார்கள்-கரியமேகத்தை யொத்து விளங்கியஸ்ரீகிருஷ்ணதேவர் அனேகமலர்போன்றதிருவடிகளால் ஒப்பில்லாமல்நிலவறையிலிருந்தவனைப்படும்படி ஒத்திமிதித்தவளவில்.()

கொண்டன்முழக்கெனவம்புவியைக்கடல்கொண்டெழுதற்கெதிரும்
சண்டமுழக்கென வன்பவனக்கிளை தந்தமுழக்கெனவே ........ *
வண்டினமொய்த்தெழு வண்டுளபத்தொடை வண்டுவரைத்திருமால்,
அண்டமுகட்டுற நின்றுசிரித்தன லங்கணெருப்பெழவே ......... *

எ-து. மேகமுழக்கமென்றுசொல்லவும் பூமியைக்கடல்கொண்டு எழுதற்கு எதிரும் வேகத்தைபுடைய முழக்கமென்றுசொல்லவும் வலிமைபொருந்தியவாயுவின் கூட்டஞ்செய்தமுழக்கமென்றுசொல்லவும் வண்டுகள்மொய்த்தெழுகின்றவளத்தையுடைய துளபமாலையை யணிந்த துவாரகைக்கு அரசராகிய ஸ்ரீகிருஷ்ணதேவர் அண்டமுகடளாவநின்று அழகியகண்ணில் நெருப்பெழச்சிரித்தார்-எ-று. ()

ஒன்றுபடக்கடலம்புமுகப்பன வும்பர்குலத்தருவும் ........ *
சென்றுமுறிப்பனவெண்டிசையிற்குலசிந்துரமெற்றுவவெண்
குன்றமுடைப்பன பைம்பொனிறக்கிரிகொண்டுதிரிப்பனவால்
அன்றுதனித்தனி நின்றுமலைத்தரு ளங்கைகள்பற்பலவே ...*

எ-து. அப்போது வெவ்வேறுநின்று யுத்தஞ்செய்த பலகைகளிலே சிலகைகள் சமுத்திரநீரையெல்லாம் ஒன்றுபடும்படிமொள்ளும், சிலகைகள் தெய்வலோகத்திலிருக்கும் பஞ்சதருக்களையும்போய் முறிக்கும், சிலகைகள் எட்டுத்திக்கிலும்போய் அஷ்டகஜங்களையும்தள்ளும் சிலகைகள் அஷ்டகுலபர்வதங்களையும் உடைக்கும், சிலகைகள்மகமேருவைச்சுழற்றும்-எ-று. (௨௱௩)

துகிரிதழ்வைத்துநம் வளைகண்முழக்கின தொடர்சிலகைத்தலமே, அகிலம்வெருக்கொள வரிமழுவெற்றினவவைசிலகைத்தலமே, புகலும்வடிக்கணை யுவணமெடுத்தன பொருசிலகைத்தலமே, திகழ்விசயத்தொடு சிலைகள்குனிப்பன சிலசிலகைத்தலமே.

எ-து. சிலரைகள் பவளம்போன்றவாயிலே சங்குகளைவைத்துமுழக்கஞ்செய்தன, சிலகைகள் பூலோகமஞ்சும்படி அரிகின்றமழுவாயுதங்களையெறிந்தன, சிலகைகள் கொல்லுகின்றகருடாஸ்திரங்களையெடுத்தன, சிலகைகள் ஐயத்துடனேவில்லுகளைக் குனிப்பனவாம்-எ-று. ()

வெங்கணையுந்திரள் குந்தநிறப்படை வெப்புமுலக்கைகள்போர், பொங்கியவச்சிர முந்துகலப்பைகள் புன்கழுவர்க்கமுமே ※
எங்குமலைத்தெழுசெஞ்சுரிகைத்திரடண்டமெனப்பலபேர் ※
தங்கியசக்கரபந்திதரித்தன தண்பலகைத்தலமே ........ ※

எ-து. வெவ்வியவளைதடிகள் கைவேல்கள் வெம்பச்செய்யும் உலக்கைகள், போனாயிசச்செய்கின்ற வச்சிராயுதம், எதிகின்ற கலப்பைகள், சூலவர்க்கங்கள் எவ்விடத்தும் போர்செய்தெழுகின்ற உடைவாள்கள் தண்டாயுதங்கள் பலபேர்தங்கிய சக்கிரபந்திகளாகிய இவைகளைத்தரித்திருந்தன அனேககைகள்-எ-று. (௨௱௫)

மேலெழுமங்கெதிர் வாளுறைபோம்படிவீசினவான்படையே
தோலினமேந்தின நீள்கவணேந்தின சோரிகள்சோர்ந்திடவே
ஞாலமெலாம்பொரு தோமரம்வாங்கின நாவொருமூன்றெனவாம், சூலமொடேந்தினபாரமொடேந்தினகுழ்சில்புஷ்கரமே

எ-து. சிலகைகள் மேலேயெழுகின்ற அழகியகிரணங்களையுடையவாளாயுதங்களை உறைபோகும்படி வீசுதல்செய்தன, சிலகைகள் கேடகங்களேந்தின, சிலகைகள் நெடியகவண்கல்லேந்தின, சிலகைகள் உதிரமொழுகப் பூமிமுழுவதையும்பொருகின்ற பெருஞ்சவளங்கள் கொண்டன, சிலகைகள் நாக்குகள் மூன்றெனப்பட்ட சூலங்களோடுயர்ந்தன, சிலகைகள் பாசங்களோடுயர்ந்தன-எ-று. (௨௱௬)

சிலசிலகைத்தல மடுகழலிற்பல செறிகழல்கட்டினவே ......※
சிலசிலகைத்தலமறுகுபுயத்திடை செறிதொடையிட்டனவே ※
சிலசிலகைத்தல மணிகொளுரத்திடை பணிகடிருத்தினவே .. ※
சிலசிலகைத்தலம் விரல்கொடுசுட்டின செறுநர்திகைத்திடவே,

எ-து. சிலசிலகைகள் கொல்லுகின்றபாதங்களிலே வீரக்கழல்களைக்கட்டின, சிலசிலகைகள் புஜங்களிலேமலர்மாலைகளிட்டன, சிலசிலகைகள் அழகினைக்கொண்டமார்பிலே ஆபரணங்களைத்திருத்தின, சிலசிலகைகள் சத்துருக்கள் திகைக்கும்படி விரல்களைக்கொண்டு சுட்டிக்காண்பித்தன-எ-று. (௨௱௮)

மாயிருஞாலமெலாம்வெளியாயொளிர் மரகதசோலையுறப் .... ※
போயிருபாலும் வளைந்துவளைந்தெதிர் பொருமுனைவெம்படையோ,
டாயிரமாயிர மங்கைபுறப்பட வண்டருமாதவரும் ............... ※
பாயிரநான்மறை பாடிவிருந்து பணிந்துபுகழ்ந்தனரோ........ ※

எ-று மகத்தாகியபெரியபூமியெல்லாம் வெளியாய்விளங்குகின்ற மோகநத்தின் பிரகாசத்தைபுடைய இரண்டுபக்கத்திலும்போய்வளைந்து ஒளிந்து எதிரேபொருகின்ற முனையையுடைய தெவ்விய ஆயுதத்துடனே இரண்டாயிரங்கைகள் புறப்படத் தேவர்களும், முனிவர்களும், பாயிரமுள்ள நாலுவேதங்களையும்பாடி அதிசயித்துப்பணிந்து புகழ்ந்தார்கள்-எ-று. (உ௱அ)

ஆரணனேயட ரேபுவனங்க ளனைத்தையுமன்றுதவும் .... ... *
காரணனேகரு ணாகரனேகம லாசனிசாதலனே............ *
வாரணமேபொது வாயொருபேரிட வந்தருளும்புயலே .. *
நாரணனேமுனி யேன்முனியேலென நாகர்பணிந்தனரே ... *

எ-று. பிரமதேவனே உருத்திரமூர்த்தியே புவனங்களையெல்லாம் அன்று உதவிய மகாவிஷ்ணுவே திருமைபக்கிடமானவனே இலட்சுமிக்குக் கணவனே கஜேந்திரன் ஆதிமூலமேயென்று பொதுவாய் ஒரு பேரிட்டழைக்க நானே அப்பேருக்கு உடையவனென்று வந்தமேகவண்ணனே நாரணனே கோபியாதே கோபியாதேயென்று தேவர் வணங்கினார்கள்-எ-று. (உ௱௯)

மாதவனேமுனி யேலெம்மையாளுடை வானவனேமுனியேல் *
யாதவனேமுனி யேலிதபத்தி லிருப்பவனேமுனியேல் ......*
ஆதவனேமுனி யேன்மதிவெங்கன லானவனேமுனியேல் .. *
நீதவனேமுனி யேன்முனியேலென நின்றுபணிந்தவரோ ... *

எ-று. மாதவனே கோபியாதே எங்களை அடிமையாகவுடைய தேவனே கோபியாதே, யாதவமரபில் வந்தவனே கோபியாதே, அடியார்கள் மனத்திலிருப்பவனே கோபியாதே, சோமசூரியாக்கினியானவனே கோபியாதே, நீதியையுடையவனே கோபியாதே கோபியாதே யென்றுநின்றுபணிந்தார்கள்-எ-று. (உ௱௰)

கங்கைமகன்கதி ரோன்மகனம்பிகை காதன்மகன்றனையர் .... *
அங்கவையின்க ணிருந்தநராதிப ரடையவெழுந்தடைவே... *
செங்கைகுவித்த சிரத்தினராயுணர் வொன்றியசிந்தையராய் *
எங்கள்பிழைத்தலை யின்றுபொறுத்தரு ளென்றுபணிந்தனரோ

எ-று. பீஷ்மாசாரி-கர்ணன் - திருதராட்டிரன்- அவன்பிள்ளைகள் அங்கே சபையிலேயிருந்த ராஜாக்களெல்லாரும் எழுந்திருந்து சிரசின்மேல் கைகளைக்கூப்பிக்கொண்டவர்களாய் அறிவுமிகுந்த மனமுடையவராய் நாங்கள்செய்த தப்பிதத்தை இன்று பொறுத்தருள்வாயென்று வணங்கினார்கள்-எ-று. (உ௱௰௧)

கண்ணைபொறுத்தருள் வெண்ணெயருந்திய கள்வபொறுத்தருள்கார் *
வண்ணபொறுத்தருள் வாமபொறுத்தருள்வரதபொறுத்தருளீ ... *

இன்னமனத்துணர்வொன்றுமிலாதவர்செய்தபெரும்பிழையென் *
றண்ணன்மலர்க்கழல்சென்னியில்வைத்தெதிரன்றுதுதித்தனரே ...*

எ-து. கண்ணனே பொறுத்தருள் ஆயர்பாடியில் வெண்ணெயுண்ட கள்வனே பொறுத்தருள் மேகவண்ணனே பொறுத்தருள் வாமனே பொறுத்தருள், வரதனே பொறுத்தருள், சத்தியமாக மனத்திலே அறிவான தெவ்வளவுமில்லாதசிறியவர்கள்செய்த பெரும்பிழையையென்று ஸ்ரீகிருஷ்ணதேவருடைய தாமரைமலர்போன்ற பாதங்களைச்சிரசிலேவைத்துக்கொண்டெதிரேநின்றுதுதிசெய்தார்கள்-எ-று (உ௱௰உ)

தேவரும்வாசவனுந்திறலும்பர்கடேவனுநான்முகனும் ......*
யாவருமன்பினொடாயிரநாமமுமெண்ணியிறைஞ்சுதலால் ... *
மூவருமொன்றெனநின்றருளுதனுமுனிவுதவிர்ந்தருளா .....*
மேவருமண்டமுறுந்திருமேனியடக்கினன்மீளவுமே ........ ..*

எ-து. முப்பத்துமுக்கோடி தேவர்களும் இந்திரனுந்திறலையுடையதேவதேவனாகிய பிரமதேவனும் எல்லாரும்பக்தியுடனே ஆயிரந் திருநாமமுந்தியானித்து வணங்கினபடியினாலே திருமூர்த்திகளு மொன்றென்று சொல்லும்படிநின்ற ஸ்ரீகிருஷ்ணதேவரும் கோபம் நீங்கிக்கிருபைசெய்து உலகமெல்லாமாகிய திருமேனி மறுபடியு மடங்கினதென்றவாறு. (உ௱௰௩)

தன்னினுயர்ந்தவர்யாருமிலாமுகில்சதுமறையின்படியே..... *
என்னிலமுந்திருவடியின்மறைந்திடவிப்படிநின்றிடவும் .... *
பின்னையுமஞ்சியயர்ந்திலனெஞ்சுபெயர்ந்திலனாகமுமே... . *
சென்னியிலுங்கரம்வைத்திலன்வண்புகழ்சிறிதுமொழிந்திலனே

எ-து. தனக்கு உயர்ந்தவர்கள் ஒருவருமில்லாத ஸ்ரீகிருஷ்ணதேவர்நான்குவேதத்தின்படி எந்தப்பூமியுந்திருவடியிலேமறைந்திட இப்படிநிற்கவும் பின்னும் அஞ்சி மனத்தில் வருந்துகிலன் தேகமசைகிலன் சிரசிலே கரங்களுங் கூப்புகிலன் வளத்தையுடைய அவர்கீர்த்தியைச் சிறிதுஞ்சொல்லுகிலன் துரியோதனனென்றவாறு.. (உ௱௰௪)

தொல்லவையின்கணிருந்தநராதிப துன்மதியாலெனைநீ ............*
கொல்லநினைந்ததுநன்றெனவென்றிவை கூறினனெம்பெருமான் *
ஒல்லையினின்குலமுற்றுமடிந்திடவுற்றமலைந்தொர்கணத் .......... *
தெலையில்வெஞ்சமர்நூறுவன்யாவருமேறுவர்வானுலகே . ......*

எ-து. பழமையாயுள்ள ராஜசபையிலே யிருந்த துரியோதனராஜனே துற்புத்தியினாலே நீஎன்னைக்கொல்ல நினைத்தது நல்லதென்று சொல்லி ஸ்ரீகிருஷ்ணதேவர் சீக்கிரத்திலே உன்குலமுழுவதுமடியயு

த்தஞ்செய்து ஒருக்ஷணநேரத்திற்சொல்லுவேன் அப்போது எல்லாரும் மேலுலகத்திலே ஏறுவாரென்று பின்னுஞ்சொல்லுவார்-எ-று.()

அஞ்சின நின்னை யழித்திட நின்றட னன்றுபொருஞ்சமர்வாய் ..... *
வெஞ்சுடராயுத மென்றுமெடுக்கில மென்றுவிளம்பியதும் ...... *
எஞ்சமலைந்தெதிர் வந்துயிர்கொள்ளுது மென்றுதனித்தனியே ... *
பஞ்சவர்கூறிய வெஞ்சினவாசக மும்பழுதாமெனவே ........... *

எ-து. உன்னைக்கொல்லுவதற்கு அஞ்சினேம் உன்னுடனே அன்று பெரியயுத்தத்திலே வெவ்விய கிரணத்தையுடைய ஆயுதமொன்றும் எடுக்கமாட்டோமென்று சொல்லியதும் பாண்டவர்கள் தாம் வந்துசண்டையிட்டு உயிரைக்கொல்லுகிறோமென்று தனித்தனியேசொல்லியசபதமுள்ளபேச்சும் பழுதாமென்றல்லவோ-எ-று. (௨௱௰௬)

என்றுரையாடி நெடுங்கடல்வண்ண னெழுந்தருளப்பிறகே .... *
சென்றனசெம்முடி மன்னவரும்பணி சேர்கொடியோனையலால்.. *
நின்றுபசார முரைத்தவர்தம்மை நிறுத்தியநந்தரமே ......... *
வன்றிறலங்கர் பிரானொடுகூறினன் மற்றொருவாசகமே ......... *

எ-து. இப்படிசொல்லி நெடியகடல்வண்ணனான ஸ்ரீகிருஷ்ணதேவர் எழுந்தருளப்பின்பு எந்தஅரசர்களும் அவர்பின்னேபோனார்கள்-சர்ப்பக்கொடியடைத்த அந்தத்துரியோதனனை யல்லாமல் நின்று உபசாரஞ்சொன்னபேர்களை நிறுத்தி அநேகநந்தரம் வலிமையுள்ள திறலையுடைய அங்கதேசத்துக் கதிபதியாகிய கர்னனுடன் ஒருவார்த்தைசொன்னார்-எ-று. (௨௱௰௭)

வண்மையினுய ரங்கர்குலாதிப மதிகுலம்வாழ்வுறவந் .... *
துண்மையினுயர் மன்னவரைவரு முன்னினுனக்கிளையோர் *
பெண்மையினுயர்குந்திவயிற்றிடை பெருமையினுலிதயத் *
திண்மையினுயர் நின்னையுமன்பொடு தினகரனல்கினனே *

எ-து. கொடையினுயர்ந்த கர்னமகாராஜனே சந்திரவம்சம் வாழவந்த உண்மையினுயர்ந்த பாண்டவரைந்துபேரும் நினைக்குமிடத்தில் உனக்கிளையவர்கள் பெண்தன்மையிலுயர்ந்த குந்திமாதேவிவயிற்றிலே பெருமையினாலும் மனவலியாலும் உயர்ந்த உன்னையும் அன்புடனே சூரியன்பெற்றான்-எ-று. (௨௱௰௮)

ஏவுநெடுங்கொடி முரசுடையோனை யெழிற்றறமன்றரவே . *
வாயுவழங்கினன் வீமனைநல்கினன் விஜயனைவாசவனும் ...... *
ஆயுணிகழ்ந்திடு வேதமருத்துவ ரன்பொடளித்தனர்செந் ... *
தேயுவெனுந்திற னகுலனையுஞ்சக தேவனையும்பெரிதே .... *

எ-து. நெடியமுரசக்கொடியுடைய தருமராஜாவை அழகிய யமன் பெற்றான், வீமனை வாயுபகவான்பெற்றான், அருச்சுனனைத்தேவேந்

திரன்பெற்றான், அக்கினியென்னுந் திறலையுடைய நகுலனையும் சகாதேவனையும் ஆயுள்வேதமறிந்த மருத்துவதேவர்கள் அன்புடனே பெற்றார்கள்-எ-று. (௨௱௰௧)

அந்தணன்முன்றரு மந்திரமைந்தினி லாறவளாயுங்கடவுட்...*
குந்திபயந்தனள் யானினியென்பல கூறுவதுங்களினீர்... *
இந்தநிலம்பெறு வீர்தவிர்வீர்பெற வேறினியாருரியார் ... *
மந்தினிநம்பியர் தம்மொடுசேர்வென மாலுமொழிந்தனனே

எ-து துர்வாச முனிவரருளிய ஐந்துமந்திரத்திலே ஆறுபேராயுந் தெய்வத்தன்மையுள்ள குந்திமாதேவிபெற்றனள்-யான் பலபேசச் சொல்லவேண்டிய தென்னவிருக்கிறது உங்களுக்குள்ளே நீங்களிந்தப்பூமிபெற்றாலும் விட்டுவிட்டாலும் உங்களைவிடப் பெறுதற்கு வேறே எவர் உரிமையுள்ளவர்களாவர் இனி வந்து உன்னுடையதம்பிமாரோடுசேரென்று சொன்னார் ஸ்ரீகிருஷ்ணதேவர்-எ-று. (௨௱௰௨)

வேறு.

கன்றால்விளவின் கனியுகுத்துங்கழையாலாயின் கணமழைத்துங்.*
குன்றான்மழையின் குலந்தடுத்துங்குலவுஞ்செல்வக்கோபாலா ....*
இன்றோலெனதுபிறப்புணர்ந்தேனென்றன்புருகியெம்பியர்பால் .*
சென்றாலென்னை நீயறியச்செகத்தாரொன்றுஞ்சிரியாரோ .. ..... *

எ-து. பசுவின்கன்றினால் விளவின்பழத்தையுதிர்த்தும் மூங்கிற்குழலால் பசுக்கூட்டங்களையழைத்தும், கோவர்த்தனகிரியால் மேகஞ்சொரிந்த மழையைத்தடுத்தும்,பிரகாசிக்கின்ற செல்வத்தையுடைய கோபாலகிருஷ்ணனே நீர்சொல்லுகையினாலே இன்று என்னுடைய பிறப்பையறிந்தேனென்று அன்புருகி என்தம்பியரிடத்திற் போனால்என்னை நீயறிய உலகத்தார்எப்போதுஞ்சிரிக்கமாட்டார்களோ-எ-று

ஆரொன்றறியத்தகாதவென்னை யரசுமாக்கிமுடிசூட்டிச் .............. *
சீருந்திறமுந்தனதுபெருந் திருவுமெனக்கேதெரிந்தளித்தான் ... *
பாரின்றறிய நூற்றுவர்க்கும் பழிதீர்வென்றிப்பாண்டவர்க்கும் ... *
போரொன்றறிந்துஞ்செய்நன்றி போற்றாதவரிற்போவேனோ ......*

எ-து. இன்றொன்றறியத்தகாதவென்னை அரசனாக்கிக் கிரீடந்தரித்துச் சிறப்பையுந் திறத்தையும் பெரியசெல்வத்தையும் எனக்கே தெரிந்துகொடுத்தான் - அதுவுமல்லாமல் இன்று பூமியெல்லாமறிய அந்தத்துரியோதனன்முதலிய நூற்றுவர்க்கும் குற்றமற்றஜெயத்தையுடைய பஞ்சபாண்டவர்க்கும் யுத்தம்வந்து நேரிட்டிருக்கிறதென்றுமறிந்தும் ஒருவன்செய்த நன்றியைக் காப்பாற்றாதவர்களைப்போல் நான் போவேனோவென்றான் கர்ணமகாராஜன்-எ-று. (௨௱௰௩)

இரவிக்குரியதிருமதலை யிவ்வாறுரைக்கவிசைவண்டு ... ......... *
விரவிப்பயிலுந்துழாய்முடியோன் வேறோர்மொழியும்விளம்பாமல்
உரவிற்றடர்ந்தேரூர்வோனை யேசென்றருளியொருசார்வாய் ...... *
புரவித்தாமன்றனை வருகென்றழைத்துப்புகல்கின்றான் ....... *

எ-து. சூரியன் புதல்வனாகிய கர்ணன் இப்படிச்சொல்லவண்டுகளிசைபாடுகின்ற துளபமாலையணிந்தகிரீடத்தையுடைய ஸ்ரீகிருஷ்ணதேவர் மற்றொருசொல்லுஞ் சொல்லாம லவனைப் போகவென்றனுப்பியொருபக்கத்திலேநின்று அசுவத்தாமனை வாவென் றழைத்துச் சொல்லுவாரென்றவாறு. (௨௨௩)

போயேகானம்பலதிரிந்தும்புகன்றவிரதம்பொய்யாமல் ... *
ஆயேவந்தபாண்டவர்களைந்தூர்வேண்டமறுத்ததற்குச் ... .. *
சேயேயனையசிலமுனிவன்சேயேநாளைச்செருக்களத்தில் [னே.
நீயேகரியென்றெடுத்துரைத்தா னெடியோன்றுளப முடியோ

எ-து. காடெல்லாம் போய்த்திரிந்தும் சொன்னவிரதம் பொய்யாமல்செலுத்திவந்த பஞ்சபாண்டவர்கள் ஐந்தூராவதுகேட்க, இல்லையென்று துரியோதனன் மறுத்ததற்குமுருகக்கடவுளையொத்த துரோணாசாரிகுமாரனான அசுவத்தாமாவே நாளையுத்தகளத்தில் நீயேசாட்சியென்று எடுத்துச்சொன்னார் நெடியவனும் துளபமணிந்த முடியையுடையவனுமாகிய ஸ்ரீகிருஷ்ணதேவரென்றவாறு (௨௨௪)

ஆருவனதாண்மைக்குநிகரவனிதலத்தில்வேறுண்டோ ... ... *
ஞானாதிபனேபோர்க்களத்தினாகக்கொடியோன்பணிந்துன்னைச்
சேனாபதியாகென்றாலுஞ்செலுத்தேனென்றுநீமறுத்தி ...... *
யானாலைவருமற்றவர்பாலுனக்குமன்புண்டே .... ..... *

எ-து. நீங்காதஉனதுடைய வலிமைக்குச்சமானமாய் பூமியிலேயொன்றுண்டோ ஞானத்துக்கதிபனே யுத்தகளத்திலே சர்ப்பக்கொடிபடைத்த துரியோதனன் உன்னைவணங்கிச் சேனாபதியாயிருவென்று சொன்னாலும் நான்மாட்டேனென்று மறுத்தாயானால் பஞ்சபாண்டவர்கள் பிழைப்பார்கள் அவர்களிடத்தில் உனக்கும் விசுவாசமுண்டேயென்றார் ஸ்ரீகிருஷ்ணதேவரென்றவாறு. (௨௨௫)

ஆயோதனத்திலடலரியேறனையான்றன்னையிவ்வாறு,மாயோனுரை
த்துத்தன்விரலில்மணியாழியைமண்ணிடைவீழ்த்தான்,சேயோ
னதனையெடுத்தவன்றன்செங்கைகொடுக்கவாங்காமல்;தூயோயூ
ர்க்கோள்பரிதிதனைச்சூழ்ந்ததகல்வான்மீதென்றே .......... *

எ-து. யுத்தத்திலே பொருமைபொருந்திய ஆண்சிங்கத்தையொத்த அசுவத்தாமாவை இப்படி ஸ்ரீகிருஷ்ணதேவர்சொல்லி தமதுவிரலிலிருந்த ரத்திநம்பதித்த மோதிரத்தைப் பூமியிலே நழுகவிட்டார்அசு

வத்தாமா அதனை யெடுத்து அவர்கையிலேகொடுக்க வாங்காமல்பரிசுத்தமானவனை ஆகாயத்திலே சூரியனைப்பரிவேடஞ்சூழ்ந்தது-எ-று.

வரித்தாமரைக்கண்டிருநெடுமால்வான்வாய்நோக்கவரிவிரற்கைப் .. *
பரித்தாமாவுமாழியுடன்பரிதிவடிவந்தனைப்பார்த்தான் .... ......*
கிரித்தாழ்கவிகைக்கருங்கள்வன் கிளர்நூன்முனிவன்மைந்தனையும் *
பிரித்தானவனுஞ்சூளுற்றா னென்றாரிருந்தப்பேரவையோர் ........ *

எ-து செந்தாமரை மலர்போன்றகண்களையுடைய ஸ்ரீகிருஷ்ணதேவர் ஆகாயத்திலேபார்க்க நெடியவில்லைக்கையிலேயுடைய அசுவத்தாமாவும் மோதிரத்துடனே சூரியன்வடிவைப்பார்த்தான் கோவர்த்தனகிரியைக் குடையாகப்பிடித்த கள்வனாகிய ஸ்ரீகிருஷ்ணதேவர் துரோணாசாரி குமாரனாகிய அசுவத்தாமாவையும் பிரித்தான்-அவனுஞ்சபதஞ்செய்துகொடுத்தானென்றார்கள் பெரியசபையிலிருந்தவர்கள் எ-று.

தனிவந்தகலுந்தூதனைப்போய்த்தானேயணுகித்தடஞ்சாப...*
முனிவன்புதல்வன்மோதிரந்தொட்டருஞ்சூண்முன்னர்மொழி
கின்றான், இனிவந்துறவாய்நின்றாலு மெங்கனெறிவனிவனையெ
னத், துனிவந்தரசர்முகநோக்கிச்சொன்னானிடியேறன்னானே *

எ-து. தனியேவந்துபோகுந் தூதனிடத்தேதானே பலவந்தமாய்ப்போய் துரோணாசாரிகுமாரனாகிய அசுவத்தாமா மோதிரத்தைத்தொட்டு அரியசபதம் எதிரேசொல்லுகின்றான் ஆகையால், இனிவந்து நம்முடனேசினேகமாய்நின்றாலும்எப்படியிவனையோக்கியனென்றறிவதென்றுகோபித்து ராஜாக்களுடையமுகத்தைப்பார்த்துச்சொன்னான் இடியேற்றை யொத்த துரியோதன னென்றவாறு. (௨௨௮)

துளியார்மதுவின்வலப்புரத்தார்த்துரியோதனன்றான்சொல்லியதும்
ஒளியாரவையில்வாள்வேந்த ரொருவர்க்கொருவருரைத்தனவும் .... *
களியானையனான் செவிப்பட லுங்கலங்கிச்சித்தமிவனென்னத் ....... *
தெளியாவண்ணம்பேதித்தான் றிருமாலென்றேசிந்தித்தான் ......*

எ-து. துளிகள்நிறைந்த தேனையுடைய நந்தியாவட்ட மாலையையணிந்த துரியோதனராஜன் சொல்லியதும் பிரகாசநிறைந்த சபையிலே வாளாயுதத்தையுடைய அரசர்கள் ஒருவர்க்கொருவர் பேசியவைகளும் களிப்பினைக்கொண்ட யானைக்குச் சமானமாகிய அசுவத்தாமா காதிலேவிழுந்தவளவில்மனங்கலங்கி இந்தச்சபையிலுள்ளவர்களென்னைத் தமக்கு அனுகூலனென்று தெரியாதவிதம் பேதப்படுத்தினார் ஸ்ரீகிருஷ்ணதேவனென்று நினைத்தான்-எ-று. (௨௨௯)

தண்ணந்துளபமுடியோனுந்தனித்தங்கிருந்துதன்மனத்தில் ......*
எண்ணம்பலித்ததெனமகிழ்ந்தேயிளையோன்றனக்குவிடைநல்கி ..*

விண்ணின்றமரர்மிசைத்துதிக்கவிதுரன்மனையின்மேவியபின் ......*
திண்ணங்கடவுட்குலவரசன்வருமாறிந்துசிந்தித்தான் ...... ......*

எ-து. குளிர்ந்த துளபமாலையயணிந்தமுடியையுடைய ஸ்ரீகிருஷ்ண தேவரும்தனிப்பட்டு அங்கேயிருந்துதன்மனதிலேநினைத்த எண்ணம் பலித்ததென்றுசந்தோஷித்து அசுவத்தாமாவுக்குச் செலவு கொடுத்து விட்டு ஆகாசத்திலிருந்த தேவர்கள் மிகவுந்துதிசெய்யவிதுரன் அரமனைக்குப்போனபின்பு தேவர்கட்கரசனாகிய இந்திரன் வரும்படி தெரிந்து நினைத்தாரென்றவாறு. (௨௨௰)

அந்தக்கணத்தில்வந்திறைஞ்சமராகண்டலனைமுகநோக்கிக் .. *
கந்தத்துளபமுடியோனுர்கண்ணுங்கருத்துங்களிகூரத் ......*
தந்தத்தொழிலினரிசமைந்த தவிசினிடையேயுடனிருத்தி... *
முந்தக்கருத்தினின்றிதனை முடிப்பானுபாயமொழிகின்றான்.*

எ-து. அந்தக்ஷணத்திலேவந்துவணங்கி இந்திரன்முகத்தைப்பார்த்து வாசனைபொருந்திய துளபமாலையையணிந்த முடியையுடைய ஸ்ரீகிருஷ்ணதேவரும் கண்ணுங்கருத்துங் களிப்பையடைந்து யானைத்தந்தங்களாற்செய்த சிங்காசனத்திலே உட்காரவைத்துக்கொண்டு தன்கருத்திலேயிருந்ததை முடிக்கும்பொருட்டு உபாயஞ்சொல்லுகிறார். ()

கிரியின்சிறகைபரிபடையாய் கேண்மோவாண்மைக்களமீதில் *
வரிவெஞ்சிலைக்கைவிஜயனுக்கு மாறாமுனிந்துவருகின்ற .... *
வெரியுங்கரல்வாய்விடவரவொன் றிவனுக்குற்றபகையான *
அரியின்புதல்வன்றனக்கொருபேரம்பாகியதாரறியாதார் *

எ-து. மலைகளின்சிறகையறுத்த வச்சிராயுதத்தையுடைய இந்திரனே கேள் ஆண்மையாகயுத்தகளத்தில்நீண்டவெவ்வியவில்லையுடைய அர்ச்சுனனுக்குமாறாகக்கோபித்துவருகின்றவிஷநெருப்பை வீசுகின்ற வாயையுடைய சர்ப்பமொன்று இவனுக்குப் பகையாகிய சூரியன்குமாரனான கர்னனுக்கு அம்பாயிருப்பதை அறியாதவர்கள்யார்-எ-று.

கர்னன்விஜயன்றனைக்கொல்லிற் கடற்பார்முழுதுங்கண்ணில்லா,
மன்னன்புதல்வன்றனக்கேயொழிந்தோர்யாருமடிந்திடுவார்
முன்னஞ்சூதின்மொழிந்தபகை முடியாதிருக்கிலவர்க்கல்ல *
நின்னெஞ்சறியயானறிய நினக்கேவசையுநிலையாமே ...... *

எ-து. கர்னன் அர்ச்சுனனைக்கொன்றால் சமுத்திரஞ்சூழ்ந்த பூமிமுழுவதும் திருதராட்டிரன்புத்திரனாகிய துரியோதனனுக்கே யாகும் மற்றப்பேர்யாரும் இறந்துவிடுவார்கள் சூதிலேசொன்னபகையை முடியாதிருந்தால் அவர்களுக்குக் குற்றமில்லை-உன்மனமறிய நானறிய உனக்கேகுற்றம் நிலையாகுமென்றார் ஸ்ரீகிருஷ்ணதேவர்-எ-று ()

கவசங்கனகக்குண்டலமென்றிரண்டுபுனையிற்கற்பாந்தத் ........ *
திவசப்பொரினுங்கர்ணனுயிர்செகுப்பார்மண்ணிற்சிலருண்டோ *
அவசங்கிளைஞருறத்துணைவ ராற்றக்களத்திலடவனுமத்............*
துவசம்படைத்தோன்படுந்துயரந் துணைவாவின்றேசொன்னேனே.

எ-து. கவசம் சொர்ணகுண்டலமென்றுசொல்லும் இரண்டுந்தரிப்பானேயானால் சற்பமுடிவுநாள்வரைக்கும் யுத்தஞ்செய்தாலுங்கர்ணனுயிரைப்போக்குவார் பூமியிலேசிலபேருண்டோ பந்துக்களெல்லாம் அவசப்பட உடன்பிறந்தவர்கள் யுத்தகளத்தில்அநுமக்கொடிபடைத்த அர்ச்சுனன்படுந்துயரத்தை துணைவனே இன்றேசொன்னேன்.()

வல்லார்வல்லாதாருக்கு மறைநூலவர்க்குங்கடவுளர்க்கும் .......*
இல்லாதவர்க்குமுள்ளவர்க்கு மிறந்தோர்தமக்குந்துறந்தவர்க்கும் *
சொல்லாதவர்க்குஞ்சொல்பவர்க்குஞ்சூழுஞ்சமயாதிபர்களுக்கும் *
அல்லாதவர்க்குமிரவிமகனரியதானமளிக்கின்றான் ...........*

எ-து. மாட்டாதவர்களுக்குங் கலையிலேவல்லவராகிய வித்துவான்களுக்கும் வேதத்திலேவல்ல பிராமணர்களுக்கும் இல்லாதவர்களுக்கும் உள்ளவர்களுக்கும் இறந்தவர்களுக்கும் துறந்தவர்களுக்கும் சொல்லாதவர்களுக்கும் சொல்லுகிறவர்களுக்கும் சமயங்களிலே விசேஷமானவர்களுக்கும் அப்படியல்லாதவர்களுக்குஞ் சூரியன் புத்திரனாகிய கர்ணமகாராஜன் அரியதானங் கொடுக்கின்றான்-எ-று. (உ௱ரு)

மைந்தற்குறுதிநீவேண்டில் வல்லோர்முனிவர்வடிவாகிச் ....*
சந்தப்பனுவலிசையாகித் தானுசாவினைந்தெய்தி........*
அந்தக்கவசகுண்டலங்களளிப்பாயென்றாலவனொன்றும் ...*
இந்தப்புவியின்மறுத்தறியானுயிரேயெனினுமீந்திடுவான் *

எ-து. உன்புத்திரனாகிய அர்ச்சுனனுக்கு நீ உறுதிசெய்யவேண்டினாயாகில் வல்லமையுள்ள இந்திரனே பிராமணனுடையவடிவங்கொண்டு சந்தத்தையுடைய கவிமாலையைக்கொண்டதானத்துக்கிடமாகிய கர்ணனிடத்திற்குச் சீக்கிரத்திற்போய் அந்தக்கவசகுண்டலங்களைத் தருவாயென்றுகேட்டால் அவனொன்றாவது இந்தப்பூமியிலே யில்லையென்று சொல்லியறியான் உயிரைக்கேட்டாலுங் கொடுப்பான்-எ-று.()

இரண்டுமவன்பானீகவரிலிருந்தேருந்திப்படியரசர் ..........*
இரண்டுவரினும்வென்கிலக்கைத்திண்டோள்விஜயனெதிர்நில்லார் *
முரண்டுபொருவிற்கர்ணனுந்தன் முன்னேயெய்திமுடிசிதறிப் ....*
புரண்டுமறியுமெனவணங்கிப்புத்தேளரசன்போகின்றான் .........*

எ-து. அந்தக்கவசகுண்டலங்களிரண்டையும் நீ வாங்கிக்கொண்டாயானால் பெரியதேரிலேறிக்கொண்டு இந்தப்பூமியிலுள்ள அரசர்கள் இரண்டுவந்தாலும் வெவ்வியவில்லைக்கையிலேயுடைய புஜபலமுள்ள

அர்ச்சுனன்முன்னே நிற்கமாட்டார்கள் மாறுபட்டுப்பொருகின்ற வி
ல்லையுடையகர்ணனும் அவன்முன்னேவந்து தலைபறுப்புண்டுமண்ணி
ற்புரண்டுமடிவானென்று ஸ்ரீகிருஷ்ணர்சொல்ல அதுகேட்டு வ
ணங்கிப்போகின்றான் தேவர்களுக்கரசனாகிய இந்திரன்-எ-று (௨௫௭)

வேறு.

தண்டுதாவனைக்குனிந்துடலலமரத்தாளிணை தளர்ந்துதள்ளா
டக், கண்டியாவருங்கை தரக்குடையொன்று கைதனிற்கங்கை
நீர்நுரையை, மொண்டுமேனுறச்சொரிந்ததாமெனநரைதிரை
யுடன்மூப்பொருவடிவம், கொண்டதாமெனவொருமுனியா
கிய கொற்றவன்வாயில்சென்றடைந்தான் ................... *

எ-து. சிவிகையின் தண்டுபோலத்தேகம்வளைந்துசுழற்சியடையக்கா
ல்கைகள் தளர்ந்து தள்ளாடவெவர்களும்பார்த்துக் கைகொடுக்கவொருகு
டைபிடித்துக்கையிலே கங்கைநீரிலிருக்கும் நுரையைமொண்டுமேலே
சொரிந்ததாகுமென்றுசொல்ல நரைதிரைகளுடனே மூப்புத்தன்மை
யே ஒருவடிவங்கொண்டதாமென்றுசொல்ல ஒருபிராமணவடிவாகிக்
கர்ணன் அரமனைவாசலிற்போனான்தேவேந்திரன்-எ-று. (௨௫௮)

அடுத்ததானமும் பரிசிலுமிரவலர்க்கருளுடன்முற்பகலளவும்
கொடுத்துநாயகன் புகுந்தனனினிநீ குறுகுகவென்றவன்கோ
யில், கடுத்தவாயிலோர் மீளவுமுணர்த்தலிற் றலைவனுந்தருகெ
னவிறையின், விடுத்தநான்மறை முனியைமுன்காணவேவே
ந்தனுந்தொழுதடிவீழ்ந்தான் .... ... ... ................... *

எ-து. அடுத்திருக்கின்றதானமும்யாசகமும்இரப்போர்க்குக்கிருபை
யுடனே பதினைந்துநாழிகையளவுங்கொடுத்துக்கர்ணமகாராஜனரா
ண்மனைக்குப்போய்விட்டான் நாளையதினம் நீர்வாருமென்று அவன்
அரண்மனையிலிருந்த வாசற்காரர் மறுபடியுஞ்சொல்லுதலால் கர்ண
மகாராஜனும் அவனையழையுமென்றுசொல்லச் சீக்கிரத்திலே அவ
ரும்போக அவனைக்கண்டமாத்திரத்தில் கர்ணனும்வணங்கினான்-எ-று

என்னமாதவம் புரிந்தனன்பரிந்துநீ ரீண்டெழுந்தருளுதற்கெ
ன்று, பொன்னின்றாசனத் திருத்திமெய்யருளுடன்பூசையுமுறை
முறைபுரிய, அன்னவேதியன் றளர்ந்தவென்னடையினா லான
தேபிற்பகலென்று, சொன்னவேளையி னனைத்துனக்களிப்ப
னீசொன்னவையாவையுமென்றான் .... ..... ..... ................*

எ-து என்னதவஞ்செய்தேன் அன்புவைத்து நீர்இங்கேஎழுந்தருளு
தற்கென்று பொன்னினாற்செய்தஆசனம்போட்டு அதிலிருத்தி உண்
மைப்பத்தியுடனே கிரமமாகப்பூசைசெய்ய அந்தப்பிராமணன் தளர்
ச்சியையுடைய என்னுடையநடையினாலே இங்கேவர இரண்டுசாமத்

திற்குமேற்பட்டதென்று சொன்னபோது கர்ணமகாராஜன் நகைத்து நீகேட்டபொருளெல்லாம் உனக்குக்கொடுப்பேனென்றான்-எ-று.()

அருத்தியீதல்பொற் சுரர்தருவினுக்குமற்றரிது நீயளித்தியோ
வென்று, விருத்தவேதியன் மொழிந்திட நகைத்துநீ மெய்யுயி
ர்விழைந்திரந்தாலும், கருத்திலேனுனக் களித்திலேனெனில
திர் கறுத்தவர்கண்ணிணைசிவப்ப, உருத்தபோரினிற் புரந்தரு
நிருபர்போ யுறுபதமுறுவனென்றுரைத்தான் ..............*

எ-து. ஆசைப்பட்டவைகளைக் கொடுத்ததற்குப் பொன்மயமாகியதெய்வலோகத்திலிருக்கும் பஞ்சதருவுக்கும் அருமையாகும் நீ கொடுப்பையாவென்று அந்த விருத்தபிராமணன் சொல்லச் சிரித்து என்னுயிரை அபேட்சித்து நீர்கேட்டாலும் கருத்துடனேஉமக்குக்கொடாமற்போனேனேயானால் பகைவர் கண்கள்சிவக்க எதிர்த்துப் பொருகின்ற யுத்தகளத்திலே முதுகுகாட்டுகின்ற அரசர்களடையும் பதத்தை யானடைவேனென்றான் கர்ணமகாராஜன்-எ-று. (உசுக)

வந்தவந்தணன் கவசகுண்டலங்களை வாங்கிநீவழங்கெனக்கென்
னத், தந்தனன்பெறு கெனவவன்வழங்கவிண் டலத்திலோர்த
னியசரீரி, இந்திரன்றனைவிரகினுன்மாயவனேவினுன் வழங்கலி
யெனவும், சிந்தையின்கணோர் கலக்கமற்றளித்தனன் செழுஞ்
சுடர்த்தினகரன்சிறுவன் ....................................*

எ-து. வந்தபிராமணன் நீதரித்திருக்கின்ற கவசகுண்டலங்களை வாங்கிக்கொடுவென்றுகேட்க இதோகொடுத்தேன் கொள்வாயென்றுகொடுக்க ஆகாயத்திலே ஒரு அசரீரிவாக்கு ஸ்ரீகிருஷ்ணபகவான் ஒருஉபாயத்தினாலே இந்திரனையனுப்பிவைத்தார் நீ கொடுக்கவேண்டாமென்றுசொல்லவும் மனத்திலே ஒரு கலக்கமில்லாமற் கொடுத்தான் சூரியன்புதல்வனாகிய கர்ணமகாராஜன்-எ-று. (உசுஉ)

அண்டர்யாவரு மலர்மழைபொழிந்தன ரந்தரதுந்துமியார்ப்
பக், கொண்டல்வாகனன் கொண்டமெய்யொழிந்துதன் கோல
மெய்யுடனெதிர்நின்றான், கண்டுமாமன முருகியேசளித்திடுங்
கர்ணனுக்கநெடுங்கடவுள், மண்டுபோரினில்வயந்தருமிதுவென
மற்றொருகொற்றவேலளித்தே .... ..........................*

எ-து. அப்போது தேவர்கள்யாவரும் புஷ்பமாரிபொழிந்தார்கள் தெய்வதுந்துமிஜக்கிக்க மேகவாகனனான இந்திரன் தான்கொண்டவிருத்தப்பிராமணவேடநீங்கித் தனது நிஜரூபத்துடனே எதிரேநின்றான் அதுகண்டு மனமுருகிச் சந்தோஷித்த கர்ணமகாராஜனுக்கு அந்த

இந்திரன் யிருந்த யுத்தத்தில் இது ஜெயத்தைக் கொடுக்குமென்று ஒரு வெற்றியுள்ள வேலாயுதத்தையெடுத்தெதாறவாறு. (௨௪௩)

வெலற்கருந்திறல் விஜயன்மேலொழிந்துநீ வெஞ்சினமடங்கல்
போனெஞ்சிற், கலக்கமொன்றறப் பொருதிறற்புனைந்திடுகடோ
ர்க்கசக்காளைதன்னுயிரோ, இலக்குவந்தெதிர் மலைந்தபோதிதற்
கென வேவெனமறையையுமியம்பிச், சொலற்கரும்புகழ் சுரர்
பதிகொடுப்பவத் தோன்றலுந்தொழுதுகைக்கொண்டான்...*

எ-து. வெல்லுதற்கரிய திறலையுடைய அர்ச்சுனன்மேலே விடுவதை யொழித்து நீ வெவ்வியகோபத்தையுடைய சிங்கத்தைப்போல நெஞ்சிலே ஒருகலக்கமுமில்லாமல் போர்செய்கின்றகடோர்க்கசனுடைய உயிரோ இதற்குலட்சியமாகும் அவன்வந்து உன்னை எதிர்க்கும்போது இதை விடுவாயென்று வேதமந்திரமுஞ்சொல்லிச் சொல்லுதற்கரிய கீர்த்தியையுடைய இந்திரன்கொடுக்க அந்தக்கர்ணனும் வணங்கிக் கையிலே வாங்கிக்கொண்டான்-எ-று. (௨௪௪)

நிரந்தரம்புகழ் நிலைபெறுங்கர்ணனை நெஞ்சுறமகிழ்ந்தவணிறுத்
திப், புரந்தரன்பசுந் தண்டுழாயணிந்திடும் புயல்வணனிருந்து
ழிப்போந்தே, இரந்துசென்றுதான் மொழிந்ததுமவ்வள்ளல் ஈந்
ததுமாங்கவற்கிசைத்தான், வரந்தருந்திரு மாலதைவினவியவ்
வாசவற்றனக்குரைவழங்கும் .............................*

எ-து. எப்போதும் நிலைபெற்ற புகழையுடையகர்ணமகாராஜன் செய்கையைக்கண்டு மனமகிழ்ந்து அவனை அங்கேநிறுத்திவிட்டு இந்திரனானவன் பசிய குளிர்ந்த துளபமாலையையணிந்த மேகவண்ணரான ஸ்ரீகிருஷ்ணபகவானிருந்தவிடத்திற்குப்போய்த் தான் போய்க்கேட்டதும் கர்ணன்கொடுத்ததும் அவருக்குச்சொன்னான் அப்போது வரத்தைத்தருகின்ற ஸ்ரீகிருஷ்ணபகவான் அதைக்கேட்டு அந்த இந்திரனுக்குச்சொல்லுவார்-எ-று. (௨௪௫)

உண்மையாகவெஞ்சமர்முகத்தெறிபடை யொன்றுவந்துடலு
றவொட்டாத், திண்மையாலுயர் கவசகுண்டலங்களைச் சென்றிர
ந்தவற்கிவன்கொடுத்தான், எண்மையாயினுங்கிளைஞரேபெற்றி
னுமியல்பிலாப்புன்செல்வரீயார், வண்மையாளர்தமாருயிர்மா
ற்றலர்க்கட்டினுமறுக்கிலாரென்றே .. ......................*

எ-து. சத்தியமாகவெவ்விய யுத்தமுகத்திலேவீசுகின்ற ஆயுதங்கள் ஒன்றுந்தேகத்திலேபடவொட்டாத உறுதியாலுயர்ந்த கவசகுண்டலங்களை இரந்தஇந்திரனுக்குஇந்த கர்ணன்கொடுத்தான் ஆசையால்எளிதாயிருந்தாலும்பந்துக்களேயேற்றாலும் இயற்கைக்குணமில்லாத அற்பசெல்வத்தையுடையவர்கள் கொடுக்கமாட்டார்கள் தியாகியானவர்கள்

தம்முடையஉயிரைச்சத்துருக்கள்கேட்டாலும்இல்லையென்றுமறுக்க மாட்டார்களென்றுசொல்லினன்றவாறு ........ ..... ....... ... (உசசா)

வாசவன்றனைவிடைகொடுத்ததன்பின் வந்தகாரியந்தனை முடிப்
பான், கேசவன்றனதாதையோடுதித்திடுங் கேண்மைகூர்தெரி
வையைக்கிட்டித், தேசவன்றநுங்குருகில்பால்வினாவினிற் செல்
கெனப்பயந்தசேயிழையும், பாசமுந்துறமாயவனேவலாற் பா
தபங்கயஞ்சிவப்பித்தாள் ........................... ........ *

எ-து. தேவேந்திரனுக்குச்செலவுகொடுத்தனுப்பிவிட்டுத்தான்வந்தகாரியத்தைநிறைவேற்றும் பொருட்டு ஸ்ரீகிருஷ்ணபகவானவர் தன்தகப்பனோடுபிறந்த உறவுமிகுந்தகுந்திமாதேவியினிடத்திற்குப் போய்ச் சூரியன்புதல்வனாகிய கர்னனிடத்திற்குச்சீக்கிரத்தில்போவென்றார்அவளும் அன்பானதுதள்ள ஸ்ரீகிருஷ்ணபகவானுடையஏவுதலினாலே தன்னுடையபாதஞ்சிவக்கப் போனாளென்றவாறு ' (உசஎ)

வந்துகுந்திநின்கோயிலெய்தினளெனவாயிலோருரைத்திடமை
ந்தன், முந்துமன்புடனெழுந்தெதிர்கொண்டுபோய்முறைமை
யாலாசனத்திருத்தி, விந்துவின்கிரணங்கள்கண்டுளமகிழ்ந்திரங்
கிவன்கரைகடந்தேறிச், சிந்துவெண்டிரைச் சிந்துவொத்துருகி
டுந் தெரிவையோடுரைபலசெப்பும்... ............ .......... *

எ-து. குந்திமாதேவி உன்னரமனையில்வந்தாளென்று காவற்காரர் சொல்லப்புத்திரனாகியகர்ணனானவன்முந்தியஅன்புடனேவணங்கிஎதிர்கொண்டுபோய்க்கிரமப்படிஆசனங்கொடுத்துஅதிலேயிருக்கச்சொல்லஅப்போதுசந்திரகிரணங்களைக்கண்டுமனமகிழ்ந்து இரக்கமுற்று வன்மைபொருந்திய கரையைக்கடந்துஅலையைவீசுகின்ற சமுத்திரத்தையொத்துமனமுருகும் அந்தத்தாயுடனே பலபேச்சுகள் பேசுவான் அந்தக் கர்ணமகாராஜனென்றவாறு. (உசஅ)

அன்னைவந்ததென்னருந்தவப்பயனென வன்புறலின்பிறவண
ங்கி, என்னைவந்தவாறியம்பெனமற்றவனீன்றதாயானுனக்கென்
று, முன்னைவந்தொருமந்திரந்தவமுனிமொழிந்ததுங்கதிரவன்
முகந்தாவ், பின்னைவந்ததும்பேழையில்விடுத்ததும்பிழையிலா
துரைத்திடக்கேட்டே................................. ... ...... .... *

எ-து. தாயேநீவந்ததுயான்செய்ததவத்தின்பிரயோசனமென்று அன்பினாலேஇன்பம்பொருந்தவணங்கி வந்தகாரியமென்னவென்றுகேட்க அவள்நான் உனக்குப்பெற்றதாயென்றுமுன்னே தூர்வாசமுனிவர் ஒருமந்திரம்சொன்னதும் சூரியனாலேநீபிறந்ததும்உன்னைப்பெட்டியில் விடுத்ததும் பிழையில்லாமற் சொல்லக்கேட்டு-எ-று. (உசக)

மாயனார்விரகிதுவெனமனத்தினின்மதித்துவந்தளித்திடும்வள்ள

ல், நீயனுளெனைப்பயந்தவளென்னினுநின்மொழிநெஞ்சுறத்தே
றேன், பேயனூர்சிலர்பேரறிவின்மையாற்பெற்றதாயெனக்கென
வந்து, தூயநாகரிகத்துகிலாலவர்துன்பமுற்றென்புருவானார் *

எ-து. இதுஸ்ரீகிருஷ்ணபகவானுடைய உபாயமென்று மனதிலேநினைத்து வேண்டியவைகளைக் கொடுக்கப்பட்ட தியாகியாகியகர்ணமகாராஜன் நீ அந்தநாளிலேஎன்னைப்பெற்றவளென்று சொன்னாலும்உன் பேச்சை என்மனம்பொருந்தத் தெளியமாட்டேன் பேயையொத்த சிலபேர்நல்ல அறிவில்லாமல் என்னைப்பெற்ற தாயென்றுவந்து பரிசுத்தமாகிய நாகரீகமாயுள்ள ஒருவஸ்திரத்தால் அவர்களெல்லாந்துன்பப்பட்டு எலும்புருவமானார்களென்றவாறு (௨௫௰)

அடாதுசெய்தவர்படாதுபட்டாரெனுமங்கர்கோ னருண்மொ
ழிகேட்டுத், தடாதவன்புடைக்கெடாததூய்மொழியகர்ந்தைய
னுடையலிற்றவிர்ந்து, படர்ந்தனைக்கொடுவாவெனவருதலும்ப
யந்திலேனெனிலனேமுனியென், றெடாவிரித்ததைத்துடைப்பட
ப்பேத்துமன் றீன்றதாயாமெனவிருந்தாள் ...... .... ........ *

எ-து. அடாதகாரியத்தைச்செய்து அவர்கள் படாதபாடுபட்டார்களென்று சொல்லும் அங்கதேசாதிபதியாகிய கர்ணமகாராஜன்சொல்லக்கேட்டுத்தடுக்காத அன்பையுடைய கெடாதபரிசுத்தமாகியசொல்லைச்சொல்லிய குந்திமாதேவியும் மயக்கத்தினின்று நீங்கி அந்தவஸ்திரத்தைக் கொண்டுவாவென்றுவாங்கிஉன்னைப் பெறுதிருந்தேனேயானால் என்னைக் கோபியாயென்று அதையெடுத்துவிரித்து உதறித்தேகமுழுதும் போர்த்தும் அன்றுபெற்றதாயென்றுசொல்லவிருந்தா()

இருந்ததாயுமன்றீன்றவள்போலவேயிருதடங்கொங்கைபால்சொ
ரிந்தாள், அருந்துபாலகன்போலவேயிளவலுமருந்தியேவிதிவ
ழிபகன்றான், புரிந்தவன்டொடுமருகுறத்தழுவியே பொன்மு
டியுச்சிமோந்தன்பால், பரிந்துநானுமன் றனைவளர்த்தெடுத்தி
டப்பாக்கியஞ்செய்திலேனென்றாள் .......................... *

எ-து. இப்படியிருந்ததாயும் அன்றே பெற்றவள்போலேபருத்தஇரண்டு கொங்கைகளிலும் பால்சொரியநின்றாள் அதைபுசிக்கின்றஇளம்பிள்ளைபோலக் கர்ணனும்புசித்து விதிவழிநீங்கினான் மிகுந்த அன்புடனே பக்கத்திலே பொருந்தத்தழுவி பொன்முடியணியும் உச்சியைமோந்து அன்புடையவளாய்ப் பரிவுசெய்து நானும் அன்றுன்னைவளர்த்தெடுக்கப் பாக்கியஞ் செய்யவில்லையென்றாள்குந்திதேவி ()

வருகநீமகவா யிளைஞனாவுற நின் மலரடியன்பினுல் வணங்கி *
ஒருமையாய்மனமொத்தவேலைபுரிய வொருதனிச்செய்யகோ
லோச்சி, அப்செலாம்வந்துன் னடித்தலைதுவ வாண்மையயு

ஞ்செல்வமும்விளங்கக், குருகுலாதிபர்க்குங் குருசிலாய்வாழ்வு
கூர்வதேதடனெனக்குறித்தாள் ............................*

எ-து. புத்திரனே நீவரக்கடவாய் உன்தம்பிமாராகிய பஞ்சபாண்டவரும் உன்னுடைய மலர்போன்றபாதத்தைப் பத்தியினால்வணங்கி ஒருமித்து மனமொத்து ஏவல்செய்ய ஒப்பற்ற செங்கோலசெலுத்திராஜாக்களெல்லாம்வந்து கடைவாசற்படியில்நின்று வணங்க, ஆண்மையுஞ் செல்வமும் விளங்கக் குருகுலத்திலேயிருந்த அரசர்களுக்கெல்லாம் அரசனாகி வாழ்வையுடையது முறையையென்றுசொன்னாள் குந்திமாதேவி-எ-று. (௨௫௩)

பெற்றநீர்மகவன் பிலாமையேயாவந் திப் பெரும்பழிநாணிலேயா
விடுத்தீர், அற்றைநாட்டொடங்கு வென்னைபின்றளவு மாருயிர்
த்துணையெனக்கருதிக், வெற்றமா மகுடம் புனைந்தரசளித்துக்
கூடவுண்டரியதம்பியருங், சுற்றமானவருமென்னடிவணங்கத்
தேற்றமுமேற்றமுமளித்தான் ............................*

எ-து. என்னைப்பெற்ற நீர் பிள்ளையாசையில்லாமையோ அல்லாமல் பெரியபழிக்குநாணியோ விட்டுவிட்டீர் அன்றுதொடங்கியின்றளவுமென்னை உயிர்த்துணையாகநினைத்து வெற்றியுள்ள பெருமைபொருந்தியமுடிசூட்டி அரசளித்துக்கூடவுண்டு தன்னுடைய அருமையாகியதொண்ணூற்றொன்பது தம்பிமாரும் பந்துக்களும் என்னுடைய பாதத்தைவணங்கப் பிரகாசத்தையும் உயர்வையுங்கொடுத்தான்-எ-று.

மடந்தைபொற்றிருமே கலைமணியுகவே மாசறத்திகழுமேனாந்
து, விடந்தனிற்புரிந்து நாணயர்ந்திருக்க வெடுக்கவோகோக்க
வோவென்றான், இடம்படைத்திடுமி ராஜராஜனுக்குச் செருமு
னைச்சென்றுசெஞ்சோற்றுக், கடன்கழிப்பதும்வ யெனக்கினி
புகழுங் கருமமுமர்தருமமுமென்றான் ............................*

எ-து. குற்றமற்றுப் பிரகாசிக்கின்ற ஏகாந்தஸ்தானத்தில் அவன்பாரியினுடைய பொன்னிறத்தசெய்த அழகியமேகலைமணியுதிரச்செய்து அவன்வருதலைக்கண்டு நான்வருத்தப்பட்டுக்கொண்டிருக்க அப்போதுஎனக்குத் திடஞ்சொல்லி அந்தமணிகளைஎடுக்கவோ எடுத்துக்கோக்கவோவென்றான் அப்படிப்பட்ட மெய்மைபடைத்துள்ள அரசர்க்கரசனாகிய துரியோதனனுக்கு யுத்தமுகத்திற்போய்செம்மையாகிய சோற்றுக்கடன் கழிப்பதுவே இனி எனக்குக் கீர்த்தியுந் தொழிலுந் தருமமுமென்றான் கர்ணமகாராஜன்-எ-று. (௨௫௫)

பின்னையும்பற்பன் மொழிந்தபின்பலவும் பேசிலஸ்பூசலே
விளைந்து, துன்னியந்திக்க வென்னைநீரழைப்ப துன்மையாயு
ள்ளவாறுமாகி, வெஞ்சமைந்தனுமிப் பரிவுறுமைப்ப வீ

ன்றறத்துறந்தவன்றையிலும், அன்னைநெஞ்சழிந்தேயிருகணீ
ர்சொரியவலரிவாய்குளறிநொந்தழுதாள் ...... ............ *

எ-து. மறுபடியும் அனேகவார்த்தைகள்பேசிஇனிப்பலவார்த்தைகள் பேசியாவதென்ன யுத்தம்விளைந்திருக்கிறது என்னை இப்போது நீர் நினைத்துவந்தழைப்பது உண்மையா யுள்ளபடி சொல்லுமென்று கர்ணமகாராஜன் இத்தன்மையினுமேல சொல்லப்பெற்று ஆற்றிலே விட்ட அன்றையினும்மனமகிழ்ந்து இரண்டுகண்களிலும்நீர்சொரிய அலறி வாய்குளறி நொந்தழுதாள் குந்திமாதேவி-எ-று. (உருசு)

ஆண்டமாமகனுமிருகணீர்துடைத்தவ்வன்னையைப்பன்முறை
தேற்றி, மூண்டவல்வினையின்பயனலாதியார்க்கு முயர்ச்சியால்
வருவதொன்றுண்டோ, வேண்டியாவையுமே தருகுவேனிந
ம்வேண்டியவேண்டுகவென்னப், பாண்டுவின்றிருமா மனைவி
யுமதற்குப் பண்பினாலின்னபகலித்தாள் ........................ *

எ-து. கர்ணனாகிய புத்திரனும் இரண்டுகண்களினின்றும் வருகின்ற நீரைத்துடைத்து அந்தத்தாய்க்குப் பலதரம்தேறுதல்சொல்லிமூண்டிருக்கின்ற தீவினைப்பயனல்லாமல் யார்க்கும் முயர்ச்சியினாலேவருகின்ற காரியமொன்றுண்டோ நீர் என்னைகேட்கிறீரா அவையெல்லாந்தருவேன் நீர்விரும்பியதைக்கேளுமென்றுசொல்லப் பாண்டுமகாராஜனுடைய மனைவியான குந்திமாதேவியும் அதற்கு இனியகுணத்தோடு இதுவேண்டுமென்றுசொன்னாள்-எ-று. (உருஎ)

பார்த்தன்வெஞ்சமரினின்னுடன்மலைந்தாற் பகைப்பெரும்பா
ந்தளம்பகழி,கோத்தலும்பிழைத்தால்மறித்துநீவிடுத்துக்கோ
றலென்றொருவரங்குறித்தாள், வாய்த்தமற்றவர்களிளைஞரொன்
றவாமலையலென்றொருவரங்குறித்தாள், மூத்தவன்காதலிளைஞ
ர்தம்பொருட்டான் மொழிந்தவைகேட்டிவைமொழிந்தான் *

எ-து. அர்ச்சுனன் வெவ்வியயுத்தத்தில் உன்னுடனேயுத்தஞ்செய்தால்பகையையுடைய பெரிய நாகாஸ்திரத்தைக்கோத்துத் தொடுத்தவளவில் தப்பினால் இரண்டாந்தரமும்விட்டுக் கொல்லாதேயென்று ஒருவரங்கேட்டாள்- மற்றபாண்டவர்களுந் தம்பிமாரென்று அவருடனே போர்செய்யாதேயென்று ஒருவரங்கேட்டாள் மூத்தவனாகியகர்ணன் தம்பிமார்பொருட்டுத் தாய்சொன்ன வைகளைக்கேட்டு இவைசொல்லுவான்-எ-று. (உருஅ)

தெறுகணையொன்றுதொடுக்கவுமுனைந்துசெருச்செய்வோன்செ
ன்னியோடிருந்தால், மறுகணைதொடுப்பதாண்மையோவலியோ
மானமோமன்னவர்க்கறமோ,உறுகணையொற்றைபார்த்தன்மே

ந்சொருடுப்பவெழுந்துமேளாருய்வொன்றுனாத்தான், தறுகணெல்ல
வர்க்குந்தறுகணுனவர்க்குந்தண்ணளினிறைந்த செங்கண்ணான் *
எ-று. சொல்லப்பட்டபாணம் ஒன்று தொடுக்கவும் எதிரிட்டியுத்தஞ்
செய்வோமாகிசகடனே தப்பியிருந்தால் மறுகணை தொடுப்பதாண்மை
யோவல்லமையோமானமோராஜாக்களுக்குத்தருமமோ ஒரு கணையே
அர்ச்சுனன்மேல்விடுவேன்மற்றபேர்பிழைப்பார்களென்று சொன்
ன் அவன்யாரென்றால் நல்லவர்களுக்கும்பொல்லாதவர்களுக்குந்தண்
ணளிநிறைந்தசிவந்தகண்களையுடையகர்ணமகாராஜன் எ-று. ()

பெருவரமிரண்டும்பெற்றபின்றன்னைப்பெற்றதாயினைக்காக்கு
வித்துக், தருவரமெனக்குமிரண்டுலகிற் சராசரங்களுக்கெலா
ந்தாயீர், வெருவருமமரிற்பார்த்தனுலடியேன் வீழ்ந்தபோ தவ
னிபரிய, மருவருமுலைப்பாலெனக்களித்துந்தம்மகனென்னும்
வாய்மையுமுரைப்பீர்............ *

எ-று. பெரியவரமிரண்டும்பெற்றபின்பு தன்னைப்பெற்றதாயைக்கை
குவித்துவணங்கிநீயெனக்குத்தருகின்றவரங்களிரண்டுண்டுஉலகத்திலே
சராசரங்களுக்கெல்லாந்தாயானவரே அஞ்சத்தக்கயுத்தகளத்தில் அர்
ச்சுனனாலேநான்வீழ்ந்தபோது இவ்வுலகத்தைடோருப்ராஜாக்களறிய
முலைப்பாலெனக்குக் கொடுத்துநான் உம்முடையபிள்ளையென்கின்ற
உண்மையையுஞ் சொல்லிரென்றவாறு (உகூ)

உய்வருந்திறல்வெம்போர்முடிப்பளவு முமக்குநான் மகனென்னு
ந்தன்மை, யைவருமறியாவண்ணநீர் காப்பிரல்லர் தக்கவர்சிறித
றியில், மைவருங்கடற்பாரனைத்தையுமெனக்கேவழங்குவர்வழங்
கிலுல்பாவென், கைவருந்துணைவன்றனக்கலால்வழங்கேன்கடை
ப்பிடிக்கருமமீதென்றான்............ *

எ-று. பிழைப்பதற்கரிய வெவ்வியயுத்தமுடிகிறவரைக்கும் உமக்கு
நான்பிள்ளையென்கிறதன்மையைப் பஞ்சபாண்டவர்களறியாதவிதம்
நீர்காத்தல்வேண்டும், அல்லாமல் அவர்கள்சிறிதாவதறிந்தால்கருங்கடல்
சூழ்ந்தபூமியெல்லாம் எனக்கேகொடுப்பார்கள் கொடுத்தால்யானெ
ன்னுடையதுணைவனாகியதுரியோதனனுக்குக் கொடுப்பேனேயல்லா
மல்வேறொருவருக்குங்கொடுக்கமாட்டேன் இந்தக்காரியத்தை மறவா
தேயென்றான்கர்ணமகாராஜனென்றவாறு, (உகக)

என்றலுமதுகேட் டீன்றதாயொக்க மென்றுகொண்டிவ்வா
நேர்ந்து, வன்றுயர்மேன்மேல் வளரயான்றளரா வகையுமிருண
க்குமுற்பெயர்வ, தென்றிலியெனத்தன் கண்கணீர்சொரிய
வினைத்துணைந்தழுதழுகிரங்கி, நின்றதன்மகனைத்தழீஇயகனி
ருந் தியாதனிருந்துழிசென்றாள்............ *

எ-து. அப்படி சொன்னவளவில் அதுகேட்டுப் பெற்றதாயாகிய குந்திமாதேவியுஞ் சரியென்று இந்தவரங்களிரண்டையுங்கொடுத்து வன்மைபொருந்திய தக்கம் மேலுமேலுமுண்டாக இனியான் தளராதி விதம் உபிருனக்குமுன்னே நீங்குவதென்று கண்களிலிருந்து நீர் சொரிய நைந்துநைந்து அழுதழுது இரக்கமுற்றுநின்ற தன்பிள்ளையைத் தழுவிக்கொண்டு அங்கே நிறுத்திவிட்டு ஸ்ரீகிருஷ்ணபகவானிருந்தவிடத்திற்குப் போனாள்-எ-று. (உகூஉ)

கண்ணனுக்குந்தி கர்ணனோடுரைத்த கருத்தெலாந்திருத்தமாகக்
கேட்டு, எண்ணமுமுடிந்ததெனமகிழ்ந்தந்த வணங்கையவ்வில்
லிடையிருத்தித், தண்ணளியுடன்றன் பின்வருநிருபர் தம்மை
யுமுறைமுறைநிறுத்திப், புண்ணியமர்தடந்தேர் மீதுகொண்ட
ன்றே பாண்டவருறைநகரடைந்தான் ..................... *

எ-து ஸ்ரீகிருஷ்ணதேவரும் குந்திமாதேவியானவள்கர்ணனோடு சொல்லிய கருத்தையெல்லாம் திருத்தமாகக்கேட்டு நம்முடைய எண்ணமெல்லாம் நிறைவேறியதென்று மனமகிழ்ந்து அவளை அந்த வீட்டிலேநிறுத்திவிட்டுகுளிர்ந்ததயவுடன்பின்னேவந்த அரசர்களையும் அங்கேநிறுத்திவிட்டு உறுப்பமர்ந்தவிசாலம்பொருந்திய தேரின்மேலேறிக்கொண்டு அப்பொழுதே பாண்டவர்களிருக்கின்ற நகரத்தையடைந்தார் ஸ்ரீகிருஷ்ணதேவரென்றவாறு. (உகூங)

தூதுபோயரவக்கொடியனோடுறுதி சொன்னதுமறுத்தவன்சினந்
து, மோதுபோர்புரியத்துணிந்ததும் விதுரன்முரிவில்லிறுத்த
ஞாங்கர்க்குப், போதுபோர்ஞ்சம்விளைத்ததுங்கன்னன்புரந்தர
ற்கீந்ததும் பயந்த; மாதுபோய்வரங்கள்பெற்றவையொழியமற்
றெலாமைத்துனர்க்குரைத்தான் ............................. *

எ-து தூதுபோய்சர்ப்பக்கொடியுடைத்த துரியோதனனுக்கு உறுதி சொன்னதும்-அதை அவன்மறுத்துக்கோபித்து மோதப்பட்டயுத்தத்துக்குச்சம்மதித்துத்துணிந்ததும் - விதுரனைவன்வலிமையுள்ளதன் வில்லையொடித்ததும்-இராத்திரியில்நிலவறை வெட்டித்தனக்குவஞ்சஞ்செய்ததும் - கர்ணன் கவசகுண்டலங்களைத் தேவேந்திரனுக்குக் கொடுத்ததும்-பெற்றகுந்திமாதேவிகர்ணனிடத்திற்குப்போய்ப் பெற்றவரங்கள்தவிரமற்றவைகளெல்லாம்மைத்துனர்களாகியபஞ்சபாண்டவர்களுக்குச் சொல்லினார் ஸ்ரீகிருஷ்ணஸ்வாமியென்றவாறு, (உகூச)

ஸ்ரீகிருஷ்ணஸ்வாமிதூது

முற்றிற்று.